பக்கங்கள்: 20

விலை: 30.00

THEEMPUNAL

தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:40 29.01.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



இடம்மாறத் துடிக்கும் சிங்கள இனவாதம்

நிக்ஸன்

பக்கம் 02



உடலின் சுத்திகரிப்புத் தொழிற்சாலை கல்லீரல்

பைஷல் இஸ்மாயில்

பக்கம் 09

# தொடாமலே ஷொக் அடிக்கும் மின்சாரம்



வர்மா

இலங்கையில் இன்று அனைவரும் உச்சரிக்கும் ஒற்றைச் சொல் மின்சாரம். எமது ஊருக்கு மின்சாரம் வருமா என ஏங்கித் தவித்த காலம் போய், இன்று மின்வெட்டு இருக்கா இல்லையா என்ற விவாதம் வீடுகளில் ஒலிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சொல்லாமல் கொள்ளாமல் மின்சாரம் தடைப்பட்டு பின்னர் அதற்கான காரணத்தை அரசாங்கம் அறிவிப்பதும் வாடிக்கையாகி விட்டது. மின் விநியோகம் சீர் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் மின் துண்டிப்பு என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்ற செய்தியைப் படித்து நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கிடையில் மீண்டும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இலங்கையை நான்கு வலயங்களாகப் பிரித்து இரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஒரு மணித்தியாலமாக இருந்த மின் துண்டிப்பு மேலும் ஒரு மணித்தியாலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பலர் ஒரு மணிநேர மின்வெட்டால் பாதிக்கப்படுகிறார்கள். மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்ற நிலையைப் பலர் தமக்குள் ஏற்படுத்தியுள்ளனர். மின்சாரப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது. நகரத்தில் உள்ள வீடுகளில் இருந்த ஏசி வசதி இப்போது ஊருக்குள்ளும் வந்துள்ளது.

இந்த நிலையில் ஒவ்வொரு நாளும் சுமார் நான்கு மணிநேர மின்சாரம் துண்டிக்கும் நிலை ஏற்படலாமென எரிசக்தி அமைச்சர் உதயகம்பன்வில தெரிவித்தது உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மார்ச் மாதத்துக்குள் பெரியளவில் கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டால் நான்கு மணிநேர மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் எதிர்வு கூறியுள்ளார். மின்சாரப் பாவனை அபரிமிதமாக அதிகரித்துள்ளது. ஆனால், மின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது



தற்போது மொத்த மின் உற்பத்தியில் 20% நீர் மின் நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன. “சில மாதங்களுக்கு முன்பு, நீர் மின் உற்பத்தி 70% ஆக இருந்தது. பின்னர் 60% ஆகவும், அதற்கு பின்னர் 50% ஆகவும், தற்போது 37% ஆகவும் உள்ளது. சில நாட்களுக்கு பின்பு மின் உற்பத்தி இன்னும் 5% வரை குறையும் சாத்தியம் உள்ளது. சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உலை எண்ணெய் பற்றாக்குறையால் தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது குறைந்த மழையினால் நீர்மின் உற்பத்தியும் சவாலாக உள்ளது. ரன்தெனிகல நீர்த்தேக்கம் ஏற்கெனவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், கொத்மலைக்கும் கடந்த வாரம் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பூரணமான மின்சாரம் வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

சுமார் 20% மின்சாரம் நீர்மின்சாரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது மற்றும் காற்றாலை மூலம் சுமார் 1500 மெகாவாட் மின்சாரம் பெறுகிறோம். எமக்கு நாளாந்தம் 2800,000 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது 1300 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 23) முதல் நோரோச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் 3 ஆவது அலகு மீண்டும் இயங்கவிருந்த போதிலும், அது ஜனவரி 28 ஆம் திகதியே மீண்டும் செயற்படும் என இலங்கை மின்சார சபை அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே 100 மெகாவாட் (மெகாவாட்) திறன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உலை எண்ணெய் பற்றாக்குறையால் தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது. தேசிய மின்வாரியத்திற்கு 60 மெகாவாட் திறனை வழங்கிய பேரிகையில் பொருத்தப்பட்ட மின் உற்பத்தி நிலையம் திங்கட்கிழமை (ஜனவரி 24) முதல் செயல்படுவதை நிறுத்தியது. மேலும், களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் மேலும் நான்கு நாட்களுக்கு இயங்க முடியும். குறைந்த மழைவீழ்ச்சியினால் நீர்மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மே மாதம் வரை இலங்கையில் போதிய மழை பெய்யாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு சிலிண்டரால் ஏற்பட்ட விபத்துகள் காரணமாக மாற்று வழியை மக்கள் நாடினார்கள். மின்சாரத்துக்கான மாற்று வழிக்கு மக்கள் இன்னமும் தயாராக இல்லை. நுரைச்சோலை அனல்மின் நிலையம் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தொடர்ச்சியான செயலிழப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறான ஒரு செயலிழப்பு ஏற்படும் போது பொறியியலாளர்கள் அதை குளிர்விக்க சுமார் 20 நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. வறட்சி ஏற்படும் காலங்களில் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறையும் போது நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும். மழைக்காலத்தில் 2016 ஆம் ஆண்டு சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் திட்டம் வெற்றியடையவில்லை என்று சி.ஏ.பி தொழிற்சங்க தலைவர் ரஞ்சன் ஜெயலால் கருத்து தெரிவித்தார். மற்றொரு மாற்று, குறிப்பாக உலர் வலயத்தில் அமைந்துள்ள வீடுகளில் கூரைகளில் சோலார் பேனல்களை நிறுவுவது. இவர்களுக்கு கடன் வழங்கலாம். சூரிய ஒளி மின்சாரத்தை இரவில் சேமிக்கும் தொழில்நுட்பம் இதுவரை நம்மிடம் இல்லை. பகல் நேரத்தில் சூரிய சக்தியை உபயோகிக்கலாம், இரவில் நீர் மின்சாரத்தைப் பயன்படுத்தலாம்.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை ஆற்றல் தன்னிறைவு பெற்ற நாடாக மாறுவதை இலக்காகக் கொண்டால் அத்தகைய திட்டங்கள் நடைமுறையில் இருக்க வேண்டும். 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுதந்திர வர்த்தக வலயங்கள் தோன்றிய பின்னர் மின்சாரத்திற்கான தேவை பன்மடங்கு அதிகரித்தது. மாற்று வழிகளுக்குச் செல்ல ஏராளமான வாய்ப்புகள் இருந்த போதிலும், நாங்கள் அவற்றை புறக்கணித்தோம்.

“நாம் இப்போது மாற்று வழிகளுக்கு செல்லவில்லை என்றால், தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் இல்லாமல் போகும், மேலும் அவை செயற்பாடுகளை நிறுத்த வேண்டியிருக்கும். எரிபொருள் மின்சாரத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படாமல், போக்குவரத்து மற்றும் பிற துறைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.



இந்தியா போன்ற நாடுகள் பெரிய அளவில் எண்ணெய் சுத்திகரிப்பு செய்கின்றன. இப்போது திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணை அவர்களுக்கு எழுதப்பட்டதால், சபுகஸ்கந்த மற்றும் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அரசாங்கம் இந்தியாவின் உதவியை நாடலாம். அப்படியானால் இந்தியா நமக்கு அதிக விலையில் மின்சாரம் வழங்கும், குறைந்த விலையில் விநியோகிக்க வேண்டும், மேலும் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும்.

உலகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கி நகர்ந்தாலும், இலங்கையிடம் இன்னும் சரியான திட்டம் இல்லை என எரிசக்தி நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உலகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கி நகர்ந்தாலும், இலங்கையிடம் இன்னும் சரியான திட்டம் இல்லை என எரிசக்தி நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். நிலக்கரி மின்சக்திக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்றுத் தொழில்நுட்பங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இலங்கை முழுமையாகச் சார்ந்திருக்க முடியுமா என்பது குறித்து ஆராய வேண்டும்.

2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்கவை மூலம் 70% உற்பத்தி செய்து 2050 ஆம் ஆண்டிற்குள் முழுமையாக கார்பன் நியூட்ரல் ஆக வேண்டும் என்பதே அரசின் கொள்கை.

இந்த மாற்று வழிகள் உருவாக்கப் படும் விகிதம் மிகவும் மெதுவாக உள்ளது. அரசாங்கம் நிர்ணயித்த இலக்கை அடைய போர்க்கால வழியில் பசுமை உற்பத்திக்கான இந்த மாற்று வழிகளை அதிகரிக்கப் பயனுள்ள வழிகளை நாம் எடுக்க வேண்டும். ■

# இடம்மாறத் துடிக்கும் சிங்கள இனவாதம்

**நிக்ஸன்**



ஆட்சி மாற்றம் ஒன்றே இலங்கையில் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்குமென்ற பொய்மைக்குள் 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் உட்படப் பலரும் விழுந்தனர்.

17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி கவிழ்ந்ததால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பிரச்சினைகள் உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளும் தீர்ந்து வடக்குக் கிழக்கு அடங்கலாக இலங்கைத்தீவு சுபீட்சமடையுமென்ற பிரச்சாரமும் அன்று செய்யப்பட்டிருந்தது. ஆனால், சந்திரிகா பதவியேற்றுச் சில மாதங்களிலேயே மீண்டும் போர் மூண்டது.

அவ்வாறே 1999 ஆம் ஆண்டும் ஆட்சி மாற்றம் வரும் என்ற மற்றுமொரு பொய்யான நம்பிக்கை இருந்தது. ஆனாலும் மீண்டும் சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய அரசாங்கம் பதவியேற்றது. 113 என்ற சாதாரண பெரும்பான்மை கூட இல்லாததால் சந்திரிகா அரசாங்கம் தடுமாறியது. ஆதரவு கொடுத்த முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கட்சிக்குச் செல்ல, அரசாங்கம் பதவி கவிழ்ந்தது. இதனால் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது.

> **2024 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்ற சிங்களக் கட்சிகளின் தயார்படுத்தலில் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட முற்படுவதை முற்றாக நிறுத்த வேண்டும்.**



இங்குதான் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் விரும்பிய ஆட்சி மலர்ந்தது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்தது. 1978 ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை 17 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 2001 ஆம் ஆண்டு புனிதப்படுத்தப்பட்டது.

1994 ஆம் ஆண்டு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள் உட்பட 62 சதவீத வாக்குகளினால் அமோக வெற்றியடைந்த சந்திரிகாவின் அரசாங்கம் 2001 ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது. ஆனால் சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதியாகவே பதவி வகித்திருந்தார். இந்தவொரு நிலையில், 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டோடு ஆரம்பித்த சமாதானப் பேச்சுக்களில் சந்திரிகா ஜனாதிபதி என்ற முறையில் ஒப்பாசாரத்துக்காக ஆதரித்திருந்தார்.

இருந்தாலும் ரணில் தலைமையிலான அரசாங்கம் அதனை முன்னெடுப்பதால் அந்தச் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றங்கள் மற்றும் வடக்குக் கிழக்கில் செயற்படுத்தப்பட வேண்டிய உடனடி வேலைத் திட்டங்களுக்கு சந்திரிகா இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தார்.

இதனை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் ஒரு சாக்குப்போக்கா எடுத்து தமிழர்களின் அரசியல் தீர்வு மற்றும் இயல்பு நிலைமைகளை ஏற்படுத்தும் விடயத்திலும் இழுத்தடிப்புச் செய்தது.

இந்த இழுபறியின் உச்சமே 2003 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களின் பொறுப்புகளைச் சந்திரிகா ஜனாதிபதி என்ற முறையில் ரணில் அரசாங்கத்திடம் இருந்து பறித்தெடுத்தார்.

இதனால் அன்று கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி மற்றுமொரு பாராளுமன்றத் தேர்தலுக்கு வழிசமைத்தது. 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி, ஜாதிக கெல உறுமய உள்ளிட்ட சிங்கள இனவாதக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டுச் சமாதானப் பேச்சுக்களை நிறுத்தப் போவதாகச் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனால் மேற்குலகம் விரும்பியிருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கவிழ்ந்து மீண்டும் எதிர்க் கட்சியாக மாறியது. 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டார். அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ சந்திரிகாவுடனான பெரும் இழுபறிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். (மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அப்போது சந்திரிகா விரும்பியிருக்கவில்லை)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வேண்டுமென்பதில் அப்போது அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் விரும்பியிருந்தன. இந்தியாவும் ஆதரவு வழங்கியிருந்தது. ஆனால் துரதிர்ஸ்டவசமாக மகிந்த ராஜபக்ஷ மயிரிழையில் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேலும் பலம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கரு ஜயசூரிய தலைமையில் 17 உறுப்பினர்கள் மகிந்த தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றனர்.

2006 ஆம் ஆண்டு மீண்டும் போர் ஆரம்பித்தவொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் பல உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்தனர். இதனால் பலம்பெற்ற மகிந்த அரசாங்கம் துணிவோடு போரை நடத்தியது. ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மேலும் பலவீனமானது. கட்சிக்குள் தலைமைத்துவப் பிரச்சினை கூட எழுந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் போர்க்குற்றங்கள், இன அழிப்பு என்ற குற்றச்சாட்டுக்களைக் கடந்து. மகிந்த அரசாங்கத்துக்கு எதிராக அதிகாரத் துஸ்பிரயோகம், மனித உரிமை மீறல் என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜே.வி.பி மற்றும் சில சிறிய சிங்களக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சியோடு சேர்ந்து பயணிக்க ஆரம்பித்தன.

இதனால் போரை வெற்றிகரமாக நடத்தி முடித்தவரென அப்போது சிங்கள மக்கள் மத்தியில் புகழ் பாடப்பட்டு ஓய்வுபெற்றிருந்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறக்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு ஆதரவு வழங்கியமைதான் அன்று ஆச்சரியமாக இருந்தது. மேற்குலக நாடுகளும் இதனை மறைமுகமாக வரவேற்று ஆதரவு வழங்கியிருந்தன. ஆனால் எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் நிகழவில்லை.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் பிளவுகள் எழுந்தன. இலங்கையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் ஏற்பட்டுள்ள மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்க உரிய தலைமை அவசியம் என்ற அடிப்படையிலேயே பிளவுகளும் ஏற்பட்டிருந்தன.

ஆனால் போரால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழச் சமூகத்துக்கு உடனடியாகத் தேவைப்படும் அடிப்படை உதவிகள் மற்றும் நிரந்த அரசியல்தீர்வு பற்றியதாக அந்தப் பிளவு இருக்கவேயில்லை. போரின் பக்க விளைவுகளான மீள்குடியேற்றம், அரசியல்

(13 ஆம் பக்கம் பார்க்க...)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# தமிழ்த் தலைமைகள் எதை நோக்கிப் பயணிக்கின்றன

இந்தியாவால் இலங்கை மீது அவசர அவசரமாக வலிந்து திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் பேசுபொருளாகி உள்ளது. அன்றைய இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன அரைகுறை மனதுடன் ஏற்றுக்கொண்டார். சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நின்று கடுமையான எதிர்ப்பைத் வெளிப்படுத்தின. 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு ஆதரவானது, சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற கருத்து முன்வைக்கப்பட்டதால் சிங்கள மக்கள் சீற்றமடைந்தனர்.

இந்தியா என்ன கொடுத்தாலும் அது சிறப்பானதாக இருக்கும் என்ற எண்ணத்தில் தமிழ்க் கட்சிகள் தீர்வு கிடைக்கப்போவதாக எண்ணி தங்கத் தாம்பாளத்துடன் காத்திருந்தன. விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய இயக்கங்கள் அனைத்தும் கண்ணை மூடிக்கொண்டு இந்தியாவை நம்பின.

இதுவரை காலமும் கோமா நிலையில் இருந்த 13 க்கு தமிழ்த் தலைமைகள் ஒட்சிசன் கொடுத்து உசுப்பேற்றி விட்டுள்ளன. 13 க்கு ஆதரவான தமிழ்க் கட்சிகள் கொழும்பில் பிரபல ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடின. முஸ்லிம் தலைவர்களையும், மலையகத் தலைவர்களையும் துணைக்கு அழைத்தன. அவர்கள் வந்து கலந்து பேசிவிட்டு இது சரிப்பட்டு வராது எனச்சொல்லிவிட்டு வெளியேறி விட்டனர்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையில் எதுவித முன்னேற்றமும் இல்லை. தேக்க நிலையே காணப்படுகிறது. சில அரசியல் தலைவர்களினதும் புலம் பெயர்மக்களினதும் செயற்பாட்டால் அரசியல் மீதான ஒரு வித வெறுப்பு நிலை மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. தமிழ்த் தேசியத்தை வைத்து நடத்தும் அரசியல் சதுரங்கத்தில் தமிழ் மக்கள் பலிக்கடாவாகி விட்டனர். இவை எல்லாவற்றையும் தெரிந்தும் எதுவும் செய்ய முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

விலைவாசி உயர்வு அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு கட்டுப்பாடு, எரிவாயு, எரிபொருள், மின்சாரம் போன்ற நாளாந்த தேவைக்குரியவற்றைத் தேடி மக்கள் அலைகின்றனர்.

நல்லாட்சியைத் தந்த நல்லவர்களே அதனை முடிவுக்குக் கொண்டுவந்தனர். அதன் பின்னர் சிங்கள வாக்கு வங்கியால் ராஜபக்ஷ அரசாங்கம் அரியணை ஏறியது. சிறப்பான ஆட்சியைக் கொடுக்கலாம் என்ற ஆசையுடன் வந்தவர்களுக்கு கொரோனா குறுக்காலை வந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது. அதனை ஒழுங்குபடுத்தி நாட்டை நிமிர்த்துவதற்கிடையில் ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்துவிடும்.

அரசாங்கத்துக்கு எதிராக அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர்.

பொருளாதாரச் சரிவு ஒருபக்கம், மக்களின் அன்றாடப்பிரச்சினை இன்னொரு பக்கம், எதிர்க் கட்சிகளின் அரசியல் எதிர்ப்பு ஆட்சிக் கதிரையை ஆட்டிப் பார்க்கிறது. நாட்டையும், மக்களையும் மீட்பதற்குரிய சூத்திரம் தெரியாமல் அரசாங்கம் தடுமாறுகிறது.

நாட்டின் அரசியல் நிலைமையையும், யதார்த்தத்தையும், மக்களின் மனநிலையையும் புரியாது சில அரசியல் தலைமைகளும், புலம் பெயர் அமைப்புகளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளால் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. 2009 ஆம் ஆண்டில் இருந்துகொண்டு கனவு காணும் புலம் பெயர்ந்த அமைப்புகள் இங்குள்ள மக்களின் மன நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. இலங்கையில் வாழும் தமிழ் மக்களைப் புறம் தள்ளி மேற்கொள்ளும் அரசியல் நகர்வுகள் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

சிங்களக் கடுப் போக்கு உள்ளவர்களால் பாதுகாக்கப்படும் அரசாங்கத்தை நெருங்க முடியாது தமிழ்த் தலைமைகள் தவிக்கின்றன. 2009 இல் இருந்து 2019 வரையான காலத்தில் விட்ட அரசியல் தவறுகளை தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் செய்யக்கூடாது. தமிழ்க் கட்சிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவிட்டது. சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் நின்று தேர்தலைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டால் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சிக்கல் நிலை ஏற்படும். தமிழ்க் கட்சிகளுக்குத் தலைவர்கள் இருக்கிறார்கள், கடிதத் தலைப்புகள் இருக்கின்றன. தொண்டர்களும் ஆதரவாளர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. கிராமங்கள் தோறும் அங்கத்தவர்கள் உள்ள கட்சிகளைக் காண்பது அரிது. கடந்த தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் மொத்தமாக 660 வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டதில் இருந்து தமிழ் தேசிய அரசியலின் வங்குரோத்து நிலையை அறியக்கூடியதாக உள்ளது. மக்களின் வாழ்வாதார நிலையை உயர்த்துவதற்காக தமிழ்க் கட்சிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் எவை என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை.

13 க்குப் பின்னால் தமிழ்த் தலைவர்கள் பலர் அணிவகுத்து நிற்கின்றனர். 13 ஐ தவறவிட்ட கவலையில் சில தலைமைகள் பரிதவிக்கின்றன. இதற்கிடையில் 13 க்கு எதிராக வீராவேசமாக தனி ஒருவனின் பின்னால் சிலர் நிற்கின்றனர். இவர்கள் செய்யும் அரசியல் அவர்களுக்கானதா, எமக்கானதா எனத் தெரியாமல் தமிழ் மக்கள் குழம்பியுள்ளனர். ■

# அரசாங்கத்தை அசிங்கபடுத்தும் ஊழல் பெருச்சாளிகள்

ஆட்சி மாறலாம், காட்சி மாறலாம், அமைச்சர் மாறலாம் ஆனால் ஊழல் செய்பவர்கள் மாறுவதில்லை. அரசாங்கம் மாறும்போது வாய்பாடு போல ஊழல் புகார்களை அடுக்குவார்கள். கடந்தகால ஊழலை விசாரிப்பதற்கு ஆணைக்குழுக்கள் கோலாகலமாக அமைக்கப்படும். காலப்போக்கில் மக்கள் அதனை மறந்து விடுவார்கள். ஊழலை விசாரிப்பதற்காக அமைக்கப்படும் விசாரணைக்குழுக்கள் காணாமல் போவதை யாரும் கண்டுகொள்வதில்லை.

கோட்டபாய ஜனாதிபதியானதும் ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனக் கருதப்பட்டது. ஊழலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்தார். சில நிறுவனங்களிலும், திணைக்களங்களிலும் ஊழல் தலை விரித்தாடுகிறது. அவற்றை இனங்கண்டு தடுப்பதற்குரிய நடவடிகைகளுக்கு ஜனாதிபதி முன்னுரிமை கொடுக்கிறார். கைதிகளைத் திருத்தும் சிறைச்சாலைகளில் முறைகேடுகளும், ஊழலும் கலந்து இருப்பதை திடீர் சோதனைகள் மூலம் அறிய முடிகிறது. சிறைச்சாலையை தூய்மைப்படுத்துவதற்காக ஜனாதிபதி புதிய படை அணி ஒன்றை உருவாக்கி உள்ளார்.

சிறைச்சாலைகளில் நடைபெறும் ஊழல் மற்றும் முறைகேடுகளைச் சமாளிக்க முன்னாள் முப்படை வீரர்களை உள்ளடக்கிய 500 பேர் கொண்ட “ஸ்பீட் படையணி” (SPEAT Force) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ், தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு இணங்க, SPEAT Force என்ற படையணி சிறைத்துறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை “Sri Lanka Prisons Emergency Action and Tactical Force” (SPEAT Force) என்ற பெயரில், இதன் முதல் குழுவின்194 பேர் நான்கு மாத நீண்ட பயிற்சிகளை முடித்து அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இருந்து வெளியேறியுள்ளனர்.

சிறைக் கைதிகளைக் கையாளும் போது சுய ஒழுக்கத்துடன் வலுவூட்டப்பட்ட மனிதாபிமான அணுகுமுறையுடன் இந்தப் படையினர் தமது பணிகளை மேற்கொள்வர்கள் எனவும், சிறைத் தண்டனை முடிந்து மீண்டும் சமூகத்திற்குள் நுழையும் முன், கைதிகளைப் பயனுள்ள குடிமக்களாக மாற்றுவது இந்தப் படையணியின் கடமையாகும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வங்கிக் கணக்கில் இருந்து பல மில்லியன் ரூபாவை பிரதமரின் செயலாளர் மோசடி செய்த விவகாரம் சாமானியர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போதே அவர் செயலாளராகச் செயற்பட்டார். மோசடி செய்தவருக்கு எதிராக உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




ஊழல், மோசடிகளைக் கட்டுப்படுத்தினாலும், முற்றாக ஒழிக்க முடியவில்லை என்பதால் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக சட்டத்தரணி பிரேமச்சந்திர ஏப்பா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றத்தைப் பெற்றுக்கொடுக்க மூன்று முதல் ஆறு லட்சம் ரூபாய் வரை இலஞ்சமாகப் பெற்றமை சம்பந்தமாக அமைச்சர் ஒருவர் மீது பாரிய குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜெயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் மிகப் பெரிய ஊழல், மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ இணையத்தள வலையெளித்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளார்.

பொருட்கள் சேவைகள் மீதான வரிவிதிப்பு தொடர்பாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற புதிய நகல் சட்டமூலம் ஊழல்மோசடிகளுக்கும் நிதிநெருக்கடிகளுக்கும் வழிவகுக்குமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் எச்சரிக்கை விடுத்துள்ளர். இந்த நகல் சட்டமூலத்தைச் சட்டமாக்கி அதன் மூலம் நிதியமைச்சர் தமக்கு நெருக்கமான வர்த்தகர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் ஆகவே இந்த நகல் சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றை நாடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இலங்கைத்தீவு ஏற்கெனவே மிகமோசமான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இவ்வாறான சட்டமூலங்கள் மேலும் பல ஆபத்துக்களை உருவாக்குமென்றும் கபீர் காசிம் கூறினார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நெருக்கமானவர்கள் மீது ஊழல் புகார்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, டொலர் பற்றாக்குறை, மின் துண்டிப்பு என்பனவற்றால் அரசாங்கம் தடுமாறுகிறது. இந்த நிலையில் ஊழல் புகார்களும் அரசாங்கத்தை அசைத்துப் பார்க்கிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் மோசடி தடுப்புக் குழு அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பாக மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அன்றைய பிரதமரின் அலுவலகத்தின் கீழ் இயங்கிய ஊழல் மோசடி தடுப்புக்குழு பல சம்பவங்களை விசாரித்தது. இறுதியில் அதற்கு என்ன நடந்தது, விசாரணை அறிக்கைகள் எங்கு போயின போன்ற கேள்விகளுக்குப் பதில் இல்லை. இன்றைய ஊழல் புகார்கள் அடுத்து வரப்போகும் தேர்தலில் எதிரொலிக்கும் மக்கள் அதனைக் கடந்து போவார்களா இல்லையா என்பது தேர்தல் முடிவில் தெரியவரும். ■



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# சகல மதத்தவரும் வணங்கும் சிவனொளிபாதமலை

இயற்கை அன்னையின் பிறப்பிடமான மலை நாட்டின் அற்புதமான எழில் கொஞ்சும் காட்சியைக் காண்பதற்கு சிவனொளிபாதமலையே சிறந்த இடமாகும். சிவனொளிபாதமலை பக்திக்கும், இயற்கை அழகுக்கும் மட்டும் பிரசித்தி பெறவில்லை. மாறாகப் பல ஆறுகளின் 'நதி மூலமும்' இந்தச் சிவனொளிபாதமலையில்தான் என்று கூறுவதில் தப்பில்லை. இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கை, களுகங்கை, களனிகங்கை உள்ளிட்ட பல ஆறுகள் ஊற்றெடுப்பது இந்த மலையிலிருந்துதான்.

இலங்கையிலுள்ள முக்கிய நான்கு மதத்தவர்களும் பொதுவாக வழிபடுகின்ற புனிதத் தலமாக சிவனொளிபாத மலை திகழ்கிறது. அங்கே இருக்கின்ற பாதடித்தடம் தொடர்பாகப் பல்வேறுபட்ட மத நம்பிக்கைகள் காணப்பட்டாலும், இலங்கையிலுள்ள யாத்திரிகள் இறை தரிசனத்தை எதிர்பார்த்து அங்கே செல்கின்றனர்.

சிறப்பு மிக்க சிவனொளிபாத மலையை இலங்கை வாழ் பௌத்தர்கள் புத்தரின் பாதம் அங்கே பதிந்துள்ளதால் ஸ்ரீபாத என்றும், இந்துக்கள் சிவனொளிபாத மலை என்றும், கிறிஸ்தவர்கள் அட்மஸ்பீக் என்றும், முஸ்லிம்கள் பாவாத மலை என்றும் வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர்.

இந்த மலை சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக்கிடையேயான எல்லையில் அமைந்துள்ளது. இரத்தினபுரிக்கு வடகிழக்கே சுமார் 40 கி.மீ மற்றும் ஹற்றனின் தென்மேற்கில் 32 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. சுற்றியுள்ள பகுதி பெரும்பாலும் காடுகள் நிறைந்த மலையாகும். இந்த மலையை ஒட்டிய பகுதி ஒரு வன விலங்குக் காப்பகமாகும்.

கொழும்பிலிருந்து ஹற்றன் செல்லும் வீதியில் உள்ள கினிகத் தேனையை அடுத்து வரும் கரோலினா சந்தியிலிருந்து தெற்கு நோக்கி நோட்டன் பிரிட்ஜ், லக்சபான, மவுசாக்கல ஊடாக நல்லதண்ணி எனும் மலையடிவாரம் வரை ஓர் பாதை செல்கிறது. இங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்ல வேண்டும். இதுவே சிவனொளிபாத மலைக்குச் செல்லக் கூடிய இலகுவான பாதையாகும்.

இன்னுமோர் வழியும் இம் மலைக்குச் செல்வதற்கு உள்ளது. கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் வழியில் உள்ள குருவிட்ட என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி எக்னெலிகொட, எம்புல் தெனிய, குருளுவான ஊடாகப் பாலபெத்தலே என்னுமிடத்தை அடைந்து அங்கிருந்து கால் நடையாக மலைக்குச் செல்வதாகும்.

இந்த மலையிலிருந்து பார்த்தால் கொழும்பு, பேருவளை கலங்கரை விளக்கங்களைக் காண முடியும். சிவனொளிபாத மலையின் 2021 க்கான யாத்திரை காலம் 2020 மார்கழியில் ஆரம்பிக்கப்பட்டது. பருவ காலம் ஆரம்பித்து விட்டால் யாத்திரிகள் வெவ்வேறு இடங்களிலிருந்து இங்கு வருவார்கள்.

இது கடல் மட்டத்திலிருந்து 7359 அடி உயரமானதாகும். இந்த மலையுச்சியில் காணப்படுகின்ற 1.8 மீற்றர் அளவான பாறை, பௌத்தர்களால் கௌதம புத்தரின் காலடிச் சுவடாகவும், இந்துக்களால் சிவனின் காலடிச் சுவடாகவும், இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் ஆதாமின் காலடிச் சுவடெனவும் கருதப்பட்டு வருகின்றது. அவரவர் மதநம்பிக்கைகளின் அடிப்படையில் பல பெயர்களால் அழைக்கிறார்கள். இதனால் சர்வமதங்களின் ஒற்றுமைச் சின்னமாகவும் இந்தமலை திகழ்கின்றது.

ஸ்ரீபாத, ஆதாமின் சிகரம், பாவா ஆதம் மலை, சிவபதம் என பலபெயர்களால் அழைக்கப்படுகிறது. சிவனொளிபாத மலையின் யாத்திரைக்கான பருவ காலம் ஆரம்பிக்கும் காலப்பகுதியில் மலையகம் எங்கும் வண்ணத்துப்பூச்சிகள் அலை அலையாகப் பறந்து திரிகின்றன. இவை அனைத்தும் சிவனொளிபாத மலைக்குச் சென்று இறைவனைச் தரிசிப்பதாக நம்பப்படுகின்றது.

மலை உச்சியை நோக்கிப் படிகள் வழியே ஏறிச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் விகாரைகள் கட்டப்பட்டுள்ளதுடன் அவசரத் தேவைகருதி வைத்திய முகாம்களும் முதலுதவி முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.


இரவு மலை ஏற ஆரம்பித்தால், அதிகாலை வேளையில் மலை உச்சியைச் சென்றடைந்து, இறைவனின் பாதங்களைத் தரிசித்துவிட்டு சூரியன் உதிக்கும் உன்னதமான காட்சியைப் பார்க்க முடியும். சிங்களவர்களின் சம்பிரதாயத்துக்கு அமைய மத்தளம் அடித்து, முரசு கொட்டி சூரிய பகவானுக்கு மரியாதை செலுத்துவார்கள்.

இயற்கை அன்னையின் பிறப்பிடமான மலைநாட்டின் அற்புதமான எழில் கொஞ்சும் காட்சியைக் காண்பதற்கு சிவனொளிபாதமலையே சிறந்த இடமாகும். சிவனொளிபாதமலை பக்திக்கும், இயற்கை அழகுக்கும் மட்டும் பிரசித்தி பெறவில்லை. மாறாகப் பல ஆறுகளின் 'நதி மூலமும்' இந்தச் சிவனொளிபாதமலையில்தான் என்று கூறுவதில் தப்பில்லை. இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கை, களுகங்கை, களனி கங்கை உள்ளிட்ட பல ஆறுகள் ஊற்றெடுப்பது இந்த மலையிலிருந்துதான்.

டிசம்பர் முதல் மே வரை யாத்திரைகாலமாகக் கருதப்படுகிறது. உச்ச யாத்திரை பருவமாக ஏப்ரல் மாதம் உள்ளது. இந்தச் சிவனொளிபாதமலை பக்திபூர்வமானது. வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று உலகளாவிய ரீதியில் போற்றப்படுகின்றது.

கொட்டும் பனித்துளிகள் உடம்பில் பட்டு சில்லிடும்போது குளிர்காற்றில் மழைச்சாரல் தூவானமாக சிந்திக்கொண்டிருக்கும் காலத்தில் மலை ஏறுவதும் ஒரு சுவாரஷ்யம். ■

# மல்லிகை ஜீவாவுக்கு நினைவு முத்திரை வெளியிடவேண்டும்



முருகபூபதி

> **யாழ்ப்பாண மண்ணில் பிறந்து, உலகளாவிய ரீதியில் ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த மல்லிகை ஜீவாவுக்கு யாழ். மாநகர சபையிலும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரையில் அதுவும் நடக்கவில்லை. முதல் முதலில் மல்லிகை ஜீவா, சாகித்திய விருது பெற்று யாழ்ப்பாணம் திரும்பியவேளையில் அன்றைய யாழ். மாநகர மேயர் துரைராஜா, ஜீவாவுக்கு மலர்மாலை அணிவித்து ஊர் வலமாக அழைத்துவந்தார் என்பதையும் இத்தருணம் நினைவுபடுத்துகின்றோம்.**

மல்லிகை ஜீவா ஈழத்து தமிழ்த்தேசிய இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். ஈழத்து எழுத்தாளர்கள் பலருக்கு களம் வழங்கி ஈழத்து இலக்கிய செல்நெறிக்கு உந்துசக்தியாக விளங்கியவர்.

சமகால பெருந்தொற்றின் தாக்கத்தினால், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி, அவர் கொழும்பில் மறைந்தார். அதனையடுத்து, அவர் குறித்த நினைவேந்தல் அரங்குகள் இலங்கையில் பல பாகங்களிலும், தமிழர் புலம்பெயர்ந்த தேசங்களிலும் தொடர்ச்சியாக நடைபெற்றன.

மல்லிகை ஜீவாவுக்கு இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிடவேண்டும் எனவும் அவர் பிறந்து வளர்ந்து பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்து, மல்லிகை இதழை ஆரம்பித்த யாழ்ப்பாணத்தில் அன்னாரின் நினைவாக ஒரு மண்டபமும் அமைத்தல் வேண்டும் என்ற குரலும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் ஒலித்தது.

மல்லிகை ஜீவா மறைந்து ஓராண்டுகளாகியிருக்கும் இக்காலப்பகுதியில், அவரை மீண்டும் மீண்டும் நினைவு கூரவேண்டிய கடப்பாட்டுடன் இந்த ஆக்கம் எழுதப்படுகிறது.

ஜீவா, சாதாரண அடிநிலை சமூகத்தில் பிறந்து அச்சமூகத்தின் குரலாக இலக்கிய உலகில் ஒலித்தவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வளம் சேர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தில் 1966 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மல்லிகை மாசிகையை ஆரம்பித்தார்.


இடையில் போர்க்காலம் தோன்றிய வேளையிலும் சளைக்காது குறைந்த வளங்களுடன் மல்லிகையை வெளிக்கொணர்ந்தவர்.

இலங்கையில் தமிழ் படைப்பு இலக்கியத்திற்கு முதல் முதலில் தேசிய சாகித்திய விருதும் பெற்றவர். அத்துடன் "தேசத்தின் கண்" என்ற உயரிய விருதையும் சாகித்திய இரத்தினா விருதையும் கனடா இலக்கியத்தோட்டத்தின் "இயல்விருது" உட்பட பல விருதுகளும் பெற்றவர்.




மூவின இலக்கியவாதிகளால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இன நல்லிணக்கத்திற்காக மொழிபெயர்ப்பு இலக்கியங்களுக்கும் தமது மல்லிகை இதழில் முன்னுரிமை வழங்கியவர்.

நூற்றுக்கணக்கான மூவின கலை, இலக்கிய ஆளுமைகள் மற்றும் சமூகப்பணியாளர்கள் மற்றும் இலக்கிய பேராசிரியர்களின் படங்களை மல்லிகை இதழ்களின் முகப்பில் பதிவுசெய்து பாராட்டி கௌரவித்து மல்லிகை இதழிலே அவர்கள் பற்றிய கருத்துச் செறிவு மிக்க ஆக்கங்களையும் வெளிவரச் செய்தவர்.




இலங்கையின் அனைத்து பிரதேச எழுத்தாளர்களுக்கும் மல்லிகையில் சிறந்த களம் வழங்கியவர்.

அத்துடன் மல்லிகை ஜீவாவின் சிறுகதைகள் பல்கலைக்கழக மாணவர்களினால் இலக்கிய ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

மல்லிகை ஜீவாவின் சிறுகதைகள் சிங்கள - ஆங்கில மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

அவருடைய சுயசரிதையும் ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளதுடன், சில கதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு தனி நூலாகவும் வெளி வந்துள்ளது.

மல்லிகை இதழ்கள் பல்கலைக்கழக கலைப்பீட தமிழ்த்துறை மாணவர்களுக்கு உசாத்துணையாகவும் விளங்கியவை. 1966 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரையில் வெளியான மல்லிகை இதழ்களை நூலகம் ஆவணத்தில் பார்வையிடமுடியும்.

கொழும்பில் புறநகரத்தில் மட்டக்குளிய பிரதேசத்தில் காக்கை தீவில் ஏக புதல்வன் திலீபனின் பராமரிப்பில் அந்திம காலத்தில் வாழ்ந்த மல்லிகை ஜீவா, தமது 94 வயதில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்ததாக மருத்துவர்களின் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொரளை கனத்தை மின் மயானத்தில் சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் இறுதிச் சடங்கு அமைதியான முறையில் மகன் திலீபன் முன்னிலையில் நடைபெற்றது.

தான் இறக்க நேரிட்டால், தனது உடல் தனது பெற்றோர்கள் நல்லடக்கமான யாழ். மண்ணிலேயே அடக்கப்படவேண்டும் என்ற விருப்பத்துடனும் இருந்தவர்.

மல்லிகை ஜீவா, டொமினிக் என்ற இயற்பெயருடன் யாழ்ப்பாணத்தில் 1927 ஆம் ஆண்டு பிறந்தவர். 1966 ஆம் ஆண்டு மல்லிகை மாத இதழை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் வெளியிட்டு வந்த ஜீவா, வடபகுதியில் போர் மேகங்கள் சூழ்ந்த பின்னர் கொழும்புக்கு இடம் பெயர்ந்து, அங்கிருந்து மல்லிகையை வெளியிட்டவாறு, மல்லிகைப்பந்தல் என்ற பதிப்பகத்தையும் உருவாக்கி பல நூல்களையும் வெளியிட்டார்.


சிங்கள இலக்கிய மேதை மார்டின் விக்கிரமசிங்கா, அறிஞர் அஸீஸ், அறிஞர் சித்திலெப்பை, ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், கலாயோகி ஆனந்தகுமாரசாமி ஆகியோருக்கெல்லாம் இலங்கை அரசு முன்னர் நினைவு முத்திரை வெளியிட்டிருப்பது போன்று, எங்கள் மூத்த எழுத்தாளர் மல்லிகை ஜீவாக்கும் இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிடவேண்டும்.


யாழ்ப்பாண மண்ணில் பிறந்து, உலகளாவிய ரீதியில் ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த மல்லிகை ஜீவாவுக்கு யாழ். மாநகர சபையிலும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரையில் அதுவும் நடக்கவில்லை.

முதல் முதலில் மல்லிகை ஜீவா, சாகித்திய விருது பெற்று யாழ்ப்பாணம் திரும்பிய வேளையில் அன்றைய யாழ். மாநகர மேயர் துரைராஜா, ஜீவாவுக்கு மலர்மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வந்தார் என்பதையும் இத்தருணம் நினைவுபடுத்துகின்றோம்.

யாழ்நகரத்தில், மாநகர சபை அல்லது இனிமேல் இயங்கவிருக்கும் வடமாகாண சபை ஜீவாவுக்கு நினைவு மண்டபமும் அமைக்கவேண்டும். அதில் ஜீவாவின் மல்லிகை இதழ்கள், ஜீவாவின் இலக்கிய படைப்புகள், ஒளிப்படங்கள், ஜீவா பெற்ற உயர் விருதுகள் இடம்பெறத்தக்கதாக காட்சியகமும் நிறுவப்படல்வேண்டும்.

இதுவிடயத்தில் இலங்கை தமிழ் அமைச்சர்கள், தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இலங்கை தமிழ் - சிங்கள - முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்களும், இலங்கையில் வெளியாகும் ஊடகங்களும் தமிழ் சிற்றிதழ்களும் ஏகமனதாக இலங்கை அரசுக்கும், யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வடமாகாண ஆளுநருக்கும் கோரிக்கை விடுத்தல் வேண்டும்.




மல்லிகை ஜீவா தொடர்ந்தும் இலக்கிய இதழின் ஆசிரியராகவே அடையாளப்படுத்தப்படுகிறார். எனினும் அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவரது சிறுகதைகள் தொடர்பாக வாசிப்பு அனுபவப்பகிர்வு அரங்குகள் காலத்துக்குக் காலம் மல்லிகை ஜீவாவை நினைவுபடுத்தும் வகையில் நடைபெறல்வேண்டும்.

அவர் வாழும் வரலாறாக என்றும் கொண்டாடப்படுவார்.

ஐ.வி.மகாசேனன்



# ரஷ்ய–உக்ரைன் விவகாரத்தில்

## ரஷ்யா பக்கம் சாய்கிறதா ஜேர்மனி?

சர்வதேச அரசியல் ரஷ்ய-உக்ரைன் நெருக்கடியிலேயே முழுமையாக ஸ்தம்பித்துள்ளது. ரஷ்யா கிழக்கு ஐரோப்பாவில் மீளத் தன் பலத்தைக் கட்டியெழுப்பும் எண்ணத்துக்கான முன்முயற்சியாகவே உக்ரைன் விவகாரம் அவதானிக்கப்படுகிறது. இந்நிலையில் ரஷ்யாவின் கிழக்கு ஐரோப்பா மீதான கரிசனையைத் தடுக்கும் வகையிலான செயற்பாடுகளை அமெரிக்காவும் ஆரம்பித்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யாவிற்கு எதிராக ஐரோப்பிய அணிதிரட்டும் களச்செயற்பாடுகளில் இறங்கி உள்ளது. எனினும் ஐரோப்பியா ஒன்றியத்தில் பலமான சக்தியாக உள்ள ஜேர்மனி, ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடுகளுக்கு உடன்படாத போக்குக் காணப்படுகிறது. இக்கட்டுரை ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் ஜேர்மனியின் அரசியல் நிலைப்பாடுகளைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய-உக்ரைன் பதற்றத்தில் ஜேர்மனியின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான தேடல்களுக்கு ஆரம்பப்புள்ளியாக ஜேர்மன் கடற்படைத் தளபதியின் கருத்து காணப்படுகிறது. கடந்த ஜனவரி-21 (2022) அன்று இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜேர்மனிய கடற்படைத் தளபதி கே-அச்சிம் ஷொன்பாக், பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளுக்கான மனோகர் பாரிக்கர் நிறுவனத்தில் நிகழ்த்திய உரையில், ரஷ்யா உக்ரைனில் அணிவகுத்துச் செல்லப் போகிறது என்று நினைப்பது முட்டாள்தனம் என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மரியாதைக்குரியவர் என்றும் கூறியிருந்தார். மேலும், "ஒருவருக்கு மரியாதை அளிப்பது குறைந்த விலை, செலவு கூட இல்லை. அவர் உண்மையிலேயே கோரும் மரியாதையை அவருக்கு வழங்குவது எளிது. மேலும் தகுதியுடையது" என்று ஷான்பாக் கூறினார். ரஷ்யா தொடர்பான ஜேர்மனிய கடற்படை தளபதியின் கருத்தாடல் ஜேர்மனியின் வெளியுறவுச்செயற்பாடுகளில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இந்நிலையில் ஜேர்மன் அரசாங்கம் அதன் கடற்படைத் தளபதியிடமிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொண்டது. தொடர்ந்து சனிக்கிழமையன்று (22.01.2022) கடற்படை தளபதி இராஜினாமா செய்தார்.

ஆனால், ஜேர்மன்-உக்ரைன் உறவில் சேதம் ஏற்பட்டுள்ளது. உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா ஜேர்மனியை பகிரங்கமாகத் திட்டினார். ஜேர்மனிக்கான உக்ரேனிய தூதர் அன்ட்ரிஜ் மெல்னிக்கை வரவழைத்து, உக்ரேனைத் தாக்க புடினை ஊக்குவிப்பதாக ஜேர்மனி மீது குற்றம் சாட்டினார். ஜனவரி-23 (2022) அன்று ஜேர்மனியில் இயங்கும் டை வெல்ட் செய்தித்தாளில் உக்ரேனிய தூதர் அன்ட்ரிஜ் மெல்னிக், "உக்ரைனியர்கள் ஆழ்ந்த அதிர்ச்சியில் உள்ளனர். இந்தச் சம்பவம் ஜேர்மனியின் சர்வதேச நம்பகத்தன்மையை பெருமளவில் கேள்விக்குள்ளாக்குகிறது. இது உக்ரேனிய கண்ணோட்டத்தில் மட்டுமல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் நெருக்கடி கடந்த மாதம் ஏஞ்சலா மேர்க்கலிடமிருந்து பதவியேற்ற ஸ்கோல்ஸூக்கு முதல் பெரிய சோதனையாகும். ஸ்கோல்ஸூன் கூட்டணி அரசாங்க பங்காளிகளான மத்திய-இடது சமூக ஜனநாயகக் கட்சி, பசுமைவாதிகள் மற்றும் வணிக சார்பு சுதந்திர ஜனநாயகக் கட்சி ஆகியன ரஷ்யாவுடன் உரையாடல் மற்றும் கடினத்தன்மை என்று உறுதியளித்துள்ளது. ஆனால் உள்பிளவுகளைச்சமாளிக்கவும், தைரியமான மாஸ்கோவை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஒரு ஒருங்கிணைந்த பதிலை உருவாக்கவும் ஜேர்மன் அரசாங்கம் போராடி வருகிறது. ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் ஜேர்மனின் முடிவுகளைத் தீர்மானிக்கக்கூடிய விடயங்களை நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும்.

**ஒன்று,** இரண்டாம் உலகப் போர்களின் தூண்டுதலாக ஜேர்மனி அதன் கடந்த காலத்தில் கொண்டுள்ள அதிர்ச்சியால் பாரம்பரியமாக இராணுவ மோதலில் ஈடுபடத் தயங்குகிறது. மற்றும் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது பதட்டங்களைத் தூண்டிவிடும் என்ற ஸ்கோல்ஸூன் அரசாங்க எண்ணங்களாலும் ஜேர்மனி உக்ரேனுக்கு ஆயுதங்களை அனுப்ப மறுத்து வருகின்றது. இந்த முடிவு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பால்டிக் நாடுகளுடன் முரண்படுகிறது. இது ஜேர்மனிக்கும் மேற்கத்திய நட்பு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விவாதமாகவும் வளர்ந்து வருகிறது. மேலும், பல தரப்புக்களாலும் ஜேர்மனி அரசாங்கம் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்க வேண்டும் என்பது தொடர்பில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் குலேபா, ஜேர்மனியின் எச்சரிக்கையான நிலைப்பாடு தற்போதைய பாதுகாப்பு நிலைமைக்குப் பொருந்தவில்லை என்றும், கியேவின் நட்பு நாடுகளிடையே ஒற்றுமையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதை நிறுத்த வேண்டுமெனவும் பெர்லினை வலியுறுத்தி வருகிறார். இதேநேரம், ஜேர்மனியில் கூட, சிலர் மறுபரிசீலனை செய்ய அழைப்பு விடுத்துள்ளனர். எதிர்க்கட்சியைச் சேர்ந்த மத்திய-வலது கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றிய சட்டமியற்றுபவரான கென்னிங் ஒற்றே பிளிட் நாளிதழிடம், "சாத்தியமான தாக்குதலைத் தடுக்க உக்ரைன் ஆயுதங்களைக் கேட்டால், இந்த கோரிக்கையை நாங்கள் நிராகரிக்கக் கூடாது" என்று கூறினார்.

> “ இரண்டாம் உலகப் போர்களின் தூண்டுதலாக ஜேர்மனி அதன் கடந்த காலத்தில் கொண்டுள்ள அதிர்ச்சியால் பாரம்பரிய மாக இராணுவ மோதலில் ஈடுபடத் தயங்குகிறது. மற்றும் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது பதட்டங்களைத் தூண்டிவிடும் என்ற ஸ்கோல்ஸூன் அரசாங்க எண்ணங்களாலும் ஜேர்மனி உக்ரேனுக்கு ஆயுதங்களை அனுப்ப மறுத்து வருகின்றது. இந்த முடிவு அமெரிக்கா, பிரிட்டன் மற் றும் பால்டிக் நாடுகளுடன் முரண்படுகிறது. இது ஜேர்மனிக்கும் மேற்கத்திய நட்பு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விவாதமாகவும் வளர்ந்து வருகிறது. மேலும், பல தரப்புக்களாலும் ஜேர்மனி அரசாங்கம் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்க வேண்டும் என்பது தொடர்பில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. ”

மேலும், அமெரிக்காவும் தொடர்ச்சியாக ஜேர்மனியுடன் இராஜதந்திர உரையாடல்களை முன்னெடுத்து வருகிறது. அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் ஜனவரி-20 (2022) அன்று ஜேர்மனுக்கு விஜயம் செய்து ஜேர்மனிய அரச தலைவர்களுடன் உக்ரைன் விவகாரம் தொடர்பில் இராஜதந்திர உரையாடல்களை பரவலாக முன்னெடுத்தார். அதனைத் தொடர்ந்து வார இறுதியில் ஜேர்மன் சான்சலர் ஓலாஃப் ஸ்கோல்ஸூன் Suddeutsche Zeitung எனும் செய்தித்தாளுக்கு அளித்த பேட்டியில், எந்தவொரு இராணுவ ஆக்கிரமிப்பும் கொண்டு வரும் அதிக செலவுகளுக்கு எதிராக ரஷ்யாவை எச்சரித்தார். அவ்வாறே அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் சி.என்.என் செய்தித்தளத்தில் ஜனவரி-23 (2022)அன்று ரஷ்யாவிற்கு எதிராக நிற்கும் ஜேர்மனியின் உறுதியின் மீது தனக்குச் சந்தேகமில்லை என்று கூறினார்.

அமெரிக்காவின் இராஜதந்திர முன்னெடுப்புக்கள் ஜேர்மனை மீள உக்ரைனுக்கு ஆதரவான அமெரிக்கா கூட்டுடன்இணைத்துள்ளதாக விம்பத்தைக் காட்டியுள்ள போதிலும், ஜேர்மனியின் நகர்வுகள் நுணுக்கமான தந்திரோபாய நகர்வுகளாகவே காணப்படுகின்றது. ஜேர்மன் வெளியுறவு மந்திரி அன்னலெனா பேர்பாக் ஜனவரி-24 (2022)அன்று பிரஸ்ஸில் நடந்த ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு மந்திரிகளின் கூட்டத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் உக்ரைன் விவகாரம் தொடர்பிலான இராஜதந்திர புயலை அமைதிப்படுத்தும் ஜேர்மனியின் தந்திரோபாய நகர்வின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது. பொருளாதார ஸ்திரப்படுத்தல் என்பது ஜேர்மனி வழங்கக்கூடிய ஆதரவின் தீர்மானமான நடவடிக்கைகளில் ஒன்றாகும் என்று வாதிட்டார். அதாவது, "உக்ரைனின் பொருளாதார நிலைமையை நாம் குறிப்பாக மனதில் வைத்திருப்பது முக்கியம். நிதி மற்றும் பொருளாதார ஆதரவின் அடிப்படையில் நாங்கள் உக்ரைனின் பக்கத்தில் மிகவும் நெருக்கமாக இருக்கிறோம்" என்று அன்னலெனா பேர்பாக் கூறினார். எவ்வாறாயினும், பண உதவி பற்றிய எந்த விவரங்களையும் வழங்கவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது. பெர்லின் கியேவின் பக்கத்தில் மிக நெருக்கமாக நிற்கிறது. ஆனால், ஆயுத ஏற்றுமதியில் நிலையை மாற்றாது என்று அழுத்தமாகக் கூறுகிறது. இது முழுமையாகத் தந்திரோபாய உரையாடலாகவே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



**இரண்டு,** ஜேர்மன் ரஷ்யாவுடன் கொண்டுள்ள பொருளாதார இணக்கங்களும் ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் ஜேர்மனி விலகி செல்வதற்குப் பலமான காரணமாகவே உள்ளது. ஜனவரி-18 (2022) அன்று, ஜேர்மனியின் ஹான்டெல்ஸ்ப்ளாற் (Handelsblatt) செய்தித்தாள் ஜேர்மனிய அரசாங்க ஆதாரங்களை மேற்கோள் காட்டி மேற்கத்திய அரசாங்கங்கள் இனி ரஷ்ய வங்கிகளை SWIFT(The Society for Worldwide Interbank Financial Telecommunication) உலகளாவிய கொடுப்பனவு அமைப்பிலிருந்து துண்டிப்பதைக் கருத்தில் கொள்ளவில்லை என்று தெரிவித்தது. ஐரோப்பியா பெர்லினில் உள்ள சைபீரிய வாயுவை அதிகம் சார்ந்திருப்பதால், வெளிப்படையாக ரஷ்யாவுடன் பொருளாதார மற்றும் நிதி உறவுகளை முறித்துக் கொள்ள முடியாது. ஜேர்மன் சான்சலர் ஸ்கோல்ஸூன் Suddeutsche Zeitung எனும் செய்தித்தாளில் உக்ரைன் மீதான ரஷ்யா போர் முனைப்புக்களுக்கு எச்சரிக்கை செய்த போதும், ரஷ்யா மீதான சாத்தியமான பொருளாதாரத் தடைகளை செய்தியாளர் வினாவும் மெய்யறிவுக்கு (Wisdom) அழைப்பு விடுப்பதன் மூலம் அவர் தனது கருத்தை சமநிலைப்படுத்தினார். ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரமான ஜேர்மனிக்கு ஏற்படுத்தும் விளைவுகள் பற்றியும் எச்சரித்திருந்தார். மேலும் நார்ட் ஸ்ட்ரீம் 2 (Nord Stream 2) பைப்லைன் உக்ரைன் நெருக்கடியில் மற்றொரு சர்ச்சைக்குரிய புள்ளியாகக் காணப்படுகிறது. தற்போது ஜேர்மன் ஒழுங்குமுறை ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் முடிக்கப்பட்ட குழாய், ஜேர்மனிக்கு ரஷ்யா எரிவாயு விநியோகத்தை இரட்டிப்பாக்க உள்ளது. இக்குழாய் விவகாரம் ஜேர்மன் அமைச்சரவையை பிளவுபடுத்தியுள்ள போதிலும் முந்தைய மேர்க்கெல் தலைமையிலான அரசாங்கம் குழாய்த் திட்டம் முற்றிலும் வணிகத் திட்டம் எனக் குறிப்பிட்டதைப் பின்பற்றியே தற்போதைய சான்சலர் ஸ்கோல்ஸூம் குழாய் திட்டம் "தனியார் துறை திட்டம்" என எதிரொலித்து வருகிறார். இவ்வகையில் ரஷ்யா சார்ந்துள்ள ஜேர்மனியின் பொருளாதார நலன் ஜேர்மனி அரசாங்கத்தை ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் நிதானித்து பயணிக்கவே தூண்டக்கூடியதாகும்.

எனவே, ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவிற்கு மேற்கின் பாதுகாப்பு கூட்டு என்பது ஜேர்மனியின் ஒத்துழைப்பு இன்மையால் நெருக்கடிக்கு உள்ளாகும் சூழ்நிலையே அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தினுள் நேட்டோ தவிர்க்கப்பட்டு புதியதொரு பாதுகாப்பு கூட்டு பற்றிய உரையாடல்கள் மேலெழும் சமகாலத்தில், ஜேர்மன் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் எண்ணங்களைப் புறந்தள்ளி செயற்படுவது நேட்டோவை பலவீனப்படுத்துவதாகவே அவதானிக்கப்படுகிறது. இதனூடாக ஜேர்மன் தனது தந்திரேபாய நகர்வுகளூடாக அமெரிக்காவின் இராஜதந்திர முன்னெடுப்புக்களை ஐரோப்பாவுக்குள் பலவீனப்படுத்தியுள்ளமையையே புலப்படுகிறது.

■

# சர்வதேச சமூகம் சர்வரோக நிவாரணியா...?

அவதானி




இலங்கை இந்து சமுத்திரத்தின் நடுவே துலங்கும் அழகிய முத்து. இந்த முத்தைச் சிறைப்பிடிக்க முதலில் போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இவர்களுக்குப்பின்னர் பிரித்தானியரும் வந்து, அதனைச் சுரண்டக் கூடியளவுக்குச் சுரண்டி விட்டுச் சென்று விட்டாலும், இந்த முத்து இன்றளவும் சர்வதேசத்தின் அழகிய காட்சிப் பொருளாகத்தான் இருக்கிறது.

சுதந்திரத்திற்குப் பின்னர் வந்த கட்சி அரசியல் ஆட்சியாளர்களும் தமது பங்கிற்குச் சுரண்டத்தான் செய்தனர். முடியாத விடத்து வெளிநாட்டு கடன்களைப் பெற்று, சுரண்டிய இடங்களில் ஒத்தடம் கொடுத்தனர்.

இலங்கையில் வாழ்ந்த மூவின மக்களையும் சமமாக நடத்தாமல் பெரும்பான்மை இனத்தவர் பேசும் மொழிக்கும் அவர்கள் பின்பற்றிய மதத்திற்கும் முக்கியத்துவம் வழங்கும் வகையில், ஏனைய இரண்டு சிறுபான்மை இனத்தையும் (இரண்டும் தமிழ் பேசும் இனங்கள்) இரண்டாம் பட்சமாக்கும் அரசியலமைப்புகளைக் காலத்துக்குக் காலம் உருவாக்கியதனால், தேசிய இனப்பிரச்சினை உக்கிரமடைந்து அது இன விடுதலைப் போராட்டமாகவும் வெடித்தது.

அந்தப்போராட்டத்தையும் சில சர்வதேச நாடுகளின் துணையுடன் முறியடித்துவிட்டு, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணியையும் இன்றைய அரசு ஒரு பௌத்ததேரர் தலைமையில் உருவாக்கியிருக்கிறது.

இதுவரை காலமும், “ எமது பிரச்சினையை சர்வதேச சமூகத்திடம் எடுத்துச்செல்வோம்” என்று கூறி வந்திருக்கும் தமிழ்த்தேசியம் பேசும் தலைவர்களைப் பின்பற்றி, அண்மையில் கத்தோலிக்கப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் தங்கள் பிரச்சினையை, குறிப்பாக, 2019 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஈஸ்டர் தாக்குதல் படுகொலைச் சம்பவத்தை, நீதி கோரி சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் செல்லப்போவதாகக் கூறியுள்ளார்.

> **இதுவரை காலமும்,“எமது பிரச்சினையை சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் செல்வோம்” என்று கூறிவந்திருக்கும் தமிழ்த்தேசியம் பேசும் தலைவர்களைப் பின்பற்றி, அண்மையில் கத்தோலிக்கப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் தங்கள் பிரச்சினையை, குறிப்பாக, 2019 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஈஸ்டர் தாக்குதல் படுகொலைச் சம்பவத்தை, நீதி கோரி சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் செல்லப்போவதாகக் கூறியுள்ளார்.**

யார் இந்த சர்வதேச சமூகம்..? அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிங்கப்பூர், மலேசியா, பர்மா, ரஷ்யா, சீனா, ஜப்பான், மற்றும் மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகளா...?

இவற்றில் எத்தனை நாடுகள் இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைத்திருக்கின்றன...? இலங்கையில் தோன்றிய இனவிடுதலைப் போரை முறியடிப்பதற்கு இவற்றில் எத்தனை நாடுகள் இலங்கை அரசுகளுக்கு ஆயுத உதவி மற்றும் படை உதவிகளை வழங்கின.

போர் முடிந்த பின்னர், தத்தம் தேவை கருதி இலங்கைக்குள் பிரவேசித்துள்ள இவற்றில் சில நாடுகளின் தூதுவர்களும் இராஜ தந்திரிகளும் வெளிநாட்டு அமைச்சர்களும், செயலாளர்களும் காலத்திற்குக் காலம் வந்தவண்ணமே இருக்கின்றனர்.

அவர்களுடன் தேநீர் விருந்துகளில் உரையாடும் தமிழ்த்தலைவர்கள், இதுவரையில் பேசியது என்ன..? அவர்களும் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தானே..? இன்னமும் அவர்களிடம் தலைவர் சம்பந்தன் இதுபற்றிப் பேசாமல்தானா, மீண்டும் மீண்டும் சர்வதேச சமூகத்திடம் பேசப்போகின்றோம் எனச்சொல்கிறார். புரியவில்லையே...?

இனிவரவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல் வரையில், “ இந்தச் சர்வதேச சமூகத்திடம் சொல்லியிருக்கின்றோம். அவர்கள் எமது பிரச்சினையை கவனிப்பார்கள்” என்று மீண்டும் அவர் சொல்லத் தொடங்கியிருக்கிறாரா..? என்று பார்த்தால், ஆண்டகை மல்கம் ரஞ்சித்தும் அவரது பாதையையே பின்பற்றித் தொடர்ந்து வந்து, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நீதி விசாரணையில் சர்வதேச சமூகத்திடம் முறையிடப்போவதாகச் சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

பிறந்துள்ள 2022 ஆண்டில், ஏப்ரல் மாதம் வந்தால், குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் நடந்து மூன்று ஆண்டுகளாகிவிடும். பலர் கைது செய்யப்பட்டதாகவும் சிலர் தலைமறைவாகத் தப்பி ஓடிவிட்டதாகவும் அரசின் புலனாய்வுப்பிரிவு தொடர்ந்தும் சொல்லி வருகிறது. முன்னைய பாராளுமன்றத்தினாலும் இதனை விசாரிக்க ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

இவ்வாறு காலம் இழுத்தடிக்கப்பட்டதேயன்றி, இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அவர்களின் வணக்கத்திற்குரிய பிதாவாகக் கருதப்படும் ஆண்டகையும் அரசுக்கு அழுத்தத்திற்கு மேல் அழுத்தம் பிரயோகித்துவிட்டு, தற்போது சர்வதேச சமூகத்திடம் முறையிடப்போவதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையிடத்திலும் சுட்டிக்காண்பித்து நீதி கோரவிருப்பதாகவும் இலங்கை அரசும் பொலிஸாரும் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தொடர்ந்தும் நாடகம் ஆடிக்கொண்டிருப்பதாகவும், அண்மையில் தென்னிலங்கை தேவாலயம் ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கைக்குண்டு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் சொல்லியிருக்கிறார்.

மொத்தத்தில் இலங்கை தமிழினத்தின் பிரச்சினைக்கு நீதி கண்டு பிடிக்க எமது தமிழ்த் தலைவர்கள் சர்வதேச சமூகத்திடம் முறையிடவிருப்பது போன்று ஆண்டகை அவர்களும் அதே சர்வதேச சமூகத்திடம்தான் செல்லவிருக்கிறார்.

அச்சமூகத்தின் பிரதிநிதிகளில் ஒருவரான இந்தியப்பிரதமரிடம், அவர் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலய பாதிப்புகளைக் காண வந்த விடத்திலும் சொன்னவர்தான் ஆண்டகை.

அதே பிரதமருக்குத்தான் தலைவர் சம்பந்தன் தலைமையில் அண்மையில் இனப் பிரச்சினைக்கு நீதி கேட்டு கடிதமும் அனுப்பப்பட்டது.

இது இவ்விதமிருக்க, தற்போது சம்பந்தன், “ராஜபக்ஷகளிடத்தில் இனியும் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது, உடனடியாக சர்வதேசத்தின் தலையீட்டைக் கோரும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதுதான் ஒரே வழி” என்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின் இது வரையில் அவர் செய்திருப்பது என்ன..? என்ற கேள்வி எழுகின்றது.

இந்தியப்பிரதமர் மோடிக்கு நீண்ட அறிக்கையைக் கொடுத்துவிட்டு, மீண்டும் வேதாளம் புளிய மரத்தில் ஏறியது போன்று பழைய பல்லவியை பாடத் தொடங்கியிருக்கிறார்.

இவர்கள் குறிப்பிடும் சர்வதேச சமூகம் வாழும் நாடுகளிலும் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து கொரோனாப் பெருந்தொற்றை முறியடிக்க முடியாமல் இந்த நாடுகள் திணறிக் கொண்டுதான் இருக்கின்றன.

“ இந்திய இலங்கை உடன்படிக்கையும் தமிழ்பேசும் மக்களின் ஆட்சி அதிகாரப் பகிர்விற்கான அரசியல் அபிலாஷைகளும்” என்ற தலைப்பினைத் தாங்கிக்கொண்டுதான் இந்தியப்பிரதமருக்கு எமது தமிழ்த்தலைவர்கள் சிலர் இணைந்து கடிதம் அனுப்பினர். அதனை அவதானித்திருக்கும் எமது தமிழ் மக்கள் கடந்த காலத்தில் பார்த்தவற்றில் ஒரு சிலவற்றையும் இங்கு பட்டியலிடுவது பொருத்தம்.

1957 இல் பண்டா - செல்வா உடன்பாடு
1965 இல் டட்லி - செல்வா உடன்பாடு
1985 இல் திம்பு பேச்சுவார்த்தை
1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம்
இதனையடுத்து பிரேமதாச - அன்டன் பாலசிங்கம் சந்திப்பு
வடக்கு - கிழக்கு மாகாண சபை செயல் இழப்பு.
ரணில் - விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தம்
நோர்வே பிரதிநிதி எரிக் சொல்கெயிம் மேற்கொண்ட சமாதான முயற்சி.
சந்திரிகா அறிமுகப்படுத்திய தீர்வுப்பொதி.
வடக்கும் கிழக்கும் பிரிந்து தனித்தனியான மாகாண சபை முறைமை.
இறுதியில் அவை இரண்டு செயல் இழந்தமை.

தற்போதைய ஜனாதிபதி அறிமுகப்படுத்தும் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி. இவ்வளவும் நடந்திருக்கும் போது, மீண்டும் சம்பந்தன், சர்வதேச சமூகத்தைக் கையில் எடுத்துள்ளார். அதனால் ஏதும் நன்மை கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் ஆண்டகை அவர்களும் சர்வதேச சமூகத்தையும் ஐக்கிய நாடுகள் சபையையும் நாடவிருக்கிறார் போலும்.

இவற்றையெல்லாம் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷாக்கள் தமது பிரதிநிதி மிலிந்த மொரகொட மூலம் “ இலங்கையும் இந்தியாவும் பல்வேறு துறைகளில் இணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியின் விருப்பம்” என்று தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு செவ்வி வழங்கச்செய்துள்ளனர்.

இதேவேளை, இதே காலப்பகுதியில் (சில தினங்களுக்கு முன்னர்) இலங்கை வந்த பிரித்தானியாவின் பொதுநலவாய விவகாரங்களுக்கும் (கொமன் வெல்த்) ஐ. நா. விவகாரங்களுக்கும் பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட், இலங்கையில் மனிதவுரிமைகள் பேணப்படுவதாகச் சொல்லியிருக்கிறார் என்று இலங்கை அரசு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

ஆனால், பிரித்தானியாவுக்குத் திரும்பிச் சென்ற அந்த அமைச்சர், தான் அவ்வாறு கூறவில்லை என்று தமது ருவிட்டரில் பதிவிட்டிருக்கும் செய்தியும் வெளியாகியிருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால் இலங்கையில் சடுகுடு விளையாட்டுத்தான் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. இவற்றை அவதானிக்கும் ஸ்ரீமான் பொதுஜனனன்தான் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரல்வேண்டும் ! ■

பிதாமகன்

# ஒரு நாட்டு மக்கள் என
# நாம் மட்டும் நினைத்தால்போதுமா?

ஒரே நாடு ஒரே சட்டம் என்பதன் விளக்கம் என்னவென்று நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கே தெரியாத காரணத்தினால் அதற்கென செயலணி ஒன்றை அமைத்து நாடு பூராகவும் கருத்து சேகரிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.



இந்நிலையில் ஒன்பதாவது பாராளுமன்றின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து கொள்கை விளக்கவுரையாற்றிய ஜனாதிபதி கோட்டபாய மலையக மக்கள் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையென எதிரணியில் அமர்ந்துள்ள மலையகப் பிரதிநிதிகள், மேற்படி விளக்கவுரை சம்பந்தமான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் வேதனையாகவும் ஆவேசமாகவும் கருத்து தெரிவித்திருந்தனர்.

இதே விவாதத்தில் கலந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன்தொண்டமானோ, நாம் அனைவரும் இலங்கையர்கள், ஒரு நாட்டு மக்கள் என்ற அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டும். ஆகவே ஜனாதிபதி மலையகச் சமூகத்தை அந்த அடிப்படையில் வைத்து நோக்கியிருக்கலாம் என்று கருத்துப்பட உரையாற்றியிருந்தார்.

இதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பியான வே.ராதாகிருஷ்ணன், ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் கடும் சீற்றத்துடன் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்திருந்தனர். நாம் அனைவரும் இலங்கையர்கள் என்று நினைத்தால் ஏன் அரசாங்கம் மலையப் பெருந்தோட்டப் பகுதி தொழிலாளர்களுக்கு மாத்திரம் சலுகை விலையில் கோதுமை மாவை வழங்க வேண்டும்? இந்த நாட்டின் ஏனைய மக்களுக்கும் கிடைத்து வரும் உரிமைகள், சலுகைகள் ஏன் இந்த மக்களுக்கு இல்லை? வாய் பேச்சில் மட்டும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்று கூறுவதில் என்ன கௌரவம் உள்ளது எனக் கேள்வியெழுப்பியிருந்தனர்.

மலையக சமூகம் இந்த நாட்டின் அபிவிருத்திக்கும் சுதந்திரத்துக்கும் முற்பட்ட காலத்திலிருந்து உழைத்தும் வரும் மக்கள் கூட்டமாகும். இப்பிரிவினரில் பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு இதுவரை அரசாங்கம் கூறிய ஆயிரம் ரூபாய் நாள்சம்பளம் கிடைக்கவில்லை. 200 வருடங்களாக இந்த மக்களுக்கு நிலவுரிமை மறுக்கப்பட்டு வருகின்றது.பெருந்தோட்டப் பகுதி வைத்தியசாலைகளை இன்னும் அரசாங்கம் பொறுப்பேற்கவில்லை. அரச நிர்வாகப் பொறிமுறைக்குள் இந்த மக்களை உள்ளீர்ப்பதற்கான பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவுகள் அதிகரிக்கப்படவில்லை.

அவ்வாறு அதிகரிக்கப்பட வேண்டும் என வர்த்தமானி அறிவித்து இருந்தாலும் கூட இந்தச் சமூகம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்படுகின்றது. இதை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் நன்கறிவார். எனினும் ஆளுந்தரப்புக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்பதற்காக ஜனாதிபதியை குளிர்விக்க அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார் என்பதை சிறு குழந்தையும் அறியும். எனினும் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மலையகச் சமூகம் புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அமரர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தமது சமூகத்தின் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். தொழிற்சங்க பலத்தைக் கொண்டு அரசாங்கத்துக்குச் சவால் விட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

ஆனால், அவை ஒன்றும் எடுபடாத காலகட்டத்தில் இப்போது ஜீவன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அரசியல்- தொழிற்சங்க அனுபவம் இரண்டிலும் இவர் கற்க வேண்டிய பாடங்கள் பல உள்ளன. மலையகச் சமூகம் கடந்த இரு சகாப்தங்களாக ஏன் புறக்கணிக்கப்பட்டு வரும் சமூகமாக உள்ளது என்பதை அவர் தேடியறிய வேண்டும். ஏனென்றால் அவ்வாறு வரலாற்றுத் தகவல்களை தம்வசம் கொண்டிருக்கும் இ.தொ.காவின் சிரேஷ்ட உறுப்பினர்களை அவர் இப்போது கண்டு கொள்ளவில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. அதில் உண்மைகள் இல்லாமலில்லை.

மலையகச் சமூகம் என்ற தனி அடையாளம் உள்ள காரணத்தினால் தான் சில தனிப்பட்ட சலுகைகளை அவர்கள் கடந்த காலங்களில் பெற்று வந்ததையும் இங்கு மறுக்க முடியாது. இவர்களும் இந்நாட்டு மக்களே என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் அப்படி கூறிக் கொண்டிருந்தால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சிறு சலுகைகளும் இல்லாமலாகி விடும் அபாயம் உள்ளது. தனது பதவியேற்பு நிகழ்வில் நான் இந்நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் ஜனாதிபதி எனக் குறிப்பிட்டிருந்தார் ஜனாதிபதி கோட்டபாய. ஆனால் நாள்செல்லச் செல்ல அவர்தான் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வருகிறார்.

பௌத்தத்துக்கே முதலிடம் என்பதில் அவர் உறுதியாகவிருக்கின்றார். ஜீவன் தொண்டமான் கூறுவதைப் போன்று ஜனாதிபதி மலையக மக்களையும் இந்நாட்டின் பிரஜைகள் என்று நினைத்திருந்தால் ஏன் ஜீவனுக்கு இராஜாங்க அமைச்சு பதவி வழங்க வேண்டும்? அந்தச் சமூகத்துக்கு கடந்த 43 வருடங்களாகக் கிடைத்து வந்த கபினட் அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி ஏன் இல்லாமல் போனது? இந்தச் சமூகத்தின் அடிப்படை வசதிகள் ஏன் தீர்க்கப்படவில்லை? ஒன்றரை இலட்சம் லயன் குடியிருப்புகள் இன்று பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்பட வெறும் 300 வீடுகள் அமைப்பதற்கு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது எதற்காக? நாட்டின் பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ள அரசாங்கம் தற்போது தனியார் துறைக்கும் அதை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது. இந்த இரண்டு பிரிவிலும் அடங்காத பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிலோ ஒன்று 80 ரூபாய் என்ற அடிப்படையில் மாதத்துக்கு 15 கிலோ கோதுமை மா மட்டுமே நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் என்ன காரணங்களைச் சொல்லப்போகின்றார்? இந்நாட்டு பிரஜைகள் என மலையகச் சமூகத்தை விளிக்கிறார் ஜீவன் தொண்டமான் ஆனால் இந்திய வம்சாவளி சமுதாய பேரவை என்ற அமைப்புக்கே அவர்தான் தலைவர். ஆகவே இங்கு அவர் செயற்படுவது ஒன்றாக இருக்கின்றது,

> **மலையகச் சமூகம் என்ற தனி அடையாளம் உள்ள காரணத்தினால் தான் சில தனிப்பட்ட சலுகைகளை அவர்கள் கடந்த காலங்களில் பெற்று வந்ததையும் இங்கு மறுக்க முடியாது. இவர்களும் இந்நாட்டு மக்களே என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் அப்படி கூறிக்கொண்டிருந்தால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சிறு சலுகைகளும் இல்லாமலாகி விடும் அபாயம் உள்ளது. தனது பதவியேற்பு நிகழ்வில் நான் இந்நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் ஜனாதிபதி என குறிப்பிட்டிருந்தார் ஜனாதிபதி கோட்டபாய. ஆனால் நாள்செல்லச் செல்ல அவர்தான் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வருகிறார்.**



ஆனால் அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துவதற்காக பாராளுமன்றில் வேறு என்னவோ பேசுகிறார். இந்த அரசாங்கம் மட்டுமல்ல, சுதந்திரத்துக்குப் பின் வந்த சகல அரசாங்கங்களும் இந்நாட்டின் மலையக மக்களை மட்டுமல்லாது வடக்குக்கிழக்கு மக்களையும் இரண்டாந்தர பிரஜைகளாகவே நடத்துகின்றது, மதிக்கின்றது என்பதை யாராவது இந்தச் சின்ன பையனுக்கு எடுத்துக் கூற வேண்டும். ■

# உடலின் சுத்திகரிப்புத் தொழிற்சாலை கல்லீரல்

பைஷல் இஸ்மாயில்

நம் உடல் உறுப்புகளில் மூளைக்கு அடுத்து இரண்டாவது பெரிய மற்றும் மிகவும் சிக்கலான உறுப்பு கல்லீரல் ஆகும். இது நமது உடலின் செரிமான அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. உணவுகள், மருந்துகள், பானங்கள் என நாம் சாப்பிடும் அல்லது பருகும் எதுவாக இருப்பினும் அது கல்லீரல் வழியாகவே செல்கிறது. எளிமையாகச் சொன்னால் கல்லீரல் இன்றி நம்மால் வாழ முடியாது. கல்லீரல் உடலின் முக்கியமான 500 வேலைகளைச் செய்கிறது. நம் உடலில் முக்கிய வேதி மற்றும் சுத்திகரிப்புத் தொழிற்சாலை என்று இதை கூறுவதுதான் சரியாக இருக்கும். ஏனென்றால் நாம் சாப்பிடுபவற்றில் உடலுக்கு நன்மை செய்யக் கூடியது மற்றும் தீங்கு செய்வது உள்ளிட்டவற்றை தரம் பிரித்து உடலுக்குக் கேடு விளைவிப்பவற்றை உடனடியாக வெளியேற்றும் வேலையைச் செய்கிறது கல்லீரல். வருடந்தோறும் ஏப்ரல் 19 ஆம் திகதி உலக கல்லீரல் தினம் அனுசரிக்கப்படுகிறது. கல்லீரல் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.



**திருமதி. றிப்ஹா ஜெமீல்**
BUMS, Dip.in psychological & Counselling (NISD), Dip.in Accupuncture (CHS), Master diploma in cupping therapy (IISDT)
மத்திய மருந்தகம்
வெலிகம


**கல்லீரல் கொழுப்பு நோய் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

இதயம், சிறுநீரகம், மூளை போன்று மிக முக்கியமான ஒரு உள் உறுப்புதான் கல்லீரலாகும். இது உணவுகளைச் சமிபாடடைவதற்கும், உணவிலுள்ள நச்சுத்தன்மையை நீக்குவதற்கும், உடலின் ஆற்றலைச் சேமிக்கவும் உதவுகிறது. மனித உடலில் மிகப்பெரிய சுரப்பியாக இருப்பது கல்லீரலாகும். சுமார் 1 கிலோ எடை கொண்ட மிகவும் மென்மையான செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும். கல்லீரல் வயிற்றின் மேல் பகுதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது. நாம் உண்ணும் கொழுப்புச் சத்துள்ள உணவுப்பொருட்கள் சமிபாடு அடைவதற்குப் பித்தநீர் மிகவும் அவசியமாகும். இந்த பித்தநீரை உற்பத்தி செய்வது கல்லீரலாகும்.



சத்துள்ள உணவுகள் சமிபாடடையாமல் ஆங்காங்கே படிந்து இரத்தத்தின் மூலம் எல்லா உறுப்புகளுக்கும் சென்றடைந்து விடும். இதிலுள்ள கொழுப்புக்கள் இதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் படிந்து அடைப்பை ஏற்படுத்தி விடுகிறது. இதனைக் கரைக்க கல்லீரலில் சுரக்கும் பித்தநீர் உதவுகின்றன. இதன் மூலம் மாரடைப்பு ஏற்படுவதைத் தவிர்க்க கல்லீரல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

கல்லீரலில் அதிக கொழுப்பு இரண்டு வகையில் சேர்கின்றது. இவை மது அருந்துவதன் மூலம் கொழுப்பு கல்லீரல் (Alcoholic fatty liver) என்றும், மது அருந்தா வகை கொழுப்பு கல்லீரல் (Non Alcoholic fatty liver) (NAFLD) என்றும் சேர்கின்றது.



**நீங்கள் குறிப்பிட்ட இரண்டு வகையினைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

அதீதமாக மது பாவிக்கும் அனைவருக்கும் (90% - 100%) ஈரலில் கொழுப்பு வருவது நிச்சயம். தொடர்ந்து அதிகமாக மது அருந்துபவர்களில் மட்டுமின்றி குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கு அதீதமாக மது அருந்துபவர்களிலும் ஈரலில் கொழுப்பு ஏற்படக்கூடும்.

மதுபாவனையைத் தவிர எடை அதிகமாக உள்ளவர்களிடம் இது ஏற்படுகிறது. குறிப்பாக, தற்காலத்திலுள்ள துரித உணவுமுறை மற்றொரு முக்கிய காரணமாகும். இந்த உணவு முறையில் கொழுப்பு அதிகமாக இருப்பதே முக்கிய காரணமாகும். இதனால் எடை அதிகரிப்பதற்கும், ஈரலில் கொழுப்புப் படிவதற்கும் பிரதான காரணமாகும். அதிலும் முக்கியமாக ட்ரான்ஸ் கொழுப்பு (Trans fats - trans fatty acids) அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, இரும்புச்சத்து அதிகமாகும் போதும் இது நேரலாம்.

**ட்ரான்ஸ் கொழுப்பு என்பது என்ன?**

தாவரக் கொழுப்புகளை (எண்ணெய்கள்) திடமானதாக ஆக்குவதற்காக ஹைட்ரஜனை உணவு தயாரிப்பாளர்கள் சேர்க்கும்போதே ட்ரான்ஸ் கொழுப்பு (Trans fats) உருவாகிறது.

**எதற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள்?**


விலை குறைவாக இருப்பதும், இதைக் கொண்டு செய்யப்படும் உணவுகள் சுவையாகவும் அச்சுவை வாயில் நீண்ட நேரம் நீடிக்கும் என்பதனாலும் இதைப் பயன்படுத்துகின்றார்கள்.

**அப்படியானால் நாம் அத்தகைய உணவுகளை உண்ணவே கூடாதா?**

மிகக் குறைந்தளவில் உண்ணலாம். ஆனால், நாம் ஒரு நாளில் உள்ளெடுக்கும் கலோரியின் அளவு 2000 எனில் அதில் 20 மட்டுமே ட்ரான்ஸ் கொழுப்பாக இருக்க வேண்டும்.

**கல்லீரலில் கொழுப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

அதிக உடற் பருமன், இன்சுலின் எதிர்ப்பு, ஹைபர்கிளைசீமியா, அதிகளவு கொழுப் புக்கள், வளர் சிதை மாற்ற நோய்க்குறிகள், மது அருந்துதல், துரித உணவுமுறைகள் போன்றவற்றால் ஏற்படுகின்றது.




**ஈரலில் கொழுப்பு உள் ளது என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது?**

கல்லீரலில் கொழுப்பு இருப்பதைக் கண்டறிய ஆய்வுகூடப் பரிசோதனைகளைச் செய்து பார்ப்பதன் மூலம் கண்டறிந்து கொள்ளலாம். முழுமையான இரத்தப் பரிசோதனை, கல்லீரல் செயற்பாடு பரிசோதனைகள், ஹெபடைடிஸ் A, ஹெபடைடிஸ் rp பரிசோதனைகள், ஸ்கேனிங், ஹீமோகுளோபின் பரிசோதனை, கொலஸ்ட்ரோல், அல்ட்ராசவுண்ட், CT ஸ்கேனிங் அல்லது மேக்னடிக் ரெசோ னன்ஸ் இமேஜிங் (MRI), எலாஸ்டோகிராபி, கல்லீரல் திசுப் பரிசோதனை என வெவ்வேறான மருத்துவப் பரிசோதனைகள் மூலம் இதனை இனங்காணலாம். முதலில் liver function test, Ultrasound scans of the abdomen எடுப்பதன் மூலம் மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

**இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?**

இதனை ஆரம்பத்தில் இனங்கண்டு அதற்கான சிகிச்சையை அளிக்காத போது நாளடைவில் கல்லீரல் வீக்கம் (Hepato megaly) கல்லீரல் அழற்சி (Hep atitis) மற்றும் கல்லீரல் சேதம் (cirrhosis) போன்றவற்றிற்கு இட்டுச் சென்று இறுதியில் இறப்புக்கு வழிவகுக்கும். குறிப்பாகச் சொல்லப் போனால் இது ஒரு அமைதியான கொள்ளை நோய் எனலாம்.

**கல்லீரல் கொழுப்பு எவ்வாறானவர்களுக்கு ஏற்படும்?**

எல்லா வயதினரிடையேயும் எல்லா பாலினரிடமும் ஏற்படலாம். விஷேடமாக சில நோய் நிலைமைகள் உள்ளவர்களிடம் ஏற்பட அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன. அதாவது, ஹைபர்கிளை சீமியா (hypergly cemia), அதிக இரத்தக் கொழுப்பு (dyslipidemea), தைரொய்ட், பிடியூட்டரி சுரப்பி, பாலிசிஸ் டிக் கருப்பை நோய், வளர் சிதை மாற்றங்கள், உள நோய் போன்றவர்களுக்கு ஏற்படலாம்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

சோர்வு, பசியின்மை, தோல் அரிப்பு, கண் மற்றும் சருமம் மஞ்சள் நிறமாதல், திடீர் எடைக்குறைவு, எளிதில் காயம் ஏற்படுதல், உடல் வீக்கம், அடிவயிற்றின் மேல் வலது பக்கத்தில் வலி அல்லது அசௌகரியம் ஏற்படும், அதிக வியர்வை, வலது தோள்பட்டை வலி, மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் தென்படும்.

**நீங்கள் குறிப்பிட்ட அறிகுறிகளில் ஏதாவது தென்பட்டால் உடனடியாக வைத்தியரின் உதவியை நாடவேண்டுமா? அல்லது தாமதித்து நாடமுடியுமா?**

வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் சிறந்தது. கல்லீரல் கொழுப்பு பல படிகளைக் கொண்டு பெயரிடப்படும். அதன் படிகளை வைத்தே அதன் தீவிரத்தன்மையும் கருத்திற்கொள்ளப்படும். ஆயினும் ஆரம்ப நிலையிலே அதனைக் குணப்படுத்திக் கொள்வது சாலச்சிறந்தது.

**கல்லீரலில் கொழுப்பு உள்ளவர்கள் செய்ய வேண்டியது என்ன?**

ஆரம்பத்திலே முறையான சிகிச்சையைப் பெற வேண்டும். மூலிகை மருத்துவத்தில் அதிகமான மருந்துப் பொருட்கள் இதனைக் குணப்படுத்த இருக்கின்றன. ஈரலைப் பாதிக்கும் மருந்துகள் அதிகளவு எடுப்பதைத் தவிர்த்தல், அதிக இனிப்புப் பண்டங்கள் எடுப்பதைத் தவிர்த்தல், நச்சுத்தன்மையான பதார்த்தங்கள் உடலில் செல்வதைத் தவிர்த்தல், பார உலோகங்கள் உடலில் செல்வதைத் தடுத்தல். தினமும் உடற்பயிற்சி செய்வது நன்று, அதிக கொழுப்பு உணவுகளைத் தவிர்க்க வேண்டும், சாப்பிட்டு முடிந்ததும் சிறிதளவு சுடுநீர் அருந்துவது நன்று விலங்குகளின் ஈரலை உணவில் சேர்க்கக் கூடாது.

**இந்த நோய்பற்றி நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

ஈரல் வயிற்று உறுப்புகளில் மட்டுமின்றி நமது சருமத்திலும் கொழுப்பு இருக்கிறது. இந்தக் கொழுப்பு அதிகமாயிருப்பதற்கு கொழுப்பு உணவுகள் மட்டும் காரணமல்ல. நாம் பிரதானமாக உண்ணும் அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவுகளை அதிகளவில் உண்பதும் ஒரு காரணமாகும். அதாவது சோறு, இடியப்பம், பிட்டு போன்ற எல்லா மாச்சத்து உணவுகளை அதிகமாக உண்கிறோம். எனவே நாம் எடையைக் குறைக்க வேண்டுமாயின் மாச்சத்துள்ள உணவுகளின் அளவைக் குறைக்கவேண்டும்.

வெறும் வயிற்றில் அதிக சக்கரை உணவை எடுக்கக் கூடாது. இரசாயன குளிர்பானங்களை அருந்தக் கூடாது.

கல்லீரல் நோயாளிகள் அசைவ உணவுகளைச் சாப்பிடக்கூடாது. சோடா, உப்பு கலந்த உணவுகள், எளிதில் அஜீரணமாகாத உணவுகள், வேர்க் கடலை மற்றும் கிழங்கு வகைகளைத் தவிர்க்க வேண்டும். கல்லீரல் அழற்சி உள்ளவர்களுக்கு சைவ உணவே சிறந்தது. இரவு தூங்கமுன் சுடுநீர் அருந்துதல், மிளகும் எலுமிச்சை சாறும் சேர்த்த நீரை அதிகமாக எடுத்துக்கொள்ளல், பூண்டு, கருவாப்பட்டை தினசரி சமையலில் சேர்த்துக்கொள்ளல் குறிப்பாக, வீட்டில் தயாரித்த உணவுகளை எடுப்பது மிகவும் நல்லது. உணவில் காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். தினமும் ஏதாவது பழங்களை உண்ண வேண்டும்.

உடற்பருமன் உள்ளவர்கள் எடையைக் குறைக்க முயற்சி செய்யவேண்டும். உண்ணும் உணவின் கலோரி அளவைக் குறைப்பதும், உடற்பயிற்சியை அதிகரிப்பதும் நல்லது.

“மறைந்து நின்று மனித மனதையும், மனிதனையும் கொல்லும் ஒரு நோயே கல்லீரல் கொழுப்பு நோயாகும்” நாம் சம்பாதிப்பது பசியைப் போக்க மாத்திரமல்ல எம் உடலையும் ஆரோக்கியத்தையும் பேணிப்பாதுகாப்பதற்கே! ஆகும். அந்தப் பணத்தைக் கொண்டு விஷத்தை வாங்கி உண்ணாமல் முடிந்தளவு ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பேணுவதோடு மது போன்ற போதைப் பொருட் பாவனையிலிருந்தும் நம் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பதோடு, எமது சந்ததியினரையும் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். இதுவே எமது ஆரோக்கிய வாழ்க்கை முறையாகும். ■

# கோழி மேய்க்கிற.......

வேதநாயகம் தபேந்திரன்

**கோழி - 01**

“சிவம் அண்ணை, சிவம் அண்ணை..........” நாதன் தயங்கித் தயங்கித் தனது தச்சுத் தொழிற்சாலை முதலாளியை அழைத்தார்.

அவரும் கேட்டும் கேளாதவர் போல நடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் கழித்துக் கண்களால் ஏன் என்பது போலக் கேள்வி கேட்டார்.

“சிவம் அண்ணை நாளைக்கு நல்லூர் தேர். அதால மனுசி பிள்ளையளோடை கோயிலுக்குப் போக லீவு வேணும்” என்றான் நாதன்.

“ஓம் கோயிலுக்குத் தாராளமாகப் போகலாம். காலம வெள்ளண ஆறு மணிக்குப் போ. ஏழு மணிக்குத் தேர் இழுக்கத் தொடங்குவினம். அப்பிடியே முருகனைப் பார்த்துக் கும்பிட்டுப் போட்டு எட்டு மணிக்கு வீட்ட போய்ப் பிறகு ஒன்பது மணிக்கு இஞ்ச வேலைக்கு வா ” என்றார் முதலாளி சிவத்தார்.

“அண்ணை பள்ளிக் கூடமும் தேருக்காக லீவு. பிள்ளையள் சின்னஞ் சிறுசுகள். தங்கட பள்ளிக் கூடப் பிள்ளையள் தாய் தேப்பனோட வருங்களாம். அது போல நாங்களும் போக வேண்டுமெனப் பிள்ளையள் விரும்புதுகள் ....” எனக் கெஞ்சும் குரலில் நாதன் சொன்னான்.

“இஞ்ச பார் நாதன் எனக்கு ஓடர் கனக்க இருக்குது. நான் சொன்னபடி வேலை செய்யிறதெண்டால் செய். இல்லாட்டிக் கணக்கை முடிச்சுக் கொண்டு இண்டையோட வீட்ட போ.....” எனச் சிவத்தார் ஈரல் கருகுமாப் போல ஒரு உறுமல் உறுமிச் சொன்னார்.

தன்னைப் போன்ற ஏழைகளின் இயலாமையை எண்ணி மனதில் அழுதபடி சீவுளியை எடுத்து ரகசியமாகக் கண்ணீரைத் துடைத்தபடி வேலையைத் தொடர்ந்தான்.

**கோழி - 02**

அது ஒரு பிரபலமான ஹாட்வெயார் கடை. லிங்கம் அங்குதான் வேலை செய்கிறான். காலை 8 மணிக்குக் கடை திறந்தால் மாலை 6 மணிக்குப் பூட்டுவது என்ற வாய்மொழி ஒப்பந்தத்தின் பேரில் முதலாளி ஆட்களை வேலைக்குச் சேர்த்தார்.

“ தம்பியவை இப்ப நேரம் அஞ்சு மணி. இதில ஒருக்கா தின்னவேலிப் பக்கம் போய்ற்று டக்கெண்டு வந்திடுவன். நான் வந்த உடன கடையைப் பூட்டுங்கோ....”

எனச் சொல்லி விட்டுச் சைக்கிளில் புறப்பட்டார். அனுபவம் வாய்ந்த கடை ஊழியர்கள் தமது தலைவிதியை எண்ணிக் கவலைப்பட்டனர். புதிதாக வேலைக்குச் சேர்ந்த செந்தில் மனக் கணக்குப் போட்டான் “ஐயா ஆறுமணிக்கு பூட்ட வந்திடுவார். இரவு ஏழு மணிக்கு ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். மனுசி பிள்ளையுடன் போகலாம்”

நேரம் 6 மணியை அடைந்தது. ஐயாவைக் காணவில்லை. இந்தா வருவார், அந்தா வருவார் எனப் பதட்டத்துடன் வருகிற வாடிக்கையாளரைக் கவனித்துக் கொண்டே வெளி வீதியைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஐயா வருவதாகக் காணவில்லை. ஐயா இரவு ஏழு மணி போல வந்தார். போன இடத்தில் அலுவல் முடிய நேரமாயிட்டுது எனச் சப்புக் கொட்டினார்.

செந்தில் ஏமாற்றத்துடன் கடையைப் பூட்டி விட்டு வீட்டிற்குப் போனான். அடுத்த நாளும் மாலை 5 மணி போல ஐயா வேறொரு றீல் கதை விட்டார். செந்தில் அதையும் நம்பினான். ஐயா அன்றும் இரவு ஏழரை மணி தாண்டத்தான் வந்தார். செந்திலுக்கு முழுமையான ஏமாற்றமாகப் போய் விட்டது. வேலைக்குச் சேர்க்கும் போது மாலை 6 மணியுடன் கடை பூட்டுவதாகச் சொன்னாரே ஏன் இப்படி நடக் கிறாரென மனம் தாங்க முடியாமல் சக ஊழியர்களைக் கேட்டான். தம்பி நீ புதுசு. முதலாளிகளின் குணம் இப்படித்தான் என்றார்கள். செந்தில் தனது தலைவிதியை நொந்து கொண்டான்.

**கோழி - 03**

“ஐயா நாளைக்கு மேதினமெனக் கலண்டரில் சிவப்புத் திகதி காட்டுது. அப்ப தொழிலாளர் தினத்துக்கு எங்களைப் போன்ற தொழிலாளர்களுக்கு லீவு தானே.” ரூபன் ஆர்வ மிகுதியால் முதலாளி செல்லத்துரையரைப் பார்த்துக் கேட்டான்.

அவர் சிரித்துக் கொண்டே “தம்பி இந்தக் கலண்டரில் காட்டும் சிவப்புத் திகதி எல்லாம் அரசாங்க உத்தியோகத்தருக்குரிய லீவு நாட்கள்தான். அவை உங்களுக்கு இல்லை ” என்றார்.

ஏன் ஐயா தொழிலாளர் தினம் என்பது எங்களைப் போன்ற தொழிலாளர்களுக்கு உலகமெங்கும் வரும் லீவு தானே என அப்பாவித் தனமாகக் கேட்டான். தம்பிக்கு எங்கட யாவாரியளின்ரை நடைமுறை தெரியவில்லை. உப்பிடி எண்டால் சரி வராது வேலையால் நிற்கத்தான் வேணும் என்றார்.

ரூபன் பேச்சு மூச்சற்று மௌனம் காத்தான். என்ன செய்வது ஒரு சாண் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டுமல்லவா? அடுத்த நாள் மே தினம். முக்கால் வாசிக்கு மேற்பட்ட கடைகள் அந்த நகரத்தில் பூட்டப்பட்டிருந்தன. செல்லத்துரையர் போன்ற மனச்சாட்சி இல்லாத, பணம் பணம் என ஓடுவோரின் கடைகள் சில மட்டுமே திறந்திருந்தன. சட்டத்தின் ஆட்சி எதுவும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை.


**கோழி - 04**

கண்ணனுக்கு உடல்நிலை சரியில்லை. இயலாது வீட்டில் நின்றால் என்னவென யோசித்தான். என்ன செய்வது? முதலாளியின் குணம் தெரிந்து கடைக்கு வேலைக்கு வந்தான். காய்ச்சல் வாட்டியது. அனுங்கி அனுங்கி இயலாத உடல் நிலையுடன் வேலை செய்தான். கெட்டித் தனமாகப் படித்து வந்தாத்தான் விடலை வயதில் காதல் படலை தட்ட இரு வீட்டாரும் நெருப்பெடுத்துச் சண்டை பிடிக்க ஜெயந்தியை இழுத்துக் கொண்டு ஓடிக் கல்யாணம் செய்ததை நினைத்துப் பார்த்தான். மனைவிக்கும் நான்கு பிள்ளைகளுக்கும் கால்வயிற் றுக் கஞ்சியாவது ஊற்ற வேண்டுமே?

தனது வகுப்பில் படித்த ஆதவன், கிருபா, சுகந்தன் போன்றவர்கள் ஒழுங்காகப் படித்துப் பல்கலைக் கழகம் சென்றதையும் பட்டம் பெற்று அரசாங்க உத்தியோகம் பார்ப்பதையும் சம்பளக் கடன், சனி, ஞாயிறு அரசாங்க விடுமுறைகள் யாவற்றையும் பெற்றுக் கொண்டு மிக வசதியாக வாழ்வதை நினைத்துக் கொண்டான். தன்விதியை நொந்து கொள்வதைத் தவிர வேறு வழிதெரியவில்லை.

**கோழி - 05**

முருகமூர்த்திக்கு வயது 64. வர வர உடல்நிலை இயலாமல் வந்தது. திடீரென ஒரு நாள் முழுசாக ஏலாமல் போய் விட்டது. கடைக்கு வேலைக்குப் போக முடியவில்லை. முதலாளி ஆள் விட்டுப் பார்த்தார். அவரால் வர முடியவில்லை என அறிந்ததும் வேறு ஒரு ஆளை வேலைக்கு எடுத்தார்.




ஞாயிற்றுக்கிழமையன்று முதலாளி முருகமூர்த்தியைப் போய்ப் பார்த்தார். நெஸ்ரமோல்ற்றின் ஒன்று, சீனி,தேயிலை, பிஸ்கற் பக்கெற்றுடன் அந்த மாதச் சம்பளத்துடன் மேலதிகமாக ஒரு பத்தாயிரம் ரூபா காசைக் கொடுத்தார். இரக்கமாக நாலுகதை சொன்னார். தனது தகப்பனிடமும் தன்னிடமும் முப்பது வருசங்களுக்கு மேல் விசுவாசமாக வேலை செய்த ஒரு தொழிலாளிக்குத் தாங்கள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என எதுவுமே கட்டவில்லை என்ற குற்ற உணர்வு எதுவுமின்றி முதலாளி போய்விட்டார்.

சகோதரங்களாகப் பிறந்த இரண்டு குமருகளுக்கு உழைத்துக் கொடுத்து விட்டு நாற்பதில் கல்யாணம் கட்டிப் பிறந்த தனது பிள்ளைகளை யார் உழைத்துப் பார்ப்பது. அந்தக் கெட்டிக்காரப் பிள்ளைகள் தொடர்ந்து படித்து முன்னேற என்ன வழியென நினைத்து முருகமூர்த்தி கண்ணீர் விட்டார். அரசாங்க உத்தியோகம் பார்த்தால்தான் சீவிக்கலாமோ? தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்று இங்குள்ள ஆட்களுக்குச் சீவிக்க இயலாதோ? இப்படியெல்லாம் கூறுவதற்கு புலம்பெயர் தேசங்களில் ஒரு பகுதியினர் உள்ளனர். இங்கு தனியார்துறையில் வர்த்தக சமூகம் எப்படி இருக்கிறது, இயங்குகிறதென நிறைய நிறைய உண்மைக் கதைகள் உள்ளன. தொழில் பாதுகாப்பு, தொழிலாளர் உரிமைகள் எதுவுமில்லாத தனியார் துறையில் விருப்பமில்லாமல் வேறு தெரிவுகள் இல்லாமல் வேலைக்குப் போவார்கள்தான் அதிகம். இங்கு தொழிலாளர் உரிமைகள், நலன்கள் தொடர்பான சட்டங்கள் பெருமளவில் வெறும் பேப்பராகத்தான் உள்ளது. இதனைத் தெரிந்து தான் எமது முன்னோர்கள் “கோழி மேய்க்கிற வேலையெண்டாலும் கொர்ணமேந்து வேலையாக இருக்க வேண்டும்” எனக் கூறிச் சென்றுள்ளார்கள்.

உண்மையான மாற்றத்திற்காக உண்மையாக உழைக்க யார் முன்வருவார்கள்?

■

> **ஐயா நாளைக்கு மேதினமெனக் கலண்டரில் சிவப்புத் திகதி காட்டுது. அப்ப தொழிலாளர் தினத்துக்கு எங்களைப் போன்ற தொழிலாளர்களுக்கு லீவு தானே. ரூபன் ஆர்வ மிகுதியால் முதலாளி செல்லத்துரையரைப் பார்த்துக் கேட்டான். அவர் சிரித்துக் கொண்டே “தம்பி இந்தக் கலண்டரில் காட்டும் சிவப்புத் திகதி எல்லாம் அரசாங்க உத்தியோகத்தருக்குரிய லீவு நாட்கள்தான். அவை உங்களுக்கு இல்லை” என்றார்.**

# பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய விலங்குப்பறவை

இக்பால் அலி




பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய விலங்குப்பறவை என்னும் ஹைக்கூ கவிதைத் தொகுதியொன்றை சகோதரி இஸ்மாலிகா எனக்கு அனுப்பி இருந்தார். சகோதரி இஸ்மாலிகா இந்நூலாரியர் பற்றிப் குறிப்பிடும் போது இந்நூலாசிரியர் எனக்கு பள்ளிக்கூடத்தில் தமிழ் மொழி அறிவு ஊட்டிய ஆசான். என்னுடைய ஆரம்ப இலக்கிய முயற்சிகளுக்கு மிகவும் தூண்டுதலாக இருந்தவர். பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய “விலங்குப்பறை” என்னும் இக்கவிதை நூலை கனடா வெள்ளி அச்சகப் பதிப்பகம் வெளிக் கொணர்ந்துள்ளது.

இந்நூல் வெள்ளிப்பதிப்பகத்தின் 7 ஆவது நூலாகும் என நூலின் பதிப்பாசிரியர் முகுந்தன் சிவதாசன் குறிப்பிட்டுள்ளார். ஈழத் தமிழர்களின் புலம்பெயர் தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர் இலக்கியம் என்ற புதிய பகுப்பை உருவாக்கியிருக்கிறது. பண்டிதர் ச.வே. பஞ்சாரட்சரம் தம் கல்வி மற்றும் இலக்கியப் பணியை மலையகம், வடக்கு என உள்ளிட்ட பல பாகங்களில் செய்தாலும் தமது ஓய்வு நிலைக் காலத்தில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் ஒருவர். அவரது ஹைக்கூ கவிதைகளில் தமது வாழ்வின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளையும் போர்க்கால வாழ்வையும் ஆன்மீக நம்பிக்கையினையும் தம் ஹைக்கூ கவிதைகளின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிதைகள் நான்கு அலகுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் இறை ஓம்பல், தாயகம் ஓம்பல், வாழ்வு ஓம்பல், உண்மை ஓம்பல் என நூலில் பொருளடக்கத்தில் அடையாளப்படுத்தி 200 ஹைக்கூ கவிதைகள் உள்ளன.

இந்நூலாசிரியர் பற்றி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் வழங்கிய நயவுரையில் ஆழ்ந்த இறைபக்தியும் இனப்பற்றும் கொண்டவர். 100 க்கும் அதிகமான நூல்களை எழுதி வெளியிட்டவர். ஹைக்கூ கவிதை நூல் ஓர் உன்னதமான படைப்பு மூன்று வரிகளில் அன்றாட நிகழ்வுகளை அனுபவங்களை பாமர மக்களும் விளங்கும் வண்ணம் ஆழ்ந்த கருத்துக் கொண்டவையாக எழுதியுள்ளார் என்று அவர் தமது நயவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சா.ஜெயராசா தனது அணிந்துரையில் “ தமிழ் செய்யுள் இலக்கண மரபில் ஆழ்ந்து ஊறிய பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் ஹைக்கூ புனைவதற்கு வந்திருத்தல் புதுமை நோக்கிய பழைமை நீட்சியாகின்றது.

“புலம் சிதறிய நிலையும், தாயக வாழ்வின் நுண்கூறுகளின் மீட்பும். பெருநிலை அழுத்தங்களால் நிகழும் அதிர்வுகளும் அவரின் ஹைக்கூ கவிதைகளின் உட்பொதிவுகளாகின்றன” என்று தமது அணிந்துரையில் சுட்டிக்காட்டி கவிஞரின் அதிசயிக்கத்தக்க கவிவரிகளை நுண்ணாய்வு செய்து பேராசிரியர் சா. ஜெயராசா மிகவும் கூர்மையான அணிந்துரையொன்றை வழங்கியுள்ளார்.

> **அரச அதிகாரங்களைக் கைப்பற்றியவர்கள் தம் தாய் நாட்டின் நிலங்களை அந்நிய நாட்டுக்கு விற்பனை செய்வதனை பெரும் குறையாக மதிப்பிடுகின்றார் கவிஞர். புலம்பெயர் நாட்டில் கவிஞர் வாழ்ந்தாலும் தம் தாய் நாட்டின் மீது அதிக பற்றுறுதி கொண்டுள்ளார் என்று கூறலாம். நாட்டின் துயரம் தாங்கிய நிலையினை இக்கவிதையின் மூலம் நாடு பற்றிய புரிதலின் யாதார்த்த தன்மையை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர். இக்கவிதை சமகாலத்தைப் பற்றிப் பேசுகிறது. இத்தொகுதிக்கு முத்தாய் இக்கவிதை அமையும் என நான் கருதுகின்றேன்.**

**இனிப்பனவும் கசக்கும்**
**என்றுமே கசக்காத ஒன்று**
**பக்தி இன்பம் தான்.**

இது இந்நூலில் ஒன்பதாவது ஹைக்கூ கவிதையாகும். இந்தக் கவி வரிகளின் பார்வையின் பின்னால் இறை பக்தியையும் பகைவுணர்வையும் ஒப்பிட்டு கனிவான உயிர்த்துடிப்புள்ள சாதாரண எளிய சொற்களைக் கொண்டு மிக அருமையாகக் கவிஞர் எழுதியுள்ளார். கணவன் மனைவி இருவரும் எவ்வளவுதான் அன்பு கொண்டு மிக நெருக்கிப் பழகினாலும் கசப்பு வராமல் இருந்ததில்லை. ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் இறைவன் மீது பக்தி கொண்டவன் வழி தவறமாட்டான். இறை நேசத்துடன் தினமும் இறைவனை வழிபடுவான். மனிதாபிமானம், கருணை, காருண்யம், நீதி, நேர்மை, வாய்மை முதலிய பல்வேறு குணங்களை அணிகலன்களாக அணிந்து தன் ஆன்மாவின் பிரகாசத்திற்கு ஒளி விளக்காய் பிரகாசித்துக் கொண்டிருப்பான். தாய்ப் பால் கெட்டுப் போவதில்லை. எவ்வளவுதான் பசும் பால் சுவையாக இருந்தாலும் சற்று கவனமின்றி இருந்தால் பால் பொங்கி திரைந்து கெட்டுப் போய் விடும். ஆனால், இறைபக்தி என்பது என்றும் இனிப்பாகத் தான் இருக்கும் என்கிறார் கவிஞர்.

**நாத்திகன் சொல்லும்**
**தன்நம்பிக்கை வெற்றி தரும்**
**குருடன் வழிகாட்டல்**

இது கவிஞரின் பத்தாவது கவிதையாகும். மனிதனுக்கு உரித்தான நல்வாழ்வை மத நம்பிக்கையற்றவர்களால் உருவாக்க முடியாது. மனிதருள் மாணிக்கமாக ஒளிவீசி வாழ்வின் பெருமைகளை அடைய இறை பக்தி ஒன்றினால் மட்டும்தான் முடியும். உயிர்கள் அனைத்திற்கும் இறைவனால் மட்டுமே வழிகாட்ட முடியும். நாத்திகன் காட்டும் வழி சிலவேளை வெற்றி பெறலாம். ஆனால் அது ஒரு தவறான வழிகாட்டலாகும் என்ற விடயத்தைத் தன் கவிதையின் வெளிப்பாடாக உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**இடர் வரும் போது**
**விளிம்பிலும் மீளலாம் எனும்**
**நம்பிக்கை காப்போம்.**

இந்நூலில் 37 ஆவது கவிதையாகும். பொதுவாக இயற்கை அனர்த்தங்களின் போதும் செயற்கை அனர்த்தங்களின் போதும் முற்றாக அழிந்து போகாமல் இறுதிக் கட்டத்திலாவது அந்தத் துன்பத்தில் இருந்து மீள் எழுச்சி பெற வேண்டுமாயின் இறை மீதான உறுதியான நம்பிக்கை அவசியம். இதனை நாம் வாழக் கற்றுக் கொள்வதும் நமது வாழ்விலும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஆகும். அதேபோல எந்தவொரு இடர் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து வெற்றி இலக்கை அடைய வேண்டும். எந்த விதமான தடுமாற்றமும் இல்லாமல் குற்றம் குறைகள் இல்லாத அறிவால் சிந்தித்து விளிம்பு நிலையில் இருந்தாலும் எல்லா இன்பத்தையும் மீட்சி பெற்று அடைமுடியும் என்பதில் சந்தேகமே இல்லை. நம்பிக்கை ஒன்றுதான் வெற்றி என்று கவிஞர் ச. வே. பஞ்சாட்சரமின் கவிதையின் வெளிப்பாடானது பொதுவான வாழ்க்கை கண்ணோட்டமாக இருந்தாலும் நொந்து போன மனதிற்கு தெம்பூட்டுவதாக அமைந்துள்ளது. மிகவும் அற்புதமான கவிதை.

**ஊர் வாழவே செத்தான்.**
**அவன் குழந்தை பட்டினியால்**
**ஊர் பார்க்கவே செத்தான்.**

இது 55 ஆவது கவிதையாகும். இக்கவிதை போர்க்காலத்தை சித்தரிப்பதாக அமைந்துள்ளது. ஈழத்துப் போரின் தாக்கம் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரத்தையும் விட்டு வைக்கவில்லை. யுத்தத்தின் காரணமாக உயிர்கள் இழந்தும் கை, கால், கண் இழந்தும் உடல் சிதறியும் அழிந்து போன துயரத்தை விபரிக்கின்ற கவிதையே. போராளி தன் ஊருக்காக உயிரை மாய்த்துக் கொண்டான். அவள் மனைவி விதவையாகின்றாள். அவன் குழந்தை பட்டினியால் சாகின்றாள். அதைக் கேட்க, பார்க்க ஆளில்லை என்று அவலக் குரல் எழுப்புகின்றார் கவிஞர். மாறாக இராணுவத்திலும் போரின் காரணமாக எத்தனையோ படைவீரர்கள் உயிரிழந்துள்ளனர். மனைவி விதவையாகின்றாள். அந்தக் குடும்பத்தின் நிலைமை என்ன ? என்கின்ற கேள்வியினையும் எழுப்பக் கூடிய போர்க்காலக் கவிதை என்பதையும் மனங் கொள்ளுதல் வேண்டும்.

**ஆயிரம் பொய்யுறுதி**
**அத்தனையும் வீணே இன்று**
**நாடே அன்னியனிடம்**

இது நூலில் 57 ஆவது ஹைக்கூ கவிதையாகும். கவிஞர் உண்மையிலேயே அரசியலை நையாண்டியுடன் விமர்சனம் செய்கின்றார். அரச அதிகாரங்களைக் கைப்பற்றியவர்கள் தம் தாய் நாட்டின் நிலங்களை அந்நிய நாட்டுக்கு விற்பனை செய்வதனைப் பெரும் குறையாக மதிப்பிடுகின்றார் கவிஞர். புலம்பெயர் நாட்டில் கவிஞர் வாழ்ந்தாலும் தம் தாய் நாட்டின் மீது அதிக பற்றுறுதி கொண்டுள்ளார் என்று கூறலாம். நாட்டின் துயரம் தாங்கிய நிலையினை இக்கவிதையின் மூலம் நாடு பற்றிய புரிதலின் யாதார்த்த தன்மையை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர். இக்கவிதை சமகாலத்தைப் பற்றிப் பேசுகிறது. இத்தொகுதிக்கு முத்தாய் இக்கவிதை அமையும் என நான் கருதுகின்றேன்.

**அழுதுருகிப் பிரசங்கம்**
**வேண்டா நல்லார் வேர்கொல்**
**வெறிகள் அடிநெஞ்சில்**

101 ஆவது ஹைக்கூ கவிதை இது. பொதுவாக எல்லோரும் போல் மேடைகளில் அறக்கருத்துகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் பீரங்கிப் பிரச்சாரம் செய்வார்கள். அவர்களுக்குச் சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கும். ஆனால்,மனதில் விஷத் தன்மையும். அடுத்தவர்களின் குடியைக் கெடுப்பதிலும் பிரச்சினைகளையும் பிளவுகளையும் காழ்ப்புணர்ச்சியினையும் பகைமையுணர்வினையும் ஏற்படுத்தி வேசம்போடும் கூட்டத்தினரை ஆற்றலும் அனுபவமும் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் நன்கு அறிந்து வைத்துள்ளார். இத்தகைய வேடதாரிகள் சமூக அங்கீகாரத்துடன் உலா வருகின்றார்கள். அவர்களது காரிங்களை நிறைவேற்றிக் கொள்ள எடுக்கும் போராட்டங்கள் நிறையவே முன்னெடுக்கின்றார்கள். இந்த முகங்களுக்குத்தான் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இவர்களை நம்ப வேண்டாம். இரு முகங்களுடன் பழகுபவர்கள் என்னதான் இருந்தாலும் இவர்களது கண்ணீரையோ பேச்சையோ ஆராய்ந்து பார்த்துத்தான் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இப்படி இம்மாதிரியான வாசகர்களுக்குத் தம் கவிதைகளில் நம்பிக்கையூட்டக் கூடிய நல்ல அறக்கருத்துக்களைக் கொண்ட நல்ல கவிதைகளை இந்நூலில் பதிவு செய்துள்ளார் கவிஞர் ச.வே. பஞ்சாரட்சரம்.

பண்டிதர் க.வே. பஞ்சாரட்சரம் கண்டி புசல்லாவையில் ஆசிரியராகவும் கண்டி புசல்லாவ இலக்கிய வட்டத்தை உருவாக்கி இலக்கியப் பணி புரிந்தாலும் இந்நூலில் மலையக மக்கள் குறித்த கவிதைகள் எவையும் இடம்பெறவில்லை. அவர் மலையக மண்ணில் வாழ்ந்தமைக்குச் சான்றாக ஓரிரு கவிதைகளில் இந்நூலில் பதிவு செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் எனக் கருதுகின்றேன்.

அவருக்கு 85 வயது எட்டிய போதிலும் அவர் இன்னும் நீண்ட காலம் உடல் ஆரோக்கியத்துடன் அவரது பேனை உயிர்ப்பெற்று எழுத வேண்டும் என்பது எனது அவாவாகும். ■

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 06

## உடனடி உதவிக்கரம் நீட்ட வேண்டிய பாடசாலைகள்

அத்தியாயம் - 05

பகுதி - 01

கனத்த இதயத்துடன் கலங்கிய கண்களுடன் மீண்டும் ஒரு கட்டுரையை எழுதுகிறேன்.

அத்தனை மட்டங்களிலும் ஒரு சமூகப் புரட்சி உருவாகினால்தான் எந்த ஒரு சாதனையும் நிகழ்த்தப்படலாம் என்ற அடிப்படையில், அண்மை கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளும் அதனைத் தொடர்ந்து பலரால் முன்வைக்கப்பட்டு வரும் கரிசனைகளும் இலங்கையின் வடக்குக் கிழக்கு பிராந்திய தமிழ் பேசும் மக்களிடையே வழமைக்கு மாறான ஒரு விழிப்புணர்வு அலையை ஏற்படுத்தி வருகின்றது. பலருக்கு அதிர்ச்சியூட்டும் வண்ணம் கல்விப்புலத்தில் அதாள பாதாளத்தில் விழுந்துள்ள பழம் பெரும் கல்லூரிகள் உள்ளிட்ட பாடசாலைகளைப் பகிரங்கமாக அடையாளப்படுத்தி (இணைக்கப்பட்டுள்ளது), சமூகம் சார்ந்து அப்பாடசாலைகளை எப்படி மீட்டு எடுக்கலாம் என்பதை சில புள்ளிவிபரங்களுடன் அலசுகிறது இந்தக் கட்டுரை.

என் முன்னைய இரண்டு அத்தியாயங்களில் பரிந்துரைத்தது போல, இவ்வளவு நாளும் Top results என்று சொல்லப்படும் மேல் மட்ட அடைவுகளை வைத்தே சாதனைகள் அளவிடப்பட்ட கலாசாரம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி கீழ்மட்ட அல்லது குறைந்த பட்ச சித்தி மட்ட அடைவுகளை அளவு கோல்களாகப் பார்க்க வேண்டும் என்ற சிந்தனைப் புரட்சி உருவாகி அவ்வாறான கீழ்மட்ட அடைவு மட்டங்களின் புள்ளி விபரங்களும் சமூக வெளியில் பகிரங்கமாக வெளியாகி வருகின்றன. வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இந்தப் பரிந்துரைகளின் யதார்த்தத்தை உணர்ந்து, பல புள்ளி விபரங்களை பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றது. இனி வரும் காலங்களில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான பல முயற்சிகள் கல்விப்புலம் சார்ந்தவர்களால் முடுக்கி விடப்பட்டிருப்பதும் சிறப்பு. அவ்வாறு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பகிரங்கப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களைத் தான் கனத்த மனதுடன் இந்தப் பதிவில் பயன்படுத்தி உள்ளேன் நிற்க.

சரித்திரங்கள் பல படைத்த எம் தமிழ் சமூகத்தை!! பழைய மாணவர்களே!! வடக்கு மாகாணத்தில் சாதாரண தர மாணவர்களைக் கொண்ட 480 பாடசாலைகளில் 16 பாடசாலைகளில் ஒரு மாணவர் கூட சாதாரணதர பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை.

School Wise Analysis of qualified for A/L (3C 3S with Mathematics and First Language)
0 %

| S.No. | School | Fail # | Pass # | Total | % | Zone |
|---|---|---|---|---|---|---|
| 1 | J /KONDAVIL PARAMASOTHY VIDYALAYA, | 4 | | 4 | 0.00 | Jaffna |
| 2 | J /ST. MARY'S VIDYALAYA, | 12 | | 12 | 0.00 | Jaffna |
| 3 | J /ST. ROCHE'S R.C. VIDYALAYA, | 7 | | 7 | 0.00 | Jaffna |
| 4 | J /NUFFIELD SCHOOL, | 11 | | 11 | 0.00 | Thenmarachchi |
| 5 | MU/KOOLAMURIPPU G.T.M.SCHOOL, | 5 | | 5 | 0.00 | Thunukkai |
| 6 | J /ALVAI AMBAL VIDYALAYA, | 3 | | 3 | 0.00 | Vadamarachchi |
| 7 | J /KADDAIVELY YAKKARU VINAYAGAR V., | 6 | | 6 | 0.00 | Vadamarachchi |
| 8 | J /SRI NARATHA V., | 4 | | 4 | 0.00 | Vadamarachchi |
| 9 | J /KANKESANTHURAI MAHA VIDYALAYA, | 1 | | 1 | 0.00 | Valikamam |
| 10 | J /KULAMANGAL R.C.VIDYALAYAM | 6 | | 6 | 0.00 | Valikamam |
| 11 | J /NUNASAI VIDYALAYA, | 4 | | 4 | 0.00 | Valikamam |
| 12 | J /PANDATERUPPU JACINTHA R.C.T.M.S. VIDYALAYA, | 6 | | 6 | 0.00 | Valikamam |
| 13 | J /UDUVIL MANN'S M.V., | 2 | | 2 | 0.00 | Valikamam |
| 14 | J /VEEMANKAMAM M.V., | 11 | | 11 | 0.00 | Valikamam |
| 15 | V /KOVILKUNCHUKKULAM G.T.M. SCHOOL, | 6 | | 6 | 0.00 | V.North |
| 16 | V /MARAVILUPPAI G.T.M.S., | 1 | | 1 | 0.00 | V.North |

பெருமை வாய்ந்த கல்லூரிகள் உள்ளிட்ட 67 பாடசாலைகளில் 25% இற்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே சித்தியடைய முடிந்துள்ளது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய 48 மாணவர்களில் வெறும் 12 பேர் மட்டுமே உயர்தரம் செல்லத் தகுதி பெற முடிந்துள்ளது. கணிசமான மாணவர் தொகைகளைக் கொண்ட (2 வகுப்புகளாக்கப்படக் கூடிய) கோண்டாவில் ராமகிருஸ்ணா, நாவாந்துறை R.C V, சாந்தபுரம் கலைமகள், இரணைதீவு R.C.T.M.S, ஜெயபுரம் மகா வித்தியாலயம், கொற்றாவத்தை A.M.T.M என ஏராளமான பெரிய பாடசாலைகளிலும் இந்த மிகப் பெரும்பாலான மாணவர்கள் சித்தி பெறமுடியவில்லை.

ஆக சற்று கவனித்தால் 156 பாடசாலைகளில் 60% மாணவர்கள் சித்தியடையவில்லை. அதாவது மேற்படி 156 பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 2787 மாணவர்களில் கிட்டத்தட்ட 2000 பேர் சித்தியடையவில்லை.

இன்னொரு விதமாகச் சொல்வதானால் வடக்கு மாகாணத்தில் சித்தியடைய முடியாமல் போன கிட்டத்தட்ட 6500 மாணவர்களில் கிட்டத்தட்ட 30 வீதமான மாணவர்கள் இந்தப் பாடசாலைகளில் இருந்துதான் சித்தி பெற முடியவில்லை. இந்தப் பாடசாலைகளை நோகடிப்பதோ, அவமானப்படுத்துவதோ என் நோக்கமல்ல. இந்த மாணவர்கள் சித்தியடைய முடியாமல் போனதற்கு மாணவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது. நான் இந்த 156 பாடசாலை மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் A பெற வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் 3C 3S என்ற சாதாரணதர சித்திக்குத் தேவையான அடிமட்ட அடைவைக் கூட அந்த மாணவர்கள் அடைய முடியவில்லையே! ஏன் இந்த நிலை? மாணவர்கள் முழுமையான காரணம் இல்லையாயின் யார்தான் காரணம் என்கிறீர்கள்? நீங்களும் நானும் இந்தச் சமூகமும்தான் இவர்களைச் சித்திபெற வைக்க வில்லை என்றுதான் சொல்வேன். கோபப்படாமல் வாசியுங்கள்!

School Wise Analysis of qualified for A/L (3C 3S with Mathematics and First Language)
9 % - 25%

| S.No. | School | Fail # | Pass # | Total | % | Zone |
|---|---|---|---|---|---|---|
| 1 | J /ALLAIPIDDY PARASAKTHI VIDYASALAI, | 17 | 2 | 19 | 10.53 | Islands |
| 2 | J /DELFT SAIVAPRAGASA VIDYALAYA, | 11 | 3 | 14 | 21.43 | Islands |
| 3 | J /KARAMPON SHANMUGANATHA M.V., | 10 | 1 | 11 | 9.09 | Islands |
| 4 | J /MANDAITIVU M.V., | 9 | 1 | 10 | 10.00 | Islands |
| 5 | J /SRI SITHIVINAYAGAR M.V., | 7 | 2 | 9 | 22.22 | Islands |
| 6 | J /VELANAI SARASWATHY VIDYALAYA, | 4 | 1 | 5 | 20.00 | Islands |
| 7 | J /VIYAVIL SAIVA VIDYALAYA, | 9 | 2 | 11 | 18.18 | Islands |
| 8 | J /ARIYALAI SRI PARVATHY V., | 7 | 2 | 9 | 22.22 | Jaffna |
| 9 | J /KANTHARMADAM SAIVA PIRAGASA V., | 4 | 1 | 5 | 20.00 | Jaffna |
| 10 | J /KONDAVIL PARAMASOTHY VIDYALAYA, | 4 | | 4 | 0.00 | Jaffna |
| 11 | J /KONDAVIL RAMAKRISHNA M.V., | 30 | 9 | 39 | 23.08 | Jaffna |
| 12 | J /KOPAY CHRISTIAN COLLEGE, | 36 | 12 | 48 | 25.00 | Jaffna |
| 13 | J /NALLUR STATION C.C.T.M.S., | 4 | 1 | 5 | 20.00 | Jaffna |
| 14 | J /NAVANTHURAI R.C.V., | 39 | 7 | 46 | 15.22 | Jaffna |
| 15 | J /NAYANMARKADDU MAHESWARY V., | 7 | 1 | 8 | 12.50 | Jaffna |
| 16 | J /OSMANIYA COLLEGE, | 12 | 2 | 14 | 14.29 | Jaffna |
| 17 | J /ST. JAMES M.V., | 11 | 3 | 14 | 21.43 | Jaffna |
| 18 | J /ST. MARY'S VIDYALAYA, | 12 | | 12 | 0.00 | Jaffna |
| 19 | J /ST. ROCHE'S R.C. VIDYALAYA, | 7 | | 7 | 0.00 | Jaffna |
| 20 | KN/IRANATIVU R.C.T.M. SCHOOL, | 24 | 4 | 28 | 14.29 | Kilinochchi |
| 21 | KN/JEYAPURAM M.V., | 25 | 8 | 33 | 24.24 | Kilinochchi |
| 22 | KN/KANAGAMBIKAIKULAM G.T.M.S., | 16 | 4 | 20 | 20.00 | Kilinochchi |
| 23 | KN/NACHCHIKUDA G.M.M. SCHOOL , | 20 | 2 | 22 | 9.09 | Kilinochchi |
| 24 | KN/SANTHAPURAM KALAIMAGAL , | 24 | 4 | 28 | 14.29 | Kilinochchi |
| 25 | KN/VALAIPPADU R.C.T.M. SCHOOL | 16 | 3 | 19 | 15.79 | Kilinochchi |
| 26 | MN/KAKKAYANKULAM M.M.V., | 12 | 4 | 16 | 25.00 | Madhu |
| 27 | MN/MULLIKKULAM G.T.M. SCHOOL | 8 | 1 | 9 | 11.11 | Madhu |
| 28 | MN/SINNAVALAYNKADDU G.T.M.S. SCHOOL, | 10 | 2 | 12 | 16.67 | Madhu |
| 29 | MN/HUNAIS FAROOK G.M.M. SCHOOL | 7 | 1 | 8 | 12.50 | Mannar |
| 30 | MN/PUTHUKKUDIYIRUPPU G.M.M.S., | 15 | 2 | 17 | 11.76 | Mannar |
| 31 | MN/ST. LAWRENCE R.C.T.M.S.VIDYALAYA, | 14 | 2 | 16 | 12.50 | Mannar |
| 32 | MU/EHETUGASWEWA VIDYALAYA, | 19 | 6 | 25 | 24.00 | Mullaitivu |
| 33 | MU/KOKKILAI G.T.M. SCHOOL, | 4 | 1 | 5 | 20.00 | Mullaitivu |
| 34 | J /ALLARAI GOVT. TAMIL V., | 4 | 1 | 5 | 20.00 | Thenmarachchi |
| 35 | J /NUFFIELD SCHOOL, | 11 | | 11 | 0.00 | Thenmarachchi |
| 36 | MU/KOOLAMURIPPU G.T.M.SCHOOL, | 5 | | 5 | 0.00 | Thunukkai |
| 37 | MU/THIRUMURUKANDY HINDU VIDYALAYAM, | 14 | 4 | 18 | 22.22 | Thunukkai |
| 38 | MU/THUNUKKAI G.T.M.S., | 9 | 2 | 11 | 18.18 | Thunukkai |
| 39 | J /ALVAI AMBAL VIDYALAYA, | 3 | | 3 | 0.00 | Vadamarachchi |
| 40 | J /ALVAI SRI LANKA V., | 9 | 3 | 12 | 25.00 | Vadamarachchi |
| 41 | J /CHEMPIANPATTU G.T.M. SCHOOL, | 14 | 3 | 17 | 17.65 | Vadamarachchi |
| 42 | J /KADDAIVELY YAKKARU VINAYAGAR V., | 6 | | 6 | 0.00 | Vadamarachchi |
| 43 | J /KOTTAVATTAI A.M.T.M. SCHOOL, | 30 | 8 | 38 | 21.05 | Vadamarachchi |
| 44 | J /NAGAR KOVIL M.V., | 9 | 3 | 12 | 25.00 | Vadamarachchi |
| 45 | J /SRI NARATHA V., | 4 | | 4 | 0.00 | Vadamarachchi |
| 46 | J /ANAICODDAI BALASUBRAMANIYA V., | 14 | 4 | 18 | 22.22 | Valikamam |
| 47 | J /ARUNASALAM VIDYALAYA, | 13 | 2 | 15 | 13.33 | Valikamam |
| 48 | J /CHULIPURAM NORTH ARUMUGAM VIDYALAYA, | 9 | 1 | 10 | 10.00 | Valikamam |
| 49 | J /KANDERODAI TAMIL KANDIAH V., | 9 | 2 | 11 | 18.18 | Valikamam |
| 50 | J /KANKESANTHURAI MAHA VIDYALAYA, | 1 | | 1 | 0.00 | Valikamam |
| 51 | J /KULAMANGAL R.C.VIDYALAYAM | 6 | | 6 | 0.00 | Valikamam |
| 52 | J /NAVALY M.V., | 9 | 2 | 11 | 18.18 | Valikamam |
| 53 | J /NUNASAI VIDYALAYA, | 4 | | 4 | 0.00 | Valikamam |
| 54 | J /PANDATERUPPU JACINTHA R.C.T.M.S. VIDYALAYA, | 6 | | 6 | 0.00 | Valikamam |
| 55 | J /THAVADY HINDU TAMIL MIXED SCHOOL, | 10 | 3 | 13 | 23.08 | Valikamam |
| 56 | J /UDUVIL MANN'S M.V., | 2 | | 2 | 0.00 | Valikamam |
| 57 | J /UDUVIL MURUGAMOORTHY V., | 4 | 1 | 5 | 20.00 | Valikamam |
| 58 | J /VEEMANKAMAM M.V., | 11 | | 11 | 0.00 | Valikamam |
| 59 | V /ATTAMBAGASKADA VIDYALAYA, | 3 | 1 | 4 | 25.00 | V.South |
| 60 | V /GAMINI NATIONAL SCHOOL, | 11 | 2 | 13 | 15.38 | V.South |
| 61 | V /MADUKANDA SRI DHARMARATHNA VIDYAYATHANA PIRIVENA, | 20 | 6 | 26 | 23.08 | V.South |
| 62 | V /RAJENDRAKULAM G.T.M.S. | 19 | 2 | 21 | 9.52 | V.South |
| 63 | V /SRINAGARAJA VIDYALAYA, | 32 | 10 | 42 | 23.81 | V.South |
| 64 | V /KOVILKUNCHUKKULAM G.T.M. SCHOOL, | 6 | | 6 | 0.00 | V.North |
| 65 | V /MARAVILUPPAI G.T.M.S., | 1 | | 1 | 0.00 | V.North |
| 66 | V /MATHIYAMADU VIVEKANANDA V., | 9 | 2 | 11 | 18.18 | V.North |
| 67 | V /SUNTHARAPURAM SARASWATHY VIDYALAYA, | 26 | 6 | 32 | 18.75 | V.North |

இந்தப் பாடசாலைகளில் படித்த எத்தனையோ பழைய மாணவர் இன்று உலகம் முழுவதும் இருக்கிறீர்கள். நல்ல நிலையில் இருக்கிறீர்கள்.... இந்தப் பாடசாலைகள்தான் உங்கள் வாழ்வுக்கு அத்திவாரம் போட்டுள்ளன. இந்தப் பாடசாலைகள் மனிதர்கள் வாழும் ஊர்களில் தானே இருக்கின்றன? அந்த ஊரில் ஏராளமான மனிதர்கள் வாழ்கிறார்கள்தானே? அவர்களில் கல்வி மீது அக்கறை கொண்ட சிலராவது இருப்பார்கள் அல்லவா? அந்த ஊர்களில் கல்வித்துறையில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஒருவர் கூடவா இல்லாமல் போய்விட்டது? தங்கள் பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற அக்கறை இல்லாத பெற்றோர்கள் உலகின் எந்த மூலையிலும் இருக்கமுடியாது...

ஆனால் நீங்கள் அத்தனை பேரும் எங்கே சென்றீர்கள்?

என்றாவது உங்கள் இந்தப் பாடசாலைகள் மீது உண்மையான அக்கறை காட்டி இருக்கிறீர்களா?

அந்தப் பாடசாலை கல்விச் சமூகத்தைத் தொடர்பு கொண்டு என்ன நடக்கிறது என்று கேட்டிருக்கிறீர்களா?

இரணைதீவு, வன்னேரிக்குளம் என்று ஏராளமான இடங்களில் பாடங்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பல மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வளங்கள் பல பாடசாலைகளில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27 | KN/SIVANAGAR G.T.M.S., | 13 | 7 | 20 | 35.00 | Kilinochchi |
| 28 | KN/SIVAPATHA KALAYAGAM G.T.M.S., | 21 | 8 | 29 | 27.59 | Kilinochchi |
| 29 | KN/ST. ANTHONY'S R.C. VIDYALAYAM, | 12 | 8 | 20 | 40.00 | Kilinochchi |
| 30 | KN/VANNERIKULAM M.V., | 9 | 4 | 13 | 30.77 | Kilinochchi |
| 31 | MN/EACHCHALAWAKKAI G.T.M. SCHOOL | 8 | 4 | 12 | 33.33 | Madhu |
| 32 | MN/ILLUPPAIKADAVAI G.T.M. SCHOOL, | 24 | 15 | 39 | 38.46 | Madhu |
| 33 | MN/ST. LOURDS MAHA VIDYALAYA, | 6 | 3 | 9 | 33.33 | Madhu |
| 34 | MN/VELLANKULAM G.T.M.S. | 7 | 4 | 11 | 36.36 | Madhu |
| 35 | MN/CHILAWATHURAI G.M.M.SCHOOL | 7 | 3 | 10 | 30.00 | Mannar |
| 36 | MN/THUIIUKUDIYIRUPPU R.C.T.M.S. | 11 | 5 | 16 | 31.25 | Mannar |
| 37 | MN/VEPPANKULAM G.M.M.S. | 9 | 4 | 13 | 30.77 | Mannar |
| 38 | MU/KIRIIBBANWEWA MAHA VIDYALAYA, | 12 | 5 | 17 | 29.41 | Mullaitivu |
| 39 | MU/KOKKUTHODDUWAI M.V., | 10 | 6 | 16 | 37.50 | Mullaitivu |
| 40 | MU/THANNIROOTRU MUSLIM MAHA VIDYALAYA | 14 | 9 | 23 | 39.13 | Mullaitivu |
| 41 | MU/UDUPPUKKULAM TAMIL VIDYALAYA, | 11 | 7 | 18 | 38.89 | Mullaitivu |
| 42 | J /CHANDRAPURA SKANDAVARODAYA M. VIDYALAYA, | 14 | 9 | 23 | 39.13 | Thenmarachchi |
| 43 | J /KAITHADY NUNAVIL G.T.M. SCHOOL, | 8 | 3 | 11 | 27.27 | Thenmarachchi |
| 44 | J /MADDUVIL SOUTH A.M.T.M. SCHOOL., | 3 | 2 | 5 | 40.00 | Thenmarachchi |
| 45 | J /MARAVAN PULO SAKALAKALA VALLI V., | 5 | 3 | 8 | 37.50 | Thenmarachchi |
| 46 | J /NAVATKULY M.V., | 27 | 15 | 42 | 35.71 | Thenmarachchi |
| 47 | J /VIGNESWARA V., | 16 | 6 | 22 | 27.27 | Thenmarachchi |
| 48 | MU/IYANKANKULAM G.T.M.S. | 10 | 4 | 14 | 28.57 | Thunukkai |
| 49 | MU/MANKULAM MAHA VIDYALAYA, | 26 | 13 | 39 | 33.33 | Thunukkai |
| 50 | MU/MUTHAIYANKADDU LEFT BANK G.T.M. SCHOOL, | 14 | 7 | 21 | 33.33 | Thunukkai |
| 51 | MU/PERIYA PULIYANKULAM G.T.M. S., | 5 | 3 | 8 | 37.50 | Thunukkai |
| 52 | MU/THANDUVAN G.T.M. SCHOOL, | 13 | 8 | 21 | 38.10 | Thunukkai |
| 53 | MU/VANNIVILANKULAM G.T.M.S. | 5 | 2 | 7 | 28.57 | Thunukkai |
| 54 | J / VETTILAIKENY PARAMESWARA VIDYALAYA. | 11 | 6 | 17 | 35.29 | Vadamarachchi |
| 55 | J /ALVAI SINNATHAMBY VIDYALAYA, | 11 | 4 | 15 | 26.67 | Vadamarachchi |
| 56 | J /GNANASARIAR COLLEGE, | 12 | 5 | 17 | 29.41 | Vadamarachchi |
| 57 | J /KATCOVALAM METHODIST MISSION TAMIL MIXED SCHOOL, | 10 | 6 | 16 | 37.50 | Vadamarachchi |
| 58 | J /SITHY VINAYAGAR V., | 15 | 6 | 21 | 28.57 | Vadamarachchi |
| 59 | J /THEVARAYALY HINDU COLLEGE, | 30 | 16 | 46 | 34.78 | Vadamarachchi |
| 60 | J /VELAUTHAM M.V., | 16 | 10 | 26 | 38.46 | Vadamarachchi |
| 61 | J /ARALLY VALLIAMMAI MEMORIAL SCHOOL, | 11 | 4 | 15 | 26.67 | Valikamam |
| 62 | J /CHANKANAI SIVAPIRAGASA M.V., | 38 | 20 | 58 | 34.48 | Valikamam |
| 63 | J /ERLALAI M.V., | 12 | 7 | 19 | 36.84 | Valikamam |
| 64 | J /ERLALAI SRI MURUGAN VIDYALAYA, | 26 | 13 | 39 | 33.33 | Valikamam |
| 65 | J /ILAVALAI MEIKANDAN M.V., | 15 | 8 | 23 | 34.78 | Valikamam |
| 66 | J /INUVIL HINDU COLLEGE, | 17 | 7 | 24 | 29.17 | Valikamam |
| 67 | J /KEERIMALAI NAGULESWARA MAHA VIDYALAYA, | 13 | 7 | 20 | 35.00 | Valikamam |
| 68 | J /KUDDIYAPULAM G.T.M.S., | 20 | 7 | 27 | 25.93 | Valikamam |
| 69 | J /MALLAKAM M.V., | 29 | 15 | 44 | 34.09 | Valikamam |
| 70 | J /PANDATERUPPU HINDU COLLEGE, | 17 | 6 | 23 | 26.09 | Valikamam |
| 71 | J /SILLALAI R.C.T.M. SCHOOL, | 19 | 8 | 27 | 29.63 | Valikamam |
| 72 | J /SUTHUMALAI CHINMAYA BARATHY V., | 20 | 12 | 32 | 37.50 | Valikamam |
| 73 | J /THOLPURAM VICKNESWARA VIDYALAYA, | 15 | 7 | 22 | 31.82 | Valikamam |
| 74 | J /VADDU CENTRAL COLLEGE | 32 | 18 | 50 | 36.00 | Valikamam |
| 75 | T /ANNA NAGAR PARAMESWARA VIDYALAYA, | 13 | 8 | 21 | 38.10 | V.South |
| 76 | V /ADAIKKALA ANNAI VIDYALAYA, | 6 | 4 | 10 | 40.00 | V.South |
| 77 | V /AL-IQBAL MAHA VIDYALAYA | 26 | 12 | 38 | 31.58 | V.South |
| 78 | V /ARAFA VIDYALAYA, | 10 | 4 | 14 | 28.57 | V.South |
| 79 | V /CHEKKADIPPULAVU G.T.M. SCHOOL, | 6 | 4 | 10 | 40.00 | V.South |
| 80 | V /MUTHALIYARKULAM R.C.T.M.S. | 10 | 6 | 16 | 37.50 | V.South |
| 81 | V /SHANMUGANANTHA VIDYALAYA, | 11 | 4 | 15 | 26.67 | V.South |
| 82 | V /THIRUGNANA SAMPANTHAR VIDYALAYA , | 29 | 19 | 48 | 39.58 | V.South |
| 83 | V /BHARATHITHASAN VIDYALAYA | 17 | 7 | 24 | 29.17 | V.North |
| 84 | V /KARUNKALIKKULAM G.T.M. SCHOOL, | 6 | 3 | 9 | 33.33 | V.North |
| 85 | V /MATHAR PANIKKAR MAHILANKULAM J.S.VIDYALAYA, | 9 | 5 | 14 | 35.71 | V.North |
| 86 | V /NEDUNKERNY OLUMADU G.T.M.S., | 10 | 6 | 16 | 37.50 | V.North |
| 87 | V /NOCHCHIKULAM NO. 1 J.S.V., | 2 | 1 | 3 | 33.33 | V.North |
| 88 | V /PADDIKUDIYIRUPPU G.T.M. SCHOOL, | 14 | 5 | 19 | 26.32 | V.North |
| 89 | V /SHANMUGANANTHA MAHA VIDYALAYA, | 3 | 2 | 5 | 40.00 | V.North |

> அரசியல்வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆசிரியர் தொழிற்சங்க தலைவர்களும் ஆசிரியர் இடமாற்றங்களில் ஆதிக்கம் செலுத்துவதும் கல்வித் திணைக்களங்கள் இந்த சம பரம்பலைச் சரிவரச் செய்ய முடியாமல் திக்குமுக்காடுகிறார்களா? அல்லது வேறு பிரச்சினைகளா? என ஆராய்ந்து பார்க்க முயன்று இருக்கிறீர்களா? பொதுவெளியில் பேசமுடியாமல் இருப்பதால் பலர் இது குறித்து குரல் கொடுக்காமல் இருக்கக் கூடும் அல்லவா? ஆனால், சமூக அழுத்தம் கூடும் போது உண்மைகள் வெளிவரக் கூடும் அல்லவா? அப்படி நடக்காமல் விடுவதால் பல நிர்வாகச் சிக்கல்கள் வெளிவராமல் முடங்கிப்போக வாய்ப்பிருக்கிறது அல்லவா?

வாசிப்பை ஊக்குவிக்கும் நூலகங்கள், புத்தகங்கள் பல பாடசாலைகளில் இன்று இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பலர் வாசிப்பதே இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பொருளாதார வளமற்ற வீட்டில் வெளிச்சமின்றி பல மாணவர்கள் பின்தங்கியது தெரியுமா? சில மாணவர்கள் இன்றும் தோட்டத்திலும் வயலிலும் வேலை செய்ய வேண்டியுள்ளதால் பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடிவதில்லை என்பது தெரியுமா? ஆசிரியர் சமபரம்பல் இன்மையால் தமிழ் ஆசிரியரும்/ தொண்டர் ஆசிரியரும் வேறு வழியின்றி விஞ்ஞானமும் கணிதமும் படிப்பிக்கிறார்களே அது உங்களுக்குத் தெரியுமா? எம்மை யாரும் கேட்கப் போவதில்லை என்ற தெனாவட்டிலும் அரசியல் ஆணவத்திலும், ஒரு சில அதிபர்கள், ஆசிரியர்கள் பணியை சரிவரச் செய்யாமல் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைதீவு, மடு, துணுக்காய் வலயங்களில் போதிய தரமான ஆசிரியர்கள் இல்லை என்பதும் அதேவேளை, யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் உள்ளிட்ட கல்வி வலயங்களில் சில பாடங்களில் அளவுக்கு அதிகமான ஆசிரிய வளம் இருப்பதும் உங்களுக்குத்தெரியுமா?

அரசியல்வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆசிரியர் தொழிற்சங்க தலைவர்களும் ஆசிரியர் இடமாற்றங்களில் ஆதிக்கம் செலுத்துவதும் கல்வித் திணைக்களங்கள் இந்த சம பரம்பலைச் சரிவரச் செய்ய முடியாமல் திக்குமுக்காடுகிறார்களா? அல்லது வேறு பிரச்சினைகளா? என ஆராய்ந்து பார்க்க முயன்று இருக்கிறீர்களா? பொதுவெளியில் பேசமுடியாமல் இருப்பதால் பலர் இது குறித்து குரல் கொடுக்காமல் இருக்கக் கூடும் அல்லவா? ஆனால், சமூக அழுத்தம் கூடும் போது உண்மைகள் வெளிவரக் கூடும் அல்லவா? அப்படி நடக்காமல் விடுவதால் பல நிர்வாகச் சிக்கல்கள் வெளிவராமல் முடங்கிப்போக வாய்ப்பிருக்கிறது அல்லவா? ■

# இடம்மாறத் துடிக்கும் ...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகள் விடுதலை, காணிக் கைய ளிப்புப் போன்ற விடயங்களில் கூட ரணி லின் கட்சி அக்கறை செலுத்தியிருக்க வில்லை.

ஆனாலும் 2002 ஆம் ஆண்டு சமாதா னப் பேச்சு நடைபெற்றபோது ரணில் விக் கிரமசிங்க புலிகள் இயக்கத்துக்குள் ஏற்ப டுத்திய பிளவுகள்தான் போரை வெற்றி கொள்ள இலகுவாக இருந்ததென ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசி ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையைக் காப்பாற்ற முற் பட்டனர். இவ்வாறான இழுபறிகளுக்கு மத்தியில் மற்றுமொரு ஆட்சி மாற்றத் துக்கு மேற்குலகம் தயாராகியது.

அதன் பெறுபேறுதான் மைத்திரிபால சிறிசேனா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியில் எடுக்கப்பட்டு எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளராகக் கள மிறக்கப்பட்டார். மேற்குலக நாடுகளின் அழுத்தங்களினால் ரணில் விக்கிரமசிங் கவும் அதற்கு விட்டுக்கொடுத்திருந்தார்.

அன்று மகிந்தவுக்கு ஆதரவு வழங்கிப் பின்னர் முரண்பட்ட இனவாதிகளான ஜே.வி.பி, ஜாதிக கெல உறுமய போன்ற கட்சிகளும் முரண்பாடுகளில் உடன்பா டாக மைத்திரிபால சிறிசேனவை ஆத ரித்தன.

இதனால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் மூன்று மாதங்களில் மைத்திரி-ரணில் மோதல் ஆரம்பித்தது. அதனைப் பயன்படுத்திய ராஜபக்ஷ குடும்பம் 2016 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியை ஆரம்பித்து 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு 214 சபைகளைக் கைப்பறி மீண்டும் தங்கள் அரசி யல் செல்வாக்கைக் காண்பித்தது.

அன்றில் இருந்து கோட்டபாயவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்ற கருத்துக்கள் கசிய ஆரம்பித்தன. 2018 ஆம் ஆண்டு அந்தப் பிரச்சாரம் உச்சம் தொட்டது. இதன் பயனாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோட்டபாய தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றார். 2020 ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லிலும் தனிப் பெரும்பான்மையோடு சிறிய கட்சிக ளின் ஆதரவின்றி ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன ஆட்சியமைத்தது.

ஆனால் இரண்டு ஆண்டுகள் நிறைவில் ராஜ பக்ஷ அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங் கள் மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக் கும் சூழலை உருவாக்கியுள்ளது. அத்தோடு தொடர்ச்சியாகப் பதவியை இழந்து வந்த ரணில் விக்கிரமசிங்க மீதும் அனுதாப அலையொன்று வீச ஆரம்பித்திருக்கிறது.

2002 இல் ரணில் சமாதானப் பேச்சை ஆரம் பித்த அன்றைய நாளே ஈழப்போருக்கும் முடிவு கட்டப்பட்டது என்றதொரு உணர்வு இன்றுவரை சிங்கள மக்கள் மத்தியில் இல்லாமலில்லை.

ரணிலுக்கு ஆதரவான சிங்கள நாளேடுகளில் வெளிவரும் கட்டுரைகள் அதனைப் புடம்



போட்டுக் காண்பிக்கின்றன. 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லில் எந்தவொரு ஆசனங்களையும் கைப்பற்றாத நிலையில் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்திற்குக்கூட எவரும் தெரிவு செய்யப்பட வில்லை.

இந்தவொரு சூழலில் தற்போது ரணில் விக்கி ரமசிங்க மீது அதிஷ்டக் காற்று வீசுகின்றது. ராஜ பக்ஷவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் சஜித் தலைமையிலான 54 உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியாகச் செயற்பட்டாலும் அங்கு ஏற்பட் டுள்ள ஸ்திரமற்ற நிலை போன்ற காரணிகள், ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சாதகமானதொரு நிலையை உருவாக்கியுள்ளதெனலாம்.

அத்துடன் ரணில் தனித்துச் சுதந்திரமாக ஆட்சியமைத்தால் தமக்கும் வசதியாக இருக்கும் என்றவொரு கனவு அமெரிக்கா போன்ற வல்லா திக்க நாடுகளுக்கும் உண்டு. எவ்வாறாயினும் தேர்தல் வெற்றிக்கு இனவாதமே பிரதான முதலீ டாக இருக்க வேண்டும்.

அதனால்தான் பாட்டாலி சம்பிக்க ரணவக்க வையும் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் சஜித் பிரேமதாச, சம்பிக்க ரணவக்கவுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முயற்சித்தார். இருந்தாலும் கடந்த சில வாரங்களாக இருவருக்குமிடையே முறுகல் ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதி வேட்பாளராகக் களமி றங்க சம்பிக்க ரணவக்க விரும்புகின் றார். ஆனால் சஜித் அதற்கு உடன்பட வில்லை. இதனால் எதிர்க்கட்சிகளின் கூட்டில் முரண்பாடு முற்றியுள்ளது.

பசில் ராஜபக்ஷவை பிரதானப்படுத்தி மற்றுமொரு அணியும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக் கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

இதனையே தனக்குச் சாதகமாக்கி யுள்ளார் ரணில் விக்கிரமசிங்க ஈழத்தமி ழர்களுக்கும் மேற்குலகத்துக்கும் நல்ல பிள்ளையாகவும் 2002 இல் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக் களே 2009 இல் போரை முடிவுறுத்திய தெனச் சிங்கள மக்கள் மத்தியில் சொல் லவும் ரணிலிடம் ஆதாரங்கள் உண்டு.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வல்லாதிக்க நாடுகளும் மற்றும் இந் தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் ஈழத்தமிழர்களை அரவணைத்துக் கொண்டு கதை சொல்லி மீண்டும் மூளையைக் கழுவும். அதனைத் தமிழ ரசுக் கட்சியும் புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புகளும் ஏற்றுக்கொண்டு பிரச்சாரங்களை ஆரம்பிக்க வாய்ப்புகள் இல்லாமலில்லை.

ஆனால் ஆட்சி மாற்றங்களின்போது இனவாதம் வெவ்வேறு வடிவங்களில் தேவைக்கு ஏற்ப இடம்மாறுவது மாத்தி ரமே இலங்கை அரசாங்க முறையில் காணமுடிகின்றது என்ற வரலாற்று உண்மையைத் தமிழரசுக் கட்சி இனியாவது உணர வேண்டும்.

அத்துடன் இலங்கை அரசு என்ற கட்டமைப்பே கடந்த எழுபது ஆண்டுகால இன அழிப்புக்குக் கார ணம் என்பதைத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் புலம் பெயர் அமைப்புகளும் நிறுவுவதற்கான உறுதி யான செயல்த் திட்டங்களை முன்னெடுப்பதும் காலத்தின் கட்டாயமாகிறது.

2024 ஆம் ஆண்டு தேர்தலுக்கு ஏற்றவாறு சிங்க ளத் தேசிய கட்சிகளும் சிங்களச் சிவில் சமூக மற் றும் பௌத்த அமைப்புகளும் எவ்வாறு தம்மைத் தயார்படுத்தி வருகின்றதோ, அதேபோன்று தமி ழர்களும் ஒரு தேசமாக மீண்டெழுவதற்கான நகர் வுகளே உடனடித் தேவையாகவுமுள்ளது.

ஆகவே 2024 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்ற சிங்களக் கட்சிகளின் தயார்ப டுத்தலில் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஈடுபட முற்படுவதை முற்றாக நிறுத்த வேண்டும்.

சஜித் வந்தால் என்ன, சம்பிக்க ரணவக்க வந் தால் என்ன, ரணில் வந்தால் என்ன எல்லோருமே இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பைப் பாதுகாக்கும் சிங்களத் தலைவர்கள் என்பதைத் தமிழர்கள் இனிமேலாவது புரிந்துகொள்ள வேண்டும். அதாவது இனவாதம் இடம் மாறத் துடிக்கிறது அவ்வளவுதான். ■

# உக்ரேன் மீது சைபர் தாக்குதல் ரஷ்யாமீது சந்தேகம்

உக்ரேனின் 70 அரசாங்க இணையதளங்களை குறிவைத்து "பாரிய சைபர் தாக்குதல்" ரஷ்யா வால் நடத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ரஷ்யாவினால் மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப் படும் இணையத் தாக்குதலால் உக்ரைன் அரசாங்கத் தின் இணையத்தளங்கள் குறிவைக்கப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டை - கிரெம்ளின் மறுத்துள்ளது.

உக்ரைனுடனான பதட்டங்களுடன் தொடர்பு டைய புதிய ரஷ்ய சைபர் தாக்குதல்களுக்கான சாத் தியக்கூறுகள் குறித்த கவலையின் காரணமாக, பிரிட் டனின் இணையப் பாதுகாப்பு மையம் நிறுவனங்களை தங்கள் இணையப் பாதுகாப்பை சரிபார்க்குமாறு வலியுறுத்தியுள்ளது.

நேஷனல் சைபர் செக்யூரிட்டி சென்டரின் (என்சி எஸ்சி) செயல்பாட்டு இயக்குனர் பால் சிசெஸ்டர் கருத்துத் தெரிவிக்கையில், "உக்ரைனில் நடக்கும் நிகழ்வுகள் தொடர்பாக இங்கிலாந்து நிறுவனங்களுக்கு எந்தக் குறிப்பிட்ட இணைய அச்சுறுத்தல்களும் எங்க ளுக்குத் தெரியவில்லை என்றாலும், நாங்கள் நிலை மையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். அவர்கள் நெகிழ்ச்சியுடன் இருப்பதை உறுதிசெய்ய வழிகாட்டுதலைப் பின்பற்றவும். "பல ஆண்டுகளாக, சைபர் ஸ்பேஸில் தீங்கிழைக்கும் ரஷ்ய நடத்தையின் வடிவத்தை நாங்கள் அவதானித்துள்ளோம். உக்ரைனில் கடந்த வாரம் நடந்த சம்பவங்கள், நாங்கள் முன்பு கவ னித்த இதேபோன்ற ரஷ்ய நடவடிக்கைகளின் தனிச் சிறப்புகளைக் கொண்டுள்ளது" என்றார்.

உக்ரைன் ஜனாதிபதியின் உயர்மட்ட பாதுகாப்பு ஆலோசகரான ஓலெக்சிடானிலொவ், சைபர் தாக்குதலுக்குப் பின்னால் ரஷ்யா இருப்பது 99.9% உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார் .

உக்ரைனின் எல்லைகளுக்கு அருகில் ரஷ்யா 100,000 துருப்புக்களையும் ஆயுதங்களையும் குவித்துள்ளதால் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் கிரிமியாவை இணைத்து கிழக்கில் பிரிவினைவாதிகளுக்கு ஆதர வளித்த எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு - இராணுவ அணி திரட்டல் அதன் அண்டை நாடு மீது ஒரு புதிய ரஷ்ய படையெடுப்பு மேற்கத்திய தலைநகரங்களில் அச்சத் தைத் தூண்டியுள்ளது.

உக்ரைனில் உள்ள அரசாங்க தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுக்கு எதிராக ரஷ்ய இராணுவ உளவுத்துறை நோட்பெட்யா தாக்குதலை நடத்தியதாக இங்கிலாந்து முன்பு குற்றம் சாட்டியது.

சைபர் விரோதங்கள் என்பது ஒரு வகையான தாக் குதல் ஆகும், இது போரின் வாசலில் அல்லது ஒரு உடல், இராணுவ படையெடுப்பின் ஒரு பகுதியாக நடக்கும்.

சைபர் ஆயுதங்கள் புவியியல் எல்லைகளை மதிக் காததால், உலகின் ஒரு பகுதியில் ஏற்படும் மோதல் யாரையும் எங்கும் எவ்வாறு பாதிக்கலாம் என்பதற் கான அறிகுறியாகும்.

"வழிகாட்டுதல் ஒரு தாக்குதலுக்கு பலியாகும் அபா யத்தைக் குறைக்கும் செயல் நடவடிக்கைகளைப் பின் பற்ற நிறுவனங்களை ஊக்குவிக்கிறது" என்று சைபர் மையம் கூறியது. சைபர் தாக்குதலால் பாதிக்கப்படும் நாடுகள் எந்தவொரு அமைப்பும் அந்த சம்பவத்தை NCSCக்கு புகாரளிக்க அறிவுறுத்தப்படுகிறது. ■

# மாணவர்களுக்குச் சுமையான புலமைப்பரிசில் பரீட்சை

பொலிகை ஜெயா

இலங்கையில் நடைபெறும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்குக் கூடுதல் சுமையானதாக அதிகமானோர் கூறுகிறார்கள்.

இலங்கையில் திரு.கன்னங்கராவால் இங்லாந்து கல்வி திட்டத்துக்கு அமைவாகக் கொண்டுவரப்பட்ட கல்வித்திட்டம் கிட்டத்தட்ட 71 ஆண்டுகளைத் தொட்டு நிற்கிறது. ஆனால், எமது கல்வித்திட்டத்தில் பல மாறுதல்களை செய்தல் அவசியம் என்பது பல கல்வி சம்பந்தமான அறிஞர்களின் கூற்று. திருமதி ஸ்ரீமாவோ, திரு.ஜே.ஆர்.வே அரசுகள் எமது கல்வித் திட்டத்தை மாற்றி புதிய திட்டத்தை வகுத்து நடை முறைப்படுத்த முயன்றார்கள். ஆனால், எமது நாட்டின் துரதிஷ்டம் அது வெற்றியளிக்கவில்லை. இதே அடிப் படையிலேயே ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை அடியோடு நிறுத்தப்படல் வேண்டுமென்ற குரல்கள் படித்தவர் மத்தியில் மட்டுமல்ல, குறிப்பாக பெற்றவர்கள் மத்தியிலிருந்தும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

"ஒரு சிறுபிள்ளையின் வாழ்நாள் கல்விக்கான விதையே ஆரம்பக் கல்வியாகும். இது ஐந்து வயதிலிருந்து பத்து வயது வரை எனக் கூறலாம்.இந்த வயதில் ஒரு பிள்ளைக்குக் கொடுக்கும் கல்வி முறைமை பெரும் பகுதிநேரம் விளையாட்டும், சிறுபகுதி படிப்புமாகும். முக்கியமாகப் பிள்ளையின் மொழி விருத்திக்குப் பெற்றோரின் பேச்சு, கதை சொல்லல், பிள்ளையின் கதையைக் கேட்டல், படம் வரைதல், படம் பார்த்து கதை சொல்லல், வினாவுக்கான பிள்ளையின் விடை, முக்கியமாக வாசிப்பைத் தூண்டல் போன்றனவாகும்."

மேற்சொன்ன முறைகளிலேயே நான் வசித்திடும் சுவிஸ், ஏனைய ஐரோப்பிய நாடுகளில் சிறுவர்களுக்கான கல்வி அமைப்பு முறை அமுல்படுத்தப்படுகிறது.

"குழந்தைகள் தமது அழகிய விளையாட்டின் இளமை பருவத்தை இழந்துவிடல்,அளவுக்கு விஞ்சிய வீட்டு வேலை, பெற்றவர்களின் அழுத்தம் இவற்றால் பிஞ்சு உள்ளம் தம்மை அறியாமலே மன அழுத்தத்துக்கு ஆட்படுகிறார்கள். இதனால் தலையிடி, மூளையில் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புண்டு. மேலும் மூளையில் Kipokem pas என்ற ஞாபகசக்தி குறைய வாய்ப்புண்டு என குழந்தை நோய் விசேட வைத்தியரான ஆ. ஜெயவர்த்தன் அறிக்கை கூறுகிறது." மேலும் இது தீமைகளையே அதிகம் விதைத்து நிற்கிறது. பிள்ளைகள் ஏலவே அள வுக்கு விஞ்சி திணிக்கப்பட்டவற்றை பரீட்சையில் ஒப்புவிக்க முயன்று பலர் தோற்று நிற்கிறார்கள். பிஞ்சுகளின் கள்ளமில்லா வெள்ளை மனசு கண்ணாடிபோன்று உடைந்து நொருங்கிப் போகிறது. இதுதான் தன் கல்வியின் முக்கிய அங்க பகுதியாக எண்ணி அக்குழந்தை தன்னை அறியாமலே மேற்சொன்ன உளவியல் தாக்கத்துக்கு ஆளாகிறது. எதிர் மறை தாக்கம் பெற்றோர், பிள்ளைகள் மத்தியில் ஏற்படுகிறது.

மேலும் பிள்ளைகளின் பிற ஆற்றல்களான இசை, கலை, தன்னார்வு, விளையாட்டுத்துறை, முக்கியமாக சுயதிறன் போன்றன இந்த புலமைப் பரிசில் முறைமையால் மழுங்கடிக்கப்படுகின்றன. இப்பரீட்சைக்கு 3 ஆம் ஆண்டிலிருந்தே சிறுவர்களைத் தயார் செய்வதால் பிள்ளைக்கு விளையாட்டின் மூலம் ஏற்படும் உடற்கூற்று சுகாதார நலம் கெட்டுப்போய் அவன் உடல் சார்ந்த உசாரற்ற சோம்பேறிப் பிள்ளையாக மாற்றம் காணுகிறான்.

பெற்றவர்கள் தமது பிள்ளைகளை மெசின் போல எண்ணி பிரத்தியேக வகுப்பு, ஓய்வற்ற தயார்ப்படுத்தல் அதாவது, வயதுக்கு விஞ்சிய திணிப்பும் வீட்டுக்கு வீடு வாசல் படிபோல ஒவ்வொரு இல்லங்களிலும் நடைபெறுகின்றன.நாம் தமிழர். எம் வாழ்வின் மூலதனம் கல்வி என்ற கோட்பாட்டிலிருந்து எம்மால் இன்றுவரையும் விலக முடிவதில்லை.

இலங்கையிலுள்ள பெரும்பாலான கல்விமான்கள், அறிவாளர்கள், உளவியலாளர்கள் இந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை நிறுத்துமாறு ஆலோசனை வழங்குகிறார்கள். இவை அனேகமாக புகழ் பாடல், பெருமை கொள்ளல், வாழ்த்தை வாங்குவதாகவே பார்க்கப்படுகிறது. எமது பிள்ளை பாஸ், எமது பள்ளியில் இத்தனை பிள்ளைகள் சித்திபெற்றனர், தங்கள் கோட்டத்துள் இத்தனை பிள்ளைகள் தேறினார்கள், மாகாண மட்டத்தில் இத்தனை பிள்ளைகள் சித்தியைத் தொட்டனர் என்ற வறண்ட பெருமை கொள்ள மட்டுமே இது உதவும். அத்தோடு பாடசாலை, பத்திரிகை, முகநூல், வேறு இணையவழியில் சித்தி பெற்ற மாணவர்களின் படங்களைப் போட்டு வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்றவர்கள் சாதனையாளர்கள் என தம் பட்டம் அடிப்பது என்பது சித்தியைத் தவற விட்ட பிஞ்சு உள்ளம் கொண்ட மாணவசிறார்கள், அவர்களது பெற்றவர்களின் உள்ளங்களை புண்ணாக்கி வேதனைப்படுத்தி பல பெற்றவர்களை கண்ணீர் சிந்த வைக்கிறது. பெற்றவர்கள் சமூகத்தில் தமக்கு ஒரு தலை குனிவென தப்பாக எண்ணுகிறார்கள். உண்மையில் வேதனை, வலிக்கிறது.

**வெளிநாடுகளில் குழந்தைகள் பாதுகாப்பு பற்றிய சட்டங்களை ஒழுங்காக அமுலாக்கம் செய்கிறார்கள். குழந்தைகளின் சிந்தனை, விருப்பு எந்த திசையோ அந்தந்த வழியில் குழந்தைகளை உள்வாங்கி அவர்களுக்கான எதிர்கால வாழ்வியல் கல்வியை ஊட்டுகிறார்கள். இது மிக சிறப்பல்லவா? வெளிநாடுகளில் இப்படிப் புள்ளியிடும் முறைமை உண்டு. ஆனால் பெற்றோர், ஆசிரியர்கள் அணுகுமுறையே வேறு விதமானது.**

வெளிநாடுகளில் குழந்தைகள் பாதுகாப்பு பற்றிய சட்டங்களை ஒழுங்காக அமுலாக்கம் செய்கிறார்கள்.குழந்தைகளின் சிந்தனை,விருப்பு எந்த திசையோ அந்தந்த வழியில் குழந்தைகளை உள்வாங்கி அவர்களுக்கான எதிர்கால வாழ்வியல் கல்வியை ஊட்டுகிறார்கள். இது மிக சிறப்பல்லவா? வெளிநாடுகளில் இப்படி புள்ளியிடும் முறைமை உண்டு. ஆனால் பெற்றோர், ஆசிரியர்கள் அணுகுமுறையே வேறு விதமானது. எமது நாடு போன்று தம்பட்டம் கொட்டுவதில்லை. பரீட்சை பெறுபேறுகளை பொதுவெளிக்கு முட்டாள் தனமாக கொண்டு செல்வதில்லை. அது ஆசிரியர், பெற்றவர் மட்டத்தில் முடிந்து விடும். இதுதான் உங்கள் உலகமல்ல. தளரக்கூடாது என தெம்பூட்டுவர். ஒரு பிள்ளை விரும்பி போகும் வழியை ஆசிரியர் புரிந்து அதற்கேற்ப பாடம் சொல்லிக்கொடுப்பார். ஒரு மாணவன் தன் எதிர்கால வாழ்வை கொண்டு நடத்தும் வழிமுறை கல்வி அமைப்பே இங்குண்டு. குழந்தை பள்ளியால் வந்ததும் எம்மைப்போல புத்தகத்தை எடுத்து படியென்ற அமுக்கமோ, அழுத்தமோ கொடுப்பதில்லை. இதனால் பிள்ளைகளுக்குப் பெற்றவர் மீது வெறுப்பு ஏற்பட இடமில்லை.மேலும் வருடமொருமுறை பெற்றவர்களை அழைத்துக் கூட்டாக பிள்ளைகள் பற்றி பேசுகிறார்கள். Tusion என்ற பிரத்தியேக படிப்பு கிடையாது. இருந்த போதும் சில தமிழ் பெற்றோர் தமது பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புக்கு அனுப்புவதை காண முடிகிறது.

வெளிநாடுகளில் கல்விகற்கும் எம் பிள்ளைகள் பற்றிய ஒரு சந்தோசமான செய்தி. இன்னும் 30 வருடங்கள் வெளிநாடுகளில் வைத்தியர், தாதிகள், எஞ்சினீயர், அலுவலகங்கள், வங்கிகள், தொழில் நிறுவனங்கள் இன்னும் பலவற்றில் எம் தமிழ் பிள்ளைகளே கூடுதல் விழுக்காட்டில் கோலோச்சுவர். தமிழ் பிள்ளைகளுக்கு நல்ல பெயருண்டு.முதல் சொன்ன நிலை படிப்படியாகத் தோற்றம் பெற்று நிற்பதை நேரிடையாகக் காணமுடிகிறது. இங்குள்ள வசதி, வாய்ப்பு, சிறப்பான கல்வி கொள்கைகளைப் பின்பற்றி எமது பிள்ளைகள் நன்றாகப் படிக்கிறார்கள். ஆனால் உலக மட்டத்தில் சுவிஸ் நாட்டு கல்வி அமைப்பு முறை மிக,மிக கடுமை கொண்டது.

இந்த புலமைப் பரிசில் சோதனைதான் ஒரு பிள்ளையின் எதிர்கால கல்வி மற்றும் திறனை அளவிடும் கருவியல்ல. அதில் அதிக புள்ளிகள் பெற்ற பல பிள்ளைகள் உயர் கல்வியை தொடமுடியாமல் போன பல சம்பவங்களுண்டு. ஆனால் பாஸ் பண்ணாத அதிக பிள்ளைகள் O/L, A/L சித்திபெற்று Univ ercity போன தோடு! பல உயர்பதவிகளில் இருப்பதை நேரிடையாகக் காணமுடிகிறது.

"இந்த பரீட்சை பாடசாலை, மாவட்ட மட்டத்தில் பிள்ளைகளின் கல்வித்தரத்தை அறிந்து, அளந்து அதற்குரிய பரிகாரத்தைச் செய்தலும், நகர்ப்புற பள்ளிகளில் பிள்ளைகளை அனுமதிக்கவும், சித்தி பெற்றோருக்கான கொடுப்பனவு ரூபா 750 உயர்கல்வி மட்டம் வரை வழங்கி ஊக்குவித்தல் போன்ற நன்மைகள் பற்றி பிரஸ்தாபித்தாலும் அது ஏற்புடையதல்ல. இதற்கு இந்த சிறார்களின் -10,11 வயது பொருத்தமானது அல்ல என்பதை எமது கல்வி சமூகம் உணர வேண்டும்."

பெற்றோர்களே உங்கள் சிறார்கள் புலமைப் பரிசில் சோதனையில் சித்தி எய்தவில்லை எனக் கவலை கொள்ளாதீர்கள். திரு. அப்துல்கலாம் கூற்று போல, மனம் தளராது ஊக்கத்துடன் தொடர்ந்து முயன்று கற்றால் நிச்சயம் வெற்றிக்கனியைப் பறிக்க முடியும்.

"மலை சாய்ந்து போனால் அது சிலையாகும். ஆனால் குழந்தைகளின் மனம் சாய்ந்து போனால் என்ன செய்யலாம்? என்பதை இன்னொருமுறை சிந்திப்போம்."



# கல்யாணக்கனவு

**கனவு 08**

யாழ் சத்யா

> **வைஷாலிக்கு முரளியோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது தான். பாடசாலையின் ஆண்டு விழாவிற்கு கலை நிகழ்ச்சிகள் பழக்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆங்கிலப் பாடலுக்கு முரளி நாயகனாகவும் வைஷாலி நாயகியாகவும் நடிக்கும்படி அமைந்தது. நாயகன், நாயகி இருவரும் நண்பர்கள் புடை சூழ ஆடிப் பாடுவதாக அமைந்திருந்தது அந்தப் பாடல். வைஷாலிக்கு இப்போது அது எந்தப் பாடல் என்று மறந்திருந்தாலும் பாடலின் கருப்பொருள் ஞாபகம் இருக்கிறது.**

"நான் சஞ்சு... உன்ர பேர் என்ன? எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. எனக்குப் பக்கத்தில இருக்கிறியா?"

அவளோடு மொன்டசரியில் சேர்ந்து படித்திருந்த யாரும் இந்த வகுப்பிற்கு வரவில்லை. தனிமையில் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு சஞ்சயன் தானாகவே வந்து பேசவும் ஒரு ஆறுதல் வந்தது.

"நான் வைஷூ... ப்ரெண்ட்ஸ்..."

என்று உடனடியாக கைகொடுத்து அவனைத் தனது நண்பனாக்கிக் கொண்டாள். முதலாம் வகுப்பு என்பதால் ஆசிரியர் தங்களுக்குப் பிடித்தவர்களோடு சேர்ந்து அமருமாறு சொல்லவும் இவளும் சஞ்சயனும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

கொண்டு செல்லும் உணவைப் பகிர்ந்து உண்பதாகட்டும் எங்கே சென்றாலும் சேர்ந்தே செல்வதாகட்டும் பாடசாலை நேரம் முழுவதும் இவர்கள் இருவரும் இணைபிரியாத தோழர்களாகத்தான் இருந்தனர். முரளிதரனும் அதே பாடசாலையில் படித்திருந்தாலும் அவன் வேறு வகுப்பு. முதலாம் தரத்தில் ஏ, பிரிவு பி இரண்டு வகுப்புகள் இருந்தன. இவர்கள் ஏயிலும் முரளி பியிலும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இடைவேளை நேரங்களில் உணவு அருந்தி விட்டுக் கை கழுவப் போகும் போதோ, அல்லது அவர்கள் வகுப்பறையின் முன்பிருந்த முற்றத்தில் விளையாடும் போதோ வைஷாலி முரளிதரனைச் சந்தித்து இருக்கிறாள். வெள்ளையாக உயரமாக அழகாக இருக்கும் அவனை ஒரு விதப் பிரமிப்போடு பார்ப்பாள். எங்கேயென்றாலும் நடுநாயகமாக இருக்கும் அவனைப் பார்க்கும் போது அவளுக்கு அவனிடத்தில் ஒரு பிரமிப்புத் தோன்றுவது தவிர்க்க முடியாததாய் இருந்தது.

முரளிதரனின் தந்தை நெல்லியடி நகரத்தில் இருந்த பிரபல ஆடை நிலையத்தின் உரிமையாளர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் அவர்களுக்குக் கிளைகள் இருந்தது.

பெரும் பணக்காரப் புள்ளியான அவரது ஒரேயொரு புத்திரனுக்குப் பாடசாலையில் பிரத்யேகக் கவனிப்புக்குக் குறைவேது? ஆனால், முரளியும் உண்மையில் படிப்பு, விளையாட்டு என்று அனைத்திலும் கெட்டிக்காரனாகத்தான் இருந்தான்.

வைஷாலிக்கு முரளியோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது தான். பாடசாலையின் ஆண்டு விழாவிற்கு கலை நிகழ்ச்சிகள் பழக்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆங்கிலப் பாடலுக்கு முரளி நாயகனாகவும் வைஷாலி நாயகியாகவும் நடிக்கும்படி அமைந்தது.

நாயகன், நாயகி இருவரும் நண்பர்கள் புடை சூழ ஆடிப் பாடுவதாக அமைந்திருந்தது அந்தப் பாடல். வைஷாலிக்கு இப்போது அது எந்தப் பாடல் என்று மறந்திருந்தாலும் பாடலின் கருப்பொருள் ஞாபகம் இருக்கிறது.

நாயகனைக் கண்டு காதல் வசப்படும் நாயகி, தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்று கேட்பாள். அதற்கு அவன் திருமணம் செய்வதற்குப் பொருத்தமாகத் தன்னிடம் உடை இல்லை என்பான். நாயகி உடையைக் கொடுத்து மறுபடியும் திருமணம் புரியுமாறு கேட்க கழுத்துப்பட்டி இல்லை, கோட்சூட் இல்லை, காலணி இல்லை என்று நாயகன் திருமணம் செய்ய மறுத்து நாயகியிடமிருந்து ஒவ்வொன்றாகப் பெற்று விட்டு இறுதியில் அவளை ஏமாற்றிச் செல்வது போல நகைச்சுவையாக அமைக்கப்பட்டிருந்த பாடல் அது.

காதலுக்கோ, கல்யாணத்துக்கோ அர்த்தம் புரியாத வயது அது என்றாலும் ஜோடி சேர்ந்து ஆடிப் பாடியது வைஷாலியின் மனதில் முரளி மேல் ஒரு மட்டற்ற அன்பை விதைத்திருந்தது. கலை நிகழ்ச்சிக்குப் பழகும் நாட்களில் எல்லாம் வாய்ப்புக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் முரளியோடு பேசிப் பழகுவதற்கு முனைவாள். அவனோ இவளை விட்டு விலகித் தனது மற்றைய நண்பர்களோடு பேசிக் கொண்டிருப்பான்.

ஒரு விதத்தில் அவனின் விலகலே இவளுக்கு அவன் மீது அதிக ஆர்வத்தை உண்டு பண்ணியது எனலாம். முரளி இவளை ஒதுக்குவதைக் கண்டு விட்டு சஞ்சயன் இவளோடு வந்து பேசிக் கொண்டிருப்பான். ஏதாவது கதைகள் கூறி சிரிக்க வைத்து இவள் மனம் வாடாமல் பார்த்துக் கொள்வான்.

நாலாம் தரம் படிக்கும் போது பாடசாலை நூலகத்தில் எடுத்த ஒரு கதைப் புத்தகத்தை இவள் எங்கோ தொலைத்து விட்டாள். நூலகப் பொறுப்பாசிரியர் நடேசன் ஆசிரியர் பிரம்படிக்குப் பெயர் போனவர். மிகுந்த கோபக்காரரான அவர் அடித்து விட்டுத்தான் விசாரிக்க ஆரம்பிப்பார். அப்படிப்பட்டவரிடம் புத்தகம் தொலைந்து விட்டதாகச் சொன்னால் அடி பின்னி விடுவாரே என்று வைஷாலி அழுதே கரைந்து கொண்டிருந்தாள்.



அதைக் கண்ட சஞ்சயன் அவளிடம் விசயத்தை அறிந்து விட்டு, நடேசன் ஆசிரியரிடம் சென்றான்.

"சேர்...! வைஷாலி எடுத்த கதைப் புத்தகத்தை நான் வாங்கிக் கொண்டு போனான். எங்கேயோ துலைச்சுப் போட்டன் சேர்..."

இனி இந்தத் தவறைச் செய்யக் கூடாது என்று அவர் பிரம்பால் அடித்த நான்கு அடிகளையும் உள்ளங்கைகள் இரண்டும் சிவக்க, பல்லைக் கடித்து வாங்கிக் கொண்டவன், அமைதியாக வகுப்பில் வந்து அமர்ந்து கொண்டான். இவன் பென்சில் பிடிக்க முடியாது விரல்களை மூடித் திறந்தபடி இருக்கவும் வைஷாலி என்ன ஏதென்று விசாரித்தாள். இவன் எதுவுமில்லை என்று மறுக்கவும் சஞ்சயனின் அருகிலிருந்த நண்பன் நடந்தவற்றைச் சொல்லி விட்டான்.

வைஷாலிக்கு உண்மையில் நம்ப முடியவில்லை. தனக்காய் அடி வாங்கி வந்தவனைக் கண்கள் கலங்கப் பார்த்தாள்.

"ரொம்ப நன்றி சஞ்சு... ஆனால் நீ ஏன் இப்பிடிச் செய்தாய்? நான் செய்த தப்புக்கு நான் தானே தண்டனை வாங்கியிருக்க வேணும்..."

"நீ அழுதால் உன்ர மூஞ்சியைப் பார்க்கவே சகிக்கலை வைஷூ... அடி வாங்க முதலே இப்படி அழுகிறனி... அடி வாங்கின பிறகு எவ்வளவு அழுவாய்...? நான் வேற உனக்குப் பக்கத்திலேயே இருந்து இதையெல்லாம் சகிக்க வேணுமே என்றுதான் நானே போய் அடியை வாங்கிட்டேன்..."

சஞ்சயன் சிரித்தபடி சொல்லவும் அன்று முதல் அவன் மீது இருந்த நட்பு மேலும் இறுக்கமாகியது. ஐந்தாம் தரம் படிக்கும் போது இவர்கள் இனி பெரிய பிள்ளைகள் என்று சொல்லி ஆண்களை ஒரு பக்கமாகவும் பெண்களை மறுபக்கமாகவும் வகுப்பறையில் இருத்தினார்கள். அப்போதுதான் இவள் முதன் முறையாக சஞ்சயனை விட்டு விலகி இருந்தாள்.

அப்போதும் கூட இருவரும் கரையிலேயே இருக்க இவர்களைப் பிரிக்கும் இடைவெளி சிறிதாகவே இருந்தது. இருவரும் வழக்கம் போலவே பேசிக் கொள்வார்கள். ஐந்தாம் தரத்தில் நடக்கும் புலமைப் பரீட்சை முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்ட நேரத்தில் படிப்பு, படிப்பு என்று இவர்களுக்கு பொழுதெல்லாம் பரீட்சைக்குத் தயாராவதிலேயே சென்றது.

வைஷாலினியும் சஞ்சயனும் வெட்டுப் புள்ளியை விட அதிக புள்ளிகள் எடுத்துச் சித்தியடைந்திருந்தார்கள். ஆனால், முரளியோ அதிக புள்ளிகள் எடுத்து மாவட்ட மட்டத்தில் முதலாவதாக வந்திருந்தான். பாடசாலையே விழாக் கோலம் பூண்டு அவனைக் கொண்டாடியது.

முரளிதரனை விட அவனை எண்ணி வைஷாலி அதிகம் பெருமைப்பட்டாள் எனலாம். சஞ்சயனிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள்.

"சஞ்சு...! முரளி எவ்வளவு கெட்டிக்காரன் பார்த்தியா? படிப்பில, விளையாட்டில எல்லாத்திலயும் அவன்தான் முதலாவது. எவ்வளவு வடிவாக வேற இருக்கிறான். எனக்கு அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேணும் போல இருக்கு..."

"முரளியென்றால் உனக்குப் பிடிக்குமா வைஷூ?"

"ஓமடா... ரொம்பப் பிடிக்கும். நான் வளர்ந்த பிறகு அவனைத்தான் கல்யாணம் செய்யப் போறன்... அப்ப நான் முரளியோடவே இருக்கலாம் தானே..."

பத்து வயதில் திருமணம் என்பதன் அர்த்தம் புரியாது விட்டாலும் கூட, பெரியவர்கள் ஆனதும் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வார்கள். திருமணம் செய்தால் ஒரே வீட்டில் வசிக்கலாம் என்ற அளவில் அவளுக்கு விளக்கம் இருந்தது.

அவளின் பதிலைக் கேட்டு சிந்தித்த சஞ்சயன்,

"உனக்கு மட்டும் அவனைப் பிடிச்சால் போதுமா? அவனுக்கு உன்னைப் பிடிக்க வேண்டாமா?"

சஞ்சயனின் இந்தக் கேள்வி வைஷாலி மனதில் ஆழவே தைத்தது. அன்று சஞ்சயனுக்குப் பதிலளிக்காது விட்டாலும் முரளிக்குத் தன்னைப் பிடிக்க வைக்க வேண்டும் என்று உறுதியாக முடிவெடுத்துக் கொண்டாள்.

முரளியும் சஞ்சயனும் வடமராட்சியில் பிரசித்தி பெற்ற பாடசாலையில் ஆறாம் தரத்தில் சேர்ந்தார்கள். உயர்தரம் வரை அங்கேதான் படித்தார்கள். அது ஆண்கள், பெண்கள் இருவரும் சேர்ந்து படிக்கும் ஒரு கலவன் பாடசாலை. வைஷாலியும் அதே கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று வீட்டில் எவ்வளவு அடம் பிடித்தும் அவளது பெற்றோர் அவளை பெண்கள் மட்டும் படிக்கும் பாடசாலைக்கு அனுப்பி வைத்தனர். அது பெண்கள் மட்டுமே கற்கும் பாடசாலை.

முரளிதரனை இனிப் பாடசாலையில் காண முடியாது என்று வருந்தியவளுக்கு ஒரே ஆறுதல், பாடசாலை இரண்டு மணிக்கு முடிவடைய மாலை மூன்றரை மணியிலிருந்து ஆறு மணி வரைக்கும் நடைபெறும் டியூசன் வகுப்புத்தான். அங்கு ஆண்கள், பெண்கள் இரு பாலினரும் கலந்தே படித்தனர். ஆறாம் வகுப்பில் இருந்து பதினோராம் வகுப்பு வரை ரலன்ட் டியூசன் சென்டரில் படித்தனர்.

முரளிதரன் மீதிருந்த விருப்பம் வயதுக் கோளாறு காரணமாக, பருவக் கவர்ச்சியாக, அந்த வயதுக்கே உரிய ஈர்ப்பாக, 'காதல்' என்ற பெயரில் வைஷாலியின் மனதில் விதையாக விழுந்து பெரும் விருட்சமாக வளர்ந்தது அங்கே வைத்துத்தான்.

அதுல்யாவோடு பேசிய பிறகு ஆன் செய்து வைத்திருந்த கைபேசி ஒலித்த சத்தத்தில் பழைய நினைவுகளிலிருந்து தன் நிலைக்கு வந்து அழைப்பது யாரென்று எடுத்துப் பார்த்தாள் வைஷாலி. சஞ்சயன் தான் அழைப்பது என்றதும் கைப்பேசியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சஞ்சயனோடு மீண்டும் பேசுவாளா? நட்பு மீண்டும் துளிர்க்குமா?

**அவள் கனவு நனவாகுமா?**

# அவதானம்

ஆதவன்



(1)

கதிரவன் உதிக்காத காலை நேரம். வெண்பளிங்கு மணல் மண்டிய பாலைவனத்தின் வழியே வேகமாக அந்த வாகனம் போய்க்கொண்டிருந்தது. அதில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். வாகனத்தில் இருந்த பெரும்பாலானவர்கள் கைகளில் முந்தைய நாள் மாலை சமைத்த சாப்பாட்டைக் காலையில் சூடாக்கி வைத்திருந்தார்கள். பலவகையான சாப்பாட்டு வாடை வாகனம் முழுதும் பரவியிருந்தது.

சாதாரணமாகவே கட்டாரில் அனல் பறக்கும் வெயில். இப்போ உச்ச வெயில் காலம். வேலை அதிகாலை ஐந்தரைக்கே தொடங்கி மதியம் நெருங்கப் பதினோரு மணிக்கே முடியும். அதிக வியர்வையை ஈடு செய்யப் போதிய நீரும் உப்பும் கலந்து குடிப்பார்கள். அந்த நாட்டில் உஷ்ணம் அதிகம் என்பதால் குழாயில் தண்ணீர் அருந்தும் வசதி அநேகமாக எல்லா வீடுகளின் முன்னும் இருக்கும். தண்ணீர் எடுத்துச்செல்லும் அவசியம் இல்லை.

இவன் முகம் மிகவும் வாடியிருந்தது. சாதாரணமாகவே சோர்வாய் இருப்பவன் இன்னும் வாடியிருந்தான்.

“என்ன சமாச்சாரம்” என்று சிங் கேட்டான்.

முன்னைய நாள் வந்த செய்தியை அவன் இதுவரை யாருக்கும் சொல்லவில்லை.

“ஊரில் பெரும் மழையும் மண்சரிவுகளும், அதனால் எனது குடும்பம் இடம்பெயர்ந்துள்ளது. இன்னும் வெள்ளம் வடிந்தபாடில்லை. தொடர்ந்து மழை பெய்கிறது” என்றான் கவலையுடன்.

“ஓ அப்படியா! நாங்களும் கேட்டதாகவும் அவர்கள் பாதுகாப்புக்கு கடவுளை பிரார்த்திப்பதாகவும் அம்மாவுக்கு பதில் போடும்போது சொல்லிவிடு” என்றான் சிங். அவனது அனுதாபத்தை தலை அசைத்து ஏற்றுக் கொண்டான்.

(2)

அம்மா அனுப்பிய கடிதம் கொண்டுவந்த செய்தியால் இரவு நீண்ட நேரம் தூக்கம் இல்லாமல் இருந்தான்.

நேபாளத்தில் அவனது குடும்பம் இருக்கிறது. மலை சார்ந்த பிரதேசம். குளிரும் மழையும் அங்கே வரமும் சாபமும். படிப்படியான தளங்களில் பெட்டிகள் அடுக்கி வைத்த மாதிரி பல வீடுகள். இடையிடையே மரங்களும் பச்சைப் பசேல் என்ற செடிகளும் கண்ணை பறிக்கும் ரம்மியமான சூழல். குடியிருப்புகளுக்கு எதிர்ப்புறம் பாதையை தாண்டி தேயிலைத் தோட்டங்கள் இல்லை இல்லை அவை தேயிலைக் காடுகளாய் விரிந்து கிடந்தது. இது பெண்கள் போடும் முகப் பூச்சு போல கடும் மழைக்கு உருவாகும் காட்டாற்றில் கரைந்து விடும். அதை அண்டி வாழும் மனிதருக்கும் பழக்கப்பட்டுவிட்டது.

மலைச்சாரலில் சில நாட்களுக்கு முன் கடும் மழை பெய்தது. ஐம்பது வருடங்களில் இல்லாத மழைவீழ்ச்சி பதிவாயிருந்தது. பல வீடுகள் அடித்து செல்லப்பட்டும் பலர் காணாமலும் போய்விட்டார்கள். அந்தப் பிரதேசமே கபளீகரம் செய்யப்பட்டுக் கிடந்தது. அவன் வீடு பெரும் பாதிப்படைந்தாலும் தெய்வாதீனமாக குடும்பத்தினர் தப்பி விட்டார்கள் காயங்களுடன். வீட்டின் ஒரு பகுதி இடிந்து விட்டதால் தற்காலிகத் தங்குமிடத்தில் அம்மாவும் தங்கையும் இருக்கிறார்கள்.

“எங்களைப்பற்றி கவலைப்படாத அரசாங்கம் நிவாரணமும் தொண்டு நிறுவனங்கள் தற்காலிக தங்குமிடம் வசதிகளும் தந்திருக்கிறார்கள். எனக்கு காலில் அடிபட்டிட்டு எலும்பு முறிவு இல்லையாம். ஆனால் வீக்கம் இன்னும் இருக்கு. வலிக்கு மருந்து போடுறன். மகன் நீ ஒண்டுக்கும் கவலைப்படாத” என்று மறுபடியும் அவனை தேற்றிய தாயின் வார்த்தைகள் கடிதம் முழுதும் விரவிக் கிடந்தது. மாதத்திற்கு ஒருதடவை வரும் கடிதம் இப்போ இரெண்டு மாதம் கழித்து இப்படி இடியை கொண்டு வரும் என்று அவன் நினைக்கவில்லை.

“தொலைத்தொடர்புக் கம்பிகள் அறுந்து விட்டதால் நீ கோல் பண்ணி கதைக்க ஏலாது. சம்பளம் கிடைச்சால் வழமையா அனுப்பும் வங்கிக்கு அனுப்பு அதைப் பக்கத்து டவுனில் தங்கச்சியை அனுப்பி எடுக்கலாம்” என்று தொடர்ந்தது கடிதம்.

அந்தப் பிரதேசத்தில் பலரும் வீடிழந்து விட்டதுடன் மண்சரிவு பல உயிர்களைக் காவு வாங்கியிருந்தது. செய்வதறியாமல் தவித்தவன் நாளைக்கே அவர்களுக்கு ஆறுதலாக நாலுவார்த்தை எழுதி அனுப்ப வேண்டும் அத்துடன் செலவுக்குக் காசும் அனுப்ப முதலாளியிடம் கேட்டுப்பார்ப்பது என்றும் முடிவு செய்தான். முதலாளியிடம் நேரடியாகக் கேட்பது அவ்வளவு இலகுவானது இல்லை. கறாரான மனிதன். ஏதுவானாலும் அவனது மேற்பார்வையாளர் ஊடாகவே கேட்டுப்பார்ப்பது என்று சிந்தித்தவாறு படுக்கையில் உழன்றவன் நீண்ட நேரத்தின் பின்னே அயர்ந்தான்.

மத்திய கிழக்கில் கட்டார் நாட்டில் ஒரு துப்புரவு செய்யும் நிறுவனத்தில் அவன் வேலை செய்கிறான். சிறு வயதில் போலியோ வந்து ஒரு கால் பாதிப்புக்கு உள்ளாகியது. சற்று இழுத்து இழுத்து நடப்பான். மெல்லிய உடல்வாகும் இயல்பாகவே அமைதியும் மென்மையான சுபாவமும் அவன் மேல் கருணையை ஏற்படுத்தும். அதிகம் படிக்கவில்லை அதனால் எந்த விடயமாக இருந்தாலும் புரிந்து கொள்வதில் சிரமப்படுவான். அப்பாவித்தனமே அவனில் குடி கொண்டிருந்தது. தகப்பன் வேறு திருமணம் செய்து போய்விடக் குடும்பக் பொறுப்பு இவன் மேலே வந்தது. பலவழிகளில் முயற்சி செய்து இப்போதுதான் இங்கு வந்து எட்டு மாதங்கள் ஆகிறது.

வேலை செய்யும் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வீடு ஒன்றில் அவனுடன் சில ஊழியர்களும் தங்கியிருக்கிறார்கள். மற்றவர்கள் இந்தியநாட்டு ஊழியர்கள். வீரேந்தர் சிங் என்ற பஞ்சாபி அவனுடன் நெருக்கமாகப் பழகினான். நேபாளிகள் கொஞ்சம் ஹிந்தி பேச தெரிந்தவர்கள். ஆகவே சிங்குடன் பேசுவதும் புரிந்து கொள்வதும் இலகுவாக இருந்தது. இவனின் நிலையறிந்து சிங் சேர்ந்து சமைத்து பங்கிட்டார்கள். தாங்குமிடத்தை துப்பரவு செய்வது பொருட்கள் வாங்குவது போன்ற வேலைகளில் ஒத்தாசையாகவும் இருப்பான்.

அவனது இயலாமை கருதி கொஞ்சம் இலகுவான பணிகளையே நிறுவனம் வழங்கியிருந்தது. அலுவலகத்தில் உதவி செய்வது போக வேலைத் தளத்தில் சிறிய துப்புரவு வேலைகள், இயந்திரங்களுக்கு எரிபொருள் நிரப்புவது போன்ற வேலைகள் செய்தான்.

(3)

அரை மணித்தியால பயணத்தின் பின் வாகனம் ஒரு குறுக்குத்தெருவில் நிறுத்தப்பட்டது. இரண்டு மாடியில்லா வீடுகள் அடுத்தடுத்து வரிசையில் இருந்தது. ஒரு வாரமாகத் துப்புரவுப் பணி அந்த வீடுகளில் நடந்து கொண்டிருந்தது. அவை புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள். உரிமையாளர்களுக்கு கையளிக்க முன் முற்று முழுதாகத் துப்புரவு செய்ய வேண்டும். ஒரு வீட்டின் முன்னாள் வேலைக்கு தேவையான கருவிகளுடன் காற்று அழுத்த இயந்திரமும் இருந்தது.

“ஸ்டார்ட் பண்ண ஆயத்தப்படுத்து” என்று சொல்லிட்டு சிங் மற்றவர்களுடன் உள்ளே சென்றான்.

எண்ணை அளவைப் பார்த்துத் தேவையான அளவு நிரம்பிவிட்டான். அதுதான் அந்த இயந்திரத்தில் அவனுக்குத் தெரிந்த ஒரே வேலை. அந்த இயந்திரத்தை இயக்கும் வேலையை மேற்பார்வையாளர் சிங்குக்கு கொடுத்திருந்தார்.

சில நிமிடங்களின் பின் கீழே வந்த சிங் இயந்திரத்தை சரிபாத்து இயக்கிவிட்டு இரண்டாம் மாடிக்கு செல்லமுன்,

“நீ கீழ் தளத்தில் இருக்கும் கதவுகள் யன்னல்களை துடைத்து விடு” என்று உரக்க கத்தி சொன்னான் அந்த இயந்திரத்தின் இரைச்சலையும் மீறி. இவனும் தலையசைத்து விட்டு கீழ் தளத்துக்கு சென்று விட்டான்.

மதியம் நெருங்கும் நேரம். வெளியில் தார் சாலையில் கானல் நீர் காட்சி மிதந்து கொண்டிருந்தது. கண் கூசும் வெய்யில்.

இரண்டாம் தளத்தில் யன்னலில் இருந்து சிங் கூப்பிட்டான்.

வெளியில் வந்து மேலே பார்த்தவனை,

“அதை நிறுத்து இங்க வேலை முடிஞ்சுது. கவனம் காற்றாடிக்குப் பக்கத்தில் இருக்கும் சிவப்பு பொத்தானை அழுத்து” என்றான் அவசரமாக.

அவனுக்கு இது முதல் தரம். இன்று என்ன நினைத்தானோ தெரியாது இலகுவான வேலை என்பதால் அவனை நிறுத்தச் சொல்லியிருக்கிறான். அந்த இயந்திரத்தின் குளிர்விக்கும் காற்றாடி ஒரு அடி சதுர துவாரத்தின் வழியே உள்ளே வேகமாகச் சுற்றிக்கொண்டு இருந்தது.

தாண்டித்தாண்டி நடந்து இயந்திரத்துக்குக் கிட்ட வந்தவன் சிவப்பு பொத்தானை கூர்ந்து தேடினான். பளிச்சென்று இருந்த வெயிலும் வேகமாக ஓட்டிக் கொண்டிருந்ததாலும் காற்றாடி அவன் கண்ணுக்குத் புலப்படவில்லை. இரைச்சல் காதை அடைத்தது. வலது கையை உள்ளே விட்டு பொத்தானை தேட முற்பட்டான்.

“படார்” என்று ஒரு சத்தம்.

அலறிக் கொண்டு கையை வெளியே எடுக்கவும் நடு விரல்கள் மூன்றும் துண்டாகியிருந்தது. விரல் எலும்புகள் முற்றுமுழுதாக வெட்டப்பட்டு ஒருபக்கம் தோலில் தொங்கியது. மற்றக்கையால் மூன்று வெட்டுப்பட்ட விரல்களை தூக்கி பொருத்திக்கொண்டு நின்றான். வலியுடன் இரத்தப்பெருக்கும் சில நொடிகளில் அவனை மயக்கம் அடைய செய்தது. மேலே நின்று பார்த்துக்கொண்டிருந்த சிங் தனது தலையில் அடித்துக்கொண்டு கீழே ஓடி வந்தான்.

(4)

சில நாட்களில் விரல்கள் இழந்ததால் சிறிய நட்டஈடுடன் அவனது நாட்டுக்கே திருப்பி அனுப்ப நிறுவனம் முடிவுசெய்துவிட்டது. அன்று விமான நிலையத்திற்கு கூட்டி செல்ல வாகனம் ஆயத்தமாகக் கேட்டடியில் காத்திருக்க தோளில் பையை சுமந்தபடி அதை நோக்கி மெதுவாக நடந்தான்.

திரும்பி தன்னை வழியனுப்ப வாசலில் நின்ற மற்றவர்களை நோக்கி வலி மாறாத கையால் அசைத்து விடை பெற்றவன் அங்கே ஓரத்தில் மறைவாக நின்ற சிங்கை பார்த்து புன்முறுவல் செய்தான். சிங்கின் கண்கள் கலங்கியிருந்தது. அலட்சியம் பெரும் குற்ற உணர்வாக அவனை வாட்டியது.

நேபாளத்தில் அவனது குடும்பம் இருக்கிறது. மலை சார்ந்த பிரதேசம். குளிரும் மழையும் அங்கே வரமும் சாபமும். படிப்படியான தளங்களில் பெட்டிகள் அடுக்கி வைத்த மாதிரி பல வீடுகள். இடையிடையே மரங்களும் பச்சைப் பசேல் என்ற செடிகளும் கண்ணைப் பறிக்கும் ரம்மியமான சூழல். குடியிருப்புகளுக்கு எதிர்ப்புறம் பாதையை தாண்டித் தேயிலை தோட்டங்கள் இல்லை இல்லை அவை தேயிலைக் காடுகளாய் விரிந்து கிடந்தது. இது பெண்கள் போடும் முகப்பூச்சுப் போல கடும் மழைக்கு உருவாகும் காட்டாற்றில் கரைந்து விடும். அதை அண்டி வாழும் மனிதருக்கும் பழக்கப்பட்டு விட்டது.

வாகனத்தில் மெதுவாக ஏறியமர்ந்தவன் அருகில் தனது பையை வைத்தான். விரல்களை இழந்த கை அந்தப்பையை அணைத்தது. இன்னும் பதில் போடாத அம்மாவின் கடிதம் அவன் பையில் இருக்கிறது புதிய கேள்விகளுடன்.

(முற்றும்)

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

## அண்ட ஆற்றலுடன் இணைதல்

நாம் அடிப்படையில் சுதந்திரமான ஆன்மாக்களாக இருந்த போதும் இன்ப, துன்பங்களை அனுபவிப்பது போன்று தோன்றுவது, நாம் நமது மனம், அதன் நினைவுகள் மற்றும் புலன்கள் பெறும் அனுபவங்கள் வழியாக உலகைக் காண்பதாலேயே. மனம் இயற்கையின் ஒரு கூறு. ஆனால் ஆன்மா நிலையானது. மனம் போன்ற மாறும் எதுவும் நித்தியமான ஆன்மா ஆகாது. ஆன்மா சுதந்திரமானது. நாம் அந்த அறிவின் வடிவு என்று உணர்ந்து கொள்வதற்கும், அந்த இறையின் செயற்பாட்டை நம் மூலமாக வெளிக்காட்டவும் நாம் தியான வாழ்வின் மூலம் பெறும் அன்பும் அமைதியும் போதுமானது. இங்குதான் யோக பயிற்சியும் சாதனையும் முக்கியத்துவம் பெறுகிறது. ஊதுபத்தியின் மணம் எங்கும் நறுமணத்தைப் பரவ விடுவது போல, ஆன்மீக யோக சாதனையில் நிலைபெற்று, சாத்வீக குணத்தில் நிலைபெற்ற ஒரு யோகியால், சாத்வீக ஒளியை எங்கும் அனுப்ப முடியும். இவரை நாடி வருபவர்களும் தூய்மை அடைகிறார்கள்.

நாம் உலகியலில் இருக்கும் போது இயற்கையால் நாம் இன்பத்தையோ, துன்பத்தையோ அனுபவிப்பது போன்ற தோற்றப்பாடு உள்ளது. இது நம் அறியாமையால் ஏற்படுகிறது. ஆன்ம ஒளியைக் கடன் வாங்கியதால் அத்தகைய எண்ணம் ஏற்படுகிறது. உண்மையில் ஆன்மா சுதந்திரமானது. தன்னுணர்வு ஏற்படும் போது, இயற்கையின் கவர்ச்சிகள் நீங்கி விடுகின்றன. எனினும் மற்றவர்களுக்கு இந்த உண்மையை உணர்த்துவதற்காக இயற்கை தன் கடமையைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறது. ஐம்பூதங்களின் சேர்கையினால் உருவான இந்த உடலும் மனமும் தன் அடையாளம் அல்ல என்பதை உணரும் போது சூடு-குளிர், இன்பம்-துன்பம், உயர்வு-தாழ்வு, நல்லது-கெட்டது போன்ற இருமைகளில் சமநிலையும், எதற்கும் தீர்ப்பு வழங்காத (Non-Judgement) மனநிலையும் ஏற்பட்டு, அமைதி, சாந்தம் சாத்தியமாகிறது. இந்த உடலோடும் மனத்தோடும் நம்மை அடையாளப்படுத்தும் அறியாமை அகல, யோகப்பயிற்சி அவசியமானது.

**‘விவேகத்தை இடைவிடாது பயில்வது அறியாமையை ஒழிக்கும் வழி’ -யோக சூத்திரம் 2.26**

நம்மோடு சேருவதும் விலகுவதுமான இயற்கையின் விளையாட்டை உணர்ந்து, உண்மையானது எது, அறியாமை எது, என்பதை பிரித்தறியும் விவேகத்தைப் பயிற்சி செய்வதனால் தன்னுணர்வு எனும் ஆனந்தத்தில், சுயத்தில் நிலைபெறலாம்.

யோகத்தின் பல அங்கங்களைப் பயில்வதன் மூலம், அறியாமை விலகி, அறிவு துலங்கி, இறுதியில் விவேகத்தில் நிலை பெறலாம் என்கிறார் பதஞ்சலி முனிவர். இங்கு எட்டு அங்கங்களை உடைய அட்டாங்க யோகத்தைப் பற்றி கூற ஆரம்பிக்கிறார். எதற்காக இந்த இரண்டாவது பாதத்தின் ஆரம்ப சூத்திரத்தில் கிரியா யோகத்தைப் பற்றிக் கூறிய பதஞ்சலி முனிவர், தற்போது அட்டாங்க யோகத்தைப் பற்றிக் கூற ஆரம்பிக்கிறார் என சந்தேகம் எழலாம். இதுவரையான சூத்திரங்களை அவதானித்தவர்களுக்கு, மூன்று வகையான பயிற்சிகள் பதஞ்சலி சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். முதலாவதான சமாதிபாதத்தில்

**‘பயிற்சியாலும் பற்றின்மையாலும் அவற்றை (மனதின் விருத்திகளை) அடக்கலாம்.’ - 1.12**

என்று கூறியிருந்ததைப் பார்த்தோம். இங்கு பற்றின்மை என்பது செயல்களின் விளைவுகளில் பற்று வைத்து, மனவிருத்திகளில் நம் சுயத்தை இழக்காமல், அன்பின் வழியில் கடமை புரிதலாகும். பயிற்சி என்பது தொடர்ச்சியாக நமது மனவிருத்திகளை நிறுத்துவதற்கான முயற்சியாகும். இந்தச் சூத்திரமானது ஆன்மீக நிலையில் முன்னேறிய, இலகுவில் தம்முயற்சியினால் மேல் நிலைக்கு செல்லக்கூடிய சாதகர்களுக்கான பயிற்சியாகவே பதஞ்சலி முனிவரால் கூறப்பட்டுள்ளது என்பது பலரது கருத்தாக உள்ளது.

இடைநிலையில் உள்ள சாதகர்களுக்காக இந்த சாதனை பாதத்தின் ஆரம்ப சூத்திரமான

**“தவம், சுய அறிதல், செயலின் பயனை இறைவனுக்கு அர்ப்பணித்தல் கிரியா யோகம்’ 2.1**

கூறப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் உள்ள சாதகர்களுக்காக கூறப்பட்டுள்ளதே அட்டாங்க யோகமாகும். இதனை விரவாக வரும் சூத்திரங்களில் பார்க்கலாம். எமது உடலையும் மனதையும் பக்குவப்படுத்தும் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் மற்றும் சமாதி மூலம் யோகத்தின் உச்ச நிலையை எட்ட முடியும்.

**‘கொல்லாமை, உண்மை பேசுதல், களவு செய்யாமை, பிரமச்சரியம், பேராசையின்மை இயமங்கள்.’ -2.30**

இயமங்கள் என்பவை நாம் கடைப்பிடிக்க வேண்டிய சமூக ஒழுக்கங்கள் ஆகும். கொல்லாமை என்பது அகிம்சை என்றாகிறது. மனம், வாக்கு, காயத்தினால் நாம் அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும். கொல்லாமையில் நிலைபெற்றவனின் முன்பு பிறரது பகைமை ஒழிந்து விடும் என்கிறார். அன்றாட வாழ்வில் நாம் சிறிய விடயங்களில் கூட உண்மையாக நடந்து கொள்ளும் பயிற்சியானது, பேருண்மையான அந்த இறை நிலையுடன் இணைவதற்கான ஆரம்ப படிகளே. உண்மையைக் கடைப்பிடிக்கும் யோகி, செயல் புரியாமலே அவன் சொல்லுவது, எண்ணுவது எல்லாம் பலித்து விடும் என்கிறார். களவின்மையில் நிலைபெற்றவனுக்கு எல்லாச் செல்வமும் அவனை நாடிவந்து சேரும். இயற்கையில் இருந்து விலகி நமது சாதனையில் மனம் குவிக்க, இயற்கை நம்மை நாடி வருகிறது. பிரமச்சரியத்தில் ஈடுபட, பிரமச்சரிய சக்தி உண்டாகிறது. இழக்கப்படும் வீரிய சக்தியானது, யோக சாதனைகளால், உயர் உணர்வுநிலையை எய்துவதற்காக பயன்படுத்த முடியும். யோகிகளில் மலர்ந்திருக்கும் தேஜஸ் ஆனது இந்த வீரிய சக்தியின் நிலை மாற்றத்தால் ஏற்பட்டதே. பேராசையற்றவன், தூய்மையானவனாக இருக்கிறான். அவனுக்கு முற்பிறவி பற்றிய நினைவைப் பெற முடிகிறது.



திருமூலர் தன் திருமத்திரத்தில் மேலும் ஐந்தைச் சேர்த்துக் கூறுகிறார்.

**கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய**
**வல்லான் பகுந்துஉண்பான் மாசிலான் கள் காமம்**
**இல்லான் இயமத்து இடையில் நின்றானே**

**திருமந்திரம்-554**

கொல்லாமை, பொய் கூறாமை, பிறர் பொருள் திருடாமை, எதையும் எண்ணிப் பார்த்து ஆராய்ந்து அறியும் குணம், நற்பண்புகள், அடக்கமுடைமை, நடுநிலை தவறாமை, பிறர்க்கு பகிர்ந்து உண்ணல், மனதில் குற்றம் இல்லாமை, கள்காமம் போன்ற பழக்கங்களைத் தவிர்த்தல் எனும் பண்புகளால் இயமத்தில் நின்று இமயமாகலாம்.

**‘தூய்மை, திருப்தி, தவம், கற்றல், இறைவழிபாடு இவை நியமங்கள்’ - 2.32**

நியமங்கள் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சுய ஒழுக்கங்கள் ஆகும். இங்கு தூய்மை என்பது அக, புற தூய்மையைக் குறிக்கிறது. தூய்மையில் நிலை பெற்றவனுக்கு தன் உடல் மீது பற்றின்மையும், பிற உடற் தொடர்பின்மையும் ஏற்படும் என பிறிதொரு சூத்திரத்தில் கூறுகிறார். யோக சாதனையால் தன்னை அறியாமலே உள்ளும் புறமும் தூய்மை நிலையை அடைந்து வரும் ஒருவனுக்கு உணர்வுகளின் தூய்மையும், உடல் ஆரோக்கியமும் அவன் நாடாமலேயே தானாக வந்து அமைந்து விடுகிறது. மன உற்சாகம், மன ஒருமைப்பாடு, புலன்களின் மீதான வெற்றி மூலம் ஆன்ம விடுதலைக்குத் தயாராகிறான். தன் தேவைகளுடன் திருப்தியுறும் ஒருவனுக்கு எல்லையற்ற ஆனந்தம் ஏற்படுகிறது. மனம், வாக்கு, காயத்தினால் செய்யப்படும் தவங்களினால் உடலிலும், புலன்களிலும் காணப்படும் அழுக்குகள் நீங்குவதோடு, அவை ஆற்றலும் பெறுகின்றன. தன்னை அறியும் ஞானயோகத் தேடலினால், ஆன்மீக நூல்களைக் கற்றலினால் அறியாமை நீங்குகிறது. வழிபாட்டின் மூலம் அனைத்தையும் இறைவறுக்கு அர்ப்பணம் செய்வதால் இறைசக்தியுடன் ஒன்றும் சமாதி அனுபவம் கைகூடுகிறது.

**தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்**
**சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
**மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து**
**நிவம்பல செய்யின் நியமத்த னாமே.**

**திருமந்திரம் - 557.**

தவம், செபம், மகிழ்ச்சி, கடவுள் நம்பிக்கை, பிற ருக்கு உதவுவது, சிவவிரதம், சித்தாந்த அறிவு, வேள்வி, சிவபூசை, சோதி வழிபாடு எனும் பத்தும் திருமூலரால் கூறப்பட்டுள்ளன.

**‘உறுதியாகவும் சுகமாகவும் இருப்பது ஆசனம்’ - 2.46**

பதஞ்சலி சூத்திரத்தில் ஆசனங்கள் பற்றி விரிவான சூத்திரங்கள் இல்லை. அந்தக் காலத்தில் ஆசனம் என்பது பிராணாயாமம், தியானம், சமாதிக்கு உடலைப் பற்றிய எண்ணமின்றி, உறுதியாக ஒரு இடத்தில் இருப்பது என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் ஆசனங்கள் பல்வேறு வகையாக விரிவடைந்து தற்போது நாம் கற்கும் ஹத யோகமானது எனலாம். ஆசனம் உறுதியாகும் பொது இருமை உணர்வுகளினால் தடைகள் ஏற்படுவதில்லை என்கிறார்.

உள்மூச்சு, வெளிமூச்சை ஒழுங்குபடுத்துவது, நிறுத்துவது என பிராணாயாமத்தில் 3 செயல்கள் உள்ளன என்கிறது பிராணாயாமம் பற்றிய சூத்திரங்களில் ஒன்று. எனினும் செயல்முறை பற்றிய விரிவான விளக்கங்களை பதஞ்சலி முனிவர் கொடுக்கவில்லை.

**‘புறத்திலோ அகத்திலோ உள்ள பொருட்களை நினைத்துக் கொண்டு பிராணனை நிறுத்துவது நான்காவது வகைப் பிராணாயாமம்.’ - 2.51**

பிராணாயாமத்தின் நோக்கமானது ராஜச, தமச குணங்களினால் (திரைகளினால்) மறைக்கப்பட்டுள்ள சாத்வீக அறிவை தூண்டி எழுப்புவதாகும். பல்வேறு வகையான பிராணாயாமங்களில் பயிற்சி செய்யும் பொது எம்முள் என்றும் உள்ள பிராண சக்தியுடன் இணைந்து கொள்கிறோம். எமது உடல் நலத்திற்கு நன்மை பயக்கும் பிராணாயாமமானது, தனியே அதிகமான ஒட்சிசனை உள்ளே இழுப்பதுடனோ அல்லது ஆழமாக மூச்சை எடுப்பதுடனோ முடிந்து விடுவதில்லை. உண்மையில் எமது மூச்சினதும், மனதினதும் செயற்பாடுகளுக்குப் பின்னுள்ள அந்த இறப்பற்ற உள்ளக பிராண சக்தியை அணுகி அதனை பிரபஞ்ச பிராண சக்தியுடன் இணைக்கும் வேலையைச் செய்கிறது. இந்த இணைப்பு ஏற்படும் போது இயல்பாகவே எமது வெளி மூச்சு நின்று விடும், கேவல பிராணாயாமம் எனும் சமாதி நிலை ஏற்படுகிறது. இதனையே பதஞ்சலி முனிவர், நான்காவது வகைப் பிராணாயாமம் என்று குறிப்பிடுகின்றார். புலன்களின் மிகவுயர்ந்த அடக்கத்தில், இந்த நிலையிலேயே, பிரபஞ்ச பிராணனுடன் அல்லது அண்ட ஆற்றலுடன் இசைந்து இருக்கிறோம். உண்மையில் கேவல பிராணாயாமம் என்பதை மூச்சற்ற சமாதி நிலை என்று குறிப்பிடுவதை விட, அண்ட ஆற்றலுடன் அல்லது இறை சுவாசத்துடன் ஒன்றிய நிலை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். இந்த நான்காவது பிரணாயாமத்தின் மூலம் நம்முள் தூங்கும் குண்டலினி சக்தி விழிப்புறுகிறது. கர்ம வினையினால், மனதை மூடியிருந்த அறியாமை இருள் விலகுகிறது. உள்ளொளி பரவுகிறது. புலன்களின் மீதான மிக உயர்ந்த வெற்றி கிடைக்கிறது. இதனை அட்டாங்க யோகத்தில் பிரத்தியாகாரம் என்று அழைப்பர். இதன் மூலம் அடுத்த அங்கமான மனக்குவிப்பு அல்லது தாரணை இலகுவாகிறது. ■

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

# தெரிந்த சினிமா தெரியாத வரலாறு

ரமணி

சிவனின் திருவிளையாடல் கதைகளைத் தொகுத்து “திருவிளையாடல்” எனும் பெயரில் திரைப்படம் இயக்குவதற்கு முடிவு செய்த ஏ.பி. நாக ராஜன், சிவாஜியிடம் கதையைக் கூறினார்.

‘திருவிளையாடல்’ திரைப்படத்தின் கதையைக் கேட்ட நடிகர் திலகம் சிவாஜி, “என்னண்ணே சடா முடி எல்லாம் வைச்சுக்கிட்டு நான் சிவனா நடிச்சா ஜனங்க ஏத்துக்குவாங்களா?” என்று இயக்குநரிடம் சிவாஜி கேட்டாராம்

அதற்குப் பதில் அளித்த நாகராஜன், “நீங்கள் இந்தப் படத்தில் நடித்த பின் நீங்கள் தான் சிவன் என்று மக்கள் நிச்சயம் சொல்வார்கள். அப்படிச் சொல்லலைன்னா நான் திரைப்படத்துக்குக் கதை எழுதுறதையும், திரைப்படம் எடுக்கிறதையும் விட்டு விடுகிறேன்” என்றாராம்.

அதில் ஒரு கம்பீரம் இருக்காது என்று அந்த முடிவை யும் கைவிட்டாராம்.

இறுதியில் சிவாஜி நாடக மன்றத்தைச் சேர்ந்த நடிகர் தங்கராஜ் என்பவரையே நடிக்க வைப்பது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது.

திருவிளையாடல் திரைப்படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடந்து கொண்டிருந்தது.

மறுநாள் நக்கீரரும், சிவபெருமானும் நடிக்க வேண்டிய காட்சி படம் பிடிக்கப்பட வேண்டும்.

அதற்கு முதல்நாள் படப்பிடிப்பு முடிந்தவுடன் நடிகர்திலகம் சிவாஜி இயக்குநர் நாகராஜனை அழைத்து,



திருவிளையாடல் படத்தில் நக்கீரராக நடிகர் எஸ்.வி.ரெங்காராவை நடிக்க வைக்கலாம் என்று இயக்குநர் ஏ.பி.என் முதலில் நினைத்தாராம். அவர் ஒரு சிறந்த நடிகர்தான் என்றாலும், அந்தப் பாத்திரத்தில் நன்கு தமிழ் பேசி நடிப்பாரா என்ற சந்தேகம் எழுந்ததால் அதனைக் கைவிட்டாராம்.

அடுத்து நக்கீரராக நடிப்பதற்கு கவியரசர் கண்ணதாசனைத் தேர்ந்தெடுக்கலாமா? என்று நினைத்தாராம்.

கவியரசர் நன்றாகத் தமிழ் பேசுவார். ஆனால்



“அண்ணே.. நக்கீரராக நீங்களே நடிச்சிருங்க... அது தான் நல்லா இருக்கும்” என்றார்.

அதற்கு இயக்குநர் நாகராஜன், “நான் நடிப்பதை விட்டு ரொம்ப நாளாச்சு. இப்பப் போய் நடிக்க வேண்டுமா?” என்றாராம். அத்துடன் அதில் நடிப்பதற்கு தங்கராஜ் அவர்களை முடிவு பண்ணியாச்சே... அவரே நடிக்கட்டுமே...” என்றார்.

ஆனால் நடிகர் திலகம் சிவாஜி அதற்குச் சம்மதிக்கவில்லை. “நீங்கள் நடித்தால் தான் சிறப்பாக இருக்கும்” என்றிருக்கிறார்.

அப்போதும் நடிகாரில் ஏறிவிட்டு,

நாகராஜனைப் பார்த்து “அண்ணே.. நாளைக்கு நீங்க நக்கீரராக நடிப்பதாக இருந்தால் தான் நான் சிவனாக நடிப்பேன். இல்லாவிட்டால் நான் நாளை படப்பிடிப்புக்கு வர மாட்டேன்” என்று சொல்லி விட்டு வேகமாகச் சென்று விட்டார்.

சிவாஜிக்கு எதிராகக் கம்பீரமாகத் தமிழ் பேசி நடிப்பதற்குப் பொருத்தமான நடிகர் இல்லை என்பதை நீண்ட யோசனைக்குப் பின்னர் உணர்ந்த நாகராஜன் தானே நக்கீரராக நடிப்பதற்கு முடிவு செய்தார். அக்கம்மாபேட்டை பரமசிவம் நாகராஜனின் சுருங்கிய வடிவம்தான் ஏ.பி.நாகராஜன் ஒப்பனையில் திரையில் ஜொலிக்கும் நக்கீரர்.

திருவிளையாடல் படத்தில் சிவன் சிவாஜியும், நக்கீரர் நாகராஜனும் விவாதிக்கும் வசனங்களை அந்தக் காலத்தில் பலர் பாடமாக்கினார்கள்.

திருவிளையாடல் படத்தில் அந்தக் காட்சிக்கு பலத்த கைதட்டல் எழுந்தது. சிவாஜிக்கு எதிராக கம்பீரமாகத் தமிழ் பேசி இப்படி நடிப்பேன் என நாகராஜன் முதலில் நினைக்கவில்லை ஆனால், சிவாஜி அதனை தெரிந்து நாகராஜனை நடிக்க அழைத்தார்.

அந்தக் காட்சியில் சிவாஜியின் நடிப்பு சிறந்ததா, நாகராஜனின் நடிப்பு சிறந்ததா எனச் சொல்ல முடியாது. திருவிளையாடல் படத்தில் சிவன் சிவாஜியும் தருமி நாகேஸூம் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உரையாடும் காட்சியை என்றைக்கும் மறக்க முடியாது. கம்பீரமான சிவாஜிக்கு முன்னால கூனிக் குறுகி நடித்த நாகேஷின் நடிப்பு அற்புதமானது. அவரது உடல் அசைவை யாருமே இதற்கு முதல் செய்ததில்லை.

படப்பிடிப்பு ஓய்வு நேரத்தில் நாகேஷை வைத்துச் சில காட்சிகளை நாகராஜன் எடுத்தார். அப்போது அங்கே வந்த சிவாஜி கோபமாக முறைத்துப் பார்த்தார். பெரிய நடிகர்கள் சிறிய நடிகர்களை அடக்கியாள்வதால் அந்தக் காட்சிகள் திரையில் வருமா இல்லையா என அங்கிருந்தவர்கள் சந்தேகப் பட்டார்கள்.

படப்பிடிப்பு முடிந்து அந்தக் காட்சியைப் பார்த்த போது சிவாஜிக்கு மேலாக நாகேஷின் நடிப்பு தெரிந்தது. ஒரு சிலவற்றை வெட்டும்படி சிவாஜி சொல்வார் என அனைவரும் நினைத்தனர். “ இவன் என்னையே தூக்கி சாப்பிடிட்டான்” எனக் கூறிய சிவாஜி அந்தக் காட்சி அப்படியே இருக்கட்டும் என்றார். ■

# நோர்வேயில் பேச்சுவார்தை நடத்திய ஆப்கான் தலைவர்கள்



ஊர்மிளா

ஆப்கானிஸ்தானில் மோசமான மனிதாபிமான சூழ்நிலைக்கு மத்தியில், தற்காலிக வெளியுறவு மந்திரி அமீர் கான் முட்டாகி தலைமையிலான தலிபான் பிரதிநிதிகள் ஞாயிற்றுக்கிழமை மேற்கத்திய அதிகாரிகள், ஆப்கானிஸ்தான் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஒஸ்லோவில் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர்.

நோர்வே தலைநகரில் பனி மூடிய மலைகளில் உள்ள ஒரு ஹோட்டலில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் முதல் முறையாக ஐரோப்பாவில் அவர்களின் பிரதிநிதிகள் அதிகாரப்பூர்வ கூட்டங்களை நடத்தினர். நோர்வேயில் நடைபெறும் பேச்சு வார்த்தை தலிபான் அரசாங்கத்தை சட்டபூர்வமாக்குகிறதா? என்ற விவாதத்தை மீண்டும் தூண்டியது.

முதல் நாள் பேச்சுவார்த்தையின் முடிவில் பேசிய தலிபான் பிரதிநிதி ஷஃபியுல்லா ஆசம், “மேற்கத்திய அதிகாரிகளுடனான சந்திப்புகள் ஆப்கானிய அரசாங்கத்தை சட்டபூர்வமாக்குவதற்கான ஒரு முயற்சி. இந்த வகையான அழைப்பும் தொடர்பும் ஆப்கானிஸ்தானை முன்னேற்ற உதவும்” என்று ஏ.பி செய்திச் சேவையிடம் கூறினார். இந்த அறிக்கை நோர்வே அனுசரணையாளர்களை எரிச்சலடையச் செய்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தலிபான்களின் சட்டபூர்வமான அல்லது அங்கீகாரம் அல்ல என்று நோர்வே வெளியுறவு அமைச்சர் ஆன்னிகென் வலியுறுத்தினார். பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை தலிபான் தலைவர்கள் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தனர், ஆனால் அந்தப் பேச்சுக்கள் பற்றி அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ஞாயிற்றுக்கிழமை, 200 எதிர்ப்பாளர்கள் ஒஸ்லோவில் உள்ள நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் முன் பனிக்கட்டிச் சதுக்கத்தில் கூடி, எந்த வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்தும் இராஜதந்திர அங்கீகாரத்தைப் பெறாத தலிபானுடனான சந்திப்புகளைக் கண்டித்தனர்.

மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்த தலிபான் பிரதிநிதிகள் ஆப்கானிஸ்தான் ஒரு அபத்தான மனிதாபிமானச் சூழ்நிலையை எதிர்கொள்வதால், அமெரிக்காவாலும், பிற மேற்கத்திய நாடுகளாலும் முடக்கப்பட்ட சுமார் 10 பில்லியன் டொலரை விடுவிக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை சில பணப்புழக்கத்தை வழங்கியது மற்றும் மின்சாரம் உட்பட இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்த தலிபான் நிர்வாகத்தை அனுமதித்தது. ஆனால், 1 மில்லியன் ஆப்கானிஸ்தான் குழந்தைகள் பட்டினியால் வாடும் அபாயத்தில் இருப்பதாகவும், நாட்டின் 38 மில்லியன் மக்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர் என்றும் ஐ.நா. எச்சரித்துள்ளது.

தலிபான்களின் நிதிக் கோரிக்கையை எதிர்கொண்டு, மேற்கத்திய சக்திகள் ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளைத் தங்கள் நிகழ்ச்சி நிரலில் உயர்வாக வைக்க வாய்ப்புள்ளது, தலிபான் நிர்வாகம் ஆப்கானிஸ்தானின் சிறுபான்மை இன மற்றும் மத குழுக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மேற்கு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆப்கானிஸ்தானுக்கான சிறப்புப் பிரதிநிதி டாம் வெஸ்ட் தலைமையிலான அமெரிக்கக் குழு, “பிரதிநிதித்துவ அரசியல் அமைப்பை உருவாக்குவது குறித்து விவாதிக்கத் திட்டமிட்டுள்ளது் அவசர மனிதாபிமான மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கான பதில்கள் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புகள் மற்றும் மனித உரிமைகள், குறிப்பாக பெண்கள் மற்றும் பெண்களுக்கான கல்வி,” என்று அமெரிக்க வெளியுறவுத்துறை வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் நடுப்பகுதியில் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தலிபான்கள் பரவலான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர், அவர்களில் பலர் பெண்களை குறிவைத்தனர். பெண்கள் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு வெளியே பல வேலைகளில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளனர், ஆறாம் வகுப்புக்கு அப்பால் கல்வி கற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது மற்றும் அவர்கள் ஹிஜாப் அணிய உத்தரவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தலிபான்கள் 1990 களில் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்தபோது கட்டாயமாக இருந்த புர்காவை திணிப்பதை நிறுத்திவிட்டனர்.

தலிபான்கள் அதிகளவில் ஆப்கானிஸ்தானின் முற்றுகையிடப்பட்ட உரிமைக் குழுக்களையும், பத்திரிகையாளர்களையும் குறிவைத்து, ஆர்ப்பாட்டங்களை உள்ளடக்கிய தொலைக்காட்சிக் குழுக்களைத் தடுத்து நிறுத்தி சில சமயங்களில் அடித்துள்ளனர்.

“சர்வதேச சமூகத்தில் சிலர் கூற விரும்புவது போல் தலிபான்கள் மாறவில்லை. அவர்கள் 2001 மற்றும் அதற்கு முன்பு இருந்ததைப் போலவே கொடூரமானவர்கள்” என்று நோர்வேயில் சுமார் இரண்டு தசாப்தங்களாக வாழ்ந்து வரும் நோர்வேயில் வசிக்கும் ஆப்கானியரான அஹ்மான் யாசிர் கூறினார். இறுக்கமான கொள்கைகளை தலிபான்கள் கைவிடும் வரை ஆப்கானில் எதுவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. ■




# கொரோனாவை மறக்கடிக்கும் பீஜிங் ஒலிம்பிக்




சீனாவின் தலைநகரான பீஜிங்கில் பெப்ரவரி 4 ஆம் திகதி குளிர்கால ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாக உள்ளது. பெப்ரவரி 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போட்டிகள் அனைத்தும் முடிவடையும். சீனாவின் வுகான் நகரில் இருந்துதான் கொரோனா ஆரம்பமானதாக உலகம் குற்றம் சாட்டியுள்ளது. கொரோனா தாக்கம் ஒரு புறம் இருக்க குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்காக உலகெங்கிலும் இருந்து விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் சீனாவை நோக்கிப் படையெடுக்க உள்ளனர்.

பெப்ரவரி 4 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்ப வைபவம் நடைபெறும். டோக்கியோவில் 2020 கோடை கால விளையாட்டு கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டது. டோக்கியோ ஒலிம்பிக் நிறைவடைந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு பீஜிங் ஒலிம்பிக் நடைபெற உள்ளது. பீஜிங் ஒலிம்பிக் முடிவடையும் வரை கொரோனா பற்றிய செய்திகள் சீனாவில் இருந்து அதிகளவில் பகிரப்படாது என்பது மட்டும் உண்மை.

சீனாவில் 2008 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் நடைபெற்றது. இப்போது குளிர்கால ஒலிம்பிக் நடைபெற உள்ளது. கோடை கால, குளிர்கால ஆகிய இரண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய பெருமை சீனாவுக்குக் கிடைத்துள்ளது.

2022 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு 2015 ஆம் ஆண்டு சீனாவுடன் நோர்வே, கஜகஸ்தான் ஆகியவை போட்டியிட்டன. நிதிப்பற்றாக் குறையால் நோர்வே போட்டியில் இருந்து விலகியது. கோலாலம்பூரில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பீஜிங்குக்கு 44 வாக்குகளும், அல்மாட்டிக்கு 40 வாக்குகளும் கிடைத்தன. நான்கு வாக்குகள் வித்தியாசத்தில் பீஜிங் வெற்றி பெற்றது. 2.5 பில்லியன் யுவான் செலவு செய்வதற்கு சீனா திட்டமிட்டது. ஆனால், செலவு பல மடங்காக உயர்ந்துள்ளது.

1989 இல் தியனன்மென் சதுக்கப் படுகொலைக்குப் பின்னர் சீனா தனது “மனித உரிமைகளுக்கான இருண்ட காலகட்டத்தில்” உள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதன் ஆண்டு அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. அவர்கள் சின்ஜியாங்கில் உய்குர் முஸ்லிம்களை தன்னிச்சையான காவலில் வைத்தல், கட்டாய உழைப்பு, வெகுஜன கண்காணிப்பு மற்றும் அரசியல் போதனை ஆகியவற்றை மேற்கோள் காட்டினர். மங்கோலியன் பள்ளிகளில் மங்கோலியன் மொழியை சீன மாண்டரின் மொழியுடன் மாற்றுவதற்கான முடிவு மற்றும் திபெத்தில் மத சுதந்திரத்தின் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் அவர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். 2021 ஆம் ஆண்டில், உய்குர் மற்றும் பிற முக்கிய முஸ்லிம் மக்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலை செய்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டியது, அதை சீனா கடுமையாக மறுத்தது. பீஜிங் 2022 விளையாட்டுப் போட்டிகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று பல போராட்டங்கள் மற்றும் அழைப்புகள் உள்ளன. முன்னாள் கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான பெங் வாய் எங்கிருக்கிறார் என்ற மர்மம் நீடிக்கிறது. டெனிஸ் வீராங்கனை பெங் வாய் - சீனாவின் முன்னாள் துணைப் பிரதமர் சாங் கௌலி மீது பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகக் குற்றம் சாட்டியதை அடுத்து, சர்வதேச உறவுகள் இன்னும் மோசமாகியது. சீன வலைத்தளமான வெய்போவில் குற்றச்சாட்டை விவரித்த அவரது ஆரம்ப சமூக ஊடக இடுகையும் நீக்கப்பட்டது. பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் இராஜதந்திர ரீதியாக பீஜிங் ஒலிம்பிக்கை புறக்கணிக்கின்றன. அதிகாரிகள் எவரும் சீனாவுக்குச் செல்ல மாட்டார்கள். ஆனால், விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுவதற்கு எதுவித தடையும் இல்லை. கொரோனா அச்சுறுத்தலைக் காரணம் காட்டிய வட.கொரியா சீனாவுக்குச் செல்லப்போவதில்லை என அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பு குழு சமீபத்தில் ஒரு கருத்தரங்கின் போது விளையாட்டு வீரர்கள், ஊடகவியலாளர்கள், முக்கியமாக விளையாட்டுக்காக சீனாவுக்குச் செல்லும் அனைவரும் சீன அரசின் “ஆர்வெல்லியன்“ அளவிலான கண்காணிப்பின் கீழ் இருப்பார்கள் என்று எச்சரித்தது.

மொத்தம் 20 மில்லியன் மக்கள் வசிக்கும் ஆறு நகரங்கள் தற்போது பூட்டப்பட்ட நிலையில் உள்ளன. ஆறு மாதங்களுக்கு முன்பு டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு விளையாட்டு வீரர்கள் தடுப்பூசி போட வேண்டியதில்லை என்றாலும், இந்த முறை விதிகள் சற்று வித்தியாசமாக உள்ளன. தடுப்பூசி போடாத விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் கிராமம் அல்லது விளையாட்டு மைதானங்களுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் வந்தவுடன் 21 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். நியாயமான மருத்துவ விலக்கு அளிக்கக்கூடிய விளையாட்டு வீரர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். தடுப்பூசி போடப்பட்டவர்கள் அந்தப் பகுதிகளில் அனுமதிக்கப்படுவார்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு விளையாட்டு வீரரும் விமான நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள், அதே நேரத்தில் அவர்கள் விளையாட்டுக்களின் காலம் முழுவதும் வழக்கமான தினசரி சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

2018 குளிர்கால ஒலிம்பிக் போட்டியில், 92 நாடுகள் 102 பதக்க நிகழ்வுகளில் போட்டியிட்டன, தென் கொரியாவின் பியோங்சாங்கில் நடைபெற்றது, 19 நாட்கள் அதிரடிக்குப் பிறகு பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது நோர்வே. மொத்தம் 39 பதக்கங்கள், அதில் 14 தங்கம், மேலும் 14 வெள்ளிகள் 11 வெண்கலம் 31 பதக்கங்களுடன் ஜேர்மனி இரண்டாவது இடத்திலும், 29 பதக்கங்களுடன் கனடா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

2022 பீஜிங் ஒலிம்பிக்கில் ஏழு விளையாட்டுகளில் 109 நிகழ்வுகள் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளன: பயத்தலான், பாப்ஸ்லெடிங், கர்லிங், ஐஸ் ஹாக்கி, லுஜ், ஸ்கேட்டிங் (ஃபிகர் ஸ்கேட்டிங் மற்றும் ஸ்பீட் ஸ்கேட்டிங் இதில் அடங்கும்), மற்றும் பனிச்சறுக்கு (இதில் பனிச்சறுக்கு மற்றும் ஸ்கை ஜம்பிங் ஆகியவை அடங்கும்).

பீஜிங் 2022 இல் ஏழு புதிய நிகழ்வுகள் சேர்க்கப்பட்டன: ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பெரிய ஏர் ஃப்ரீஸ்டைல், பெண்கள் மோனோபாப் (அல்லது ஒற்றை நபர் பாப்ஸ்லெட்), ஃப்ரீஸ்டைல் பனிச்சறுக்கு ஏரியல்களில் கலப்பு குழு போட்டிகள், ஸ்கை ஜம்பிங் மற்றும் ஸ்னோபோர்டு கிராஸ் மற்றும் ஷார்ட் டிராக் ஸ்பீட் ஸ்கேட்டிங்கில் கலப்பு ரிலே.

பீஜிங்கின் போட்டியாளர்கள் 45 சதவீதம் பெண்களாக இருப்பது குளிர்கால ஒலிம்பிக் சாதனையாகும். பியோங்சாங்கில் 2018 குளிர்கால ஒலிம்பிக்கில் கலப்பு-இரட்டையர் கர்லிங் மற்றும் ஆல்பைன் குழுப் பனிச்சறுக்கு ஆகியவை இருந்தன. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பயத்லான், லுஜ் மற்றும் ஃபிகர் ஸ்கேட் டிங் ஆகியவற்றில் கலப்பு-பாலின போட்டிகள் நடைபெற உள்ளன.

டோக்கியோவில் 2020 கோடைகால ஒலிம்பிக்கில் நீச்சல், டிராக், டிரையத்லான், வில்வித்தை, ஜூடோ மற்றும் டேபிள் டெனிஸ் ஆகியவற்றில் ஆண்களும் பெண்களும் ஒரே அணிகளில் போட்டியிடும் ஆறு புதிய போட்டிகள் சேர்க்கப்பட்டன. பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் 2022 ஐத் தொடர்ந்து பாரிஸ் கோடைகால ஒலிம்பிக் 2024 மிலன் குளிர்கால ஒலிம்பிக் 2026 ஆகியவை நடைபெற உள்ளன. 2030 குளிர்கால ஒலிம்பிக் நடத்தும் நாடு எது என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. ■











# உதவி உயிர் காக்கும்

ஒரு காட்டில் பல விலங்குகள் வசித்து வந்தன. காட்டின் ராஜாவான சிங்கம் தினமும் வேட்டைக்குச் செல்வது வழக்கமாகும். ஒரு நாள் முயற்குட்டி ஒன்று வேட்டைக்குச் சென்ற ராஜாவைக் கண்டதும் பயந்து நடுங்கியது. அந்தக் குட்டி முயலை எதுவும் செய்யாமல் விட்டு விட்டு சிங்கம் குகைக்குச் சென்றது. அனைத்து அதிகாரமும் ஆட்சியும் தன்னிடம் இருப்பதால் வன விலங்குகள் தன்னைப் பார்த்துப் பயப்படுவதைச் சிங்கம் உணர்ந்து கொண்டது. மந்திரியான நரியை அழைத்தது. "எனது பதவியை வேறு யாரிடமாவது கொடுக்க விரும்புகிறேன்." என்றது "என்றாவது ஓர் நாள் சிங்கம் அரசாட்சியை விரும்பாவிட்டால், நரியே ஆட்சியை ஏற்க வேண்டும் என முன்னோர்கள் ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளனர்" என்றது நரி. நரியின் பேச்சை உண்மையென நம்பிய சிங்கம் அரசாட்சியை நரியிடம் ஒப்படைத்தது. நரியோ சிங்கத்தைச் சிறைப்பிடித்து நிலக்கீழ்த் தடுப்பறையுள் வைத்தது. மிகவும் கொடூர ஆட்சியைச் செய்தது.

நரியின் ஆட்சியில் அனைத்து விலங்குகளும் துன்பப்பட்டன. ராஜா சிறைப்பிடிக்கப்பட்டதை முயற்குட்டி அறிந்து கவலை கொண்டது. அனைத்து முயற்குட்டிகளையும் அழைத்துக் கொண்டு நிலக்கீழ்த்தடுப்பறை இருந்த இடம் நோக்கிச் சென்றது. முயற்குட்டிகள் குழிகளைத் தோண்டின. சிங்கத்தை மீட்டன. சிங்கம் நரியைக் காட்டை விட்டு விரட்டியது. மீண்டும் நல்லாட்சியினை செய்யத் தொடங்கியது.

**து. தினோஜிகா**
தரம் -08

# விடுகதை

01. சித்திரமும் அல்ல. காவலுக்கு ஆயிரம் வீரர்கள் உண்டு. கோட்டையும் அல்ல அது என்ன?
**தேன் கூடு**
02. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான். ஒருவன் நடப்பான் அவன் யார்?
**கடிகாரம்**
03. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன?
**உப்பு**
04. எப்போதும் மழையில் நனைவான் ஆனால் ஜுரம் வராது. எப்போதும் வெயிலில் காய்வான் ஆனால் எதுவும் ஆகாது. அவன் யார்?
**குடை**
05. தன் மேனி முழுவதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?
**மீன் வலை**
06. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?
**தொலைபேசி**
07. சொன்ன நேரத்துக்குத் தொண்டை கிழியக் கத்துவான். அவன் யார்?
**அலாரம்**
08. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் - நான் யார்?
**அஞ்சல் பெட்டி**



# யார் மனிதாபிமானி?

ஓடும் நகர வாழ்வு
அதில் அரங்கேறும் பல சாவு
தெருவோரப் பிச்சைக்காரன்
நேரமின்றி நகரும் பணக்காரன்
அதே தெருவில்
இறந்து கிடக்கும் காகம்
இரங்கல் பாடும் காகக் கூட்டம்
ஐந்தறிவுக்கு இரக்க குணம்
ஆறறிவுக்கோ தலைக்கனம்
விரைந்தழைத்து உறவுகளோடு
துயர் பகிரும் காகங்கள்
மனிதனை விட மேலோங்கின
கீழிறங்கிய மனிதக்கூட்டம்
விரைகின்றது அவ்விடத்தினை விட்டு...



**B.கம்ஷா**
தரம்-11
யா/விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**



**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 29.01.2022 அன்று வெளியிடப்பட்டது.